தென் இந்தியா க்ஷேத்ரங்கள்

பி. வி. ஜகதீச அய்யர் இயற்றியது.



MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS 41

ஸ்ரீ நடராஜர்.

2

சிதம்பரம்

SOME OPINIONS.

Professor K. Sundararama Aiyar M. A., writes :

M. R. Ry. T, K. Balasubrahmanya Aiyar Avgl, the Managing Director of the Sri Vani Vilas Syndicate Srirangam, who is already reputed as the learned editor and publisher of numerous standard works in Sanskrit and Tamil, and also several modern publications in English, has begun a series of monographs on famous South Indian Shrines, planned, written, and illustrated by the well-known South Indian archaeologist, Mr. P. V. Jagadisa Aiyar. The first part is appropriately devoted to Srirangam, and is sure not only to attract the general reader, but also to serve as a guide-book to the tourist and the pilgrim; and its get-up is most attractive. The early antiquities and mediaeval aspects of holy Srirangam together with the present-day religious life within and around its great shrine are here told in elegant Tamil, and also illustrated in numerous shining picture-photos which capture the human eye and heart. All the Alwars have sung their praises of the glories of Sri Ranganatha, and all their hymns find their place in the publication. The undertaking is evidently a costly one. But, if we are to judge by the first part—the price of which is only 10 annas, exclusive of postage—the purchaser must be congratulated on his luck in securing a most attractive and informing publication. I heartily recommend the entire series to the discriminating patronage of all Tamilians possessing a taste for art and a genuine love of our holy Hindu places of pilgrimage.

———

"The Hindu" writes :—

This is the first of a series of sketches of the places of pilgrimage in South India which the author of the English version has set out to write in Tamil. This volume gives a fairly full description of the ancient temple of Sri Ranganatha. The very antiquity of the temple and the idols, which baffle all attempts to fix any defini[te] date as to their origin has led to their being associated with some incidents of th[e] Puranic age. Thus, we are told how the image of Sri Ranganatha was given [to] Vibhishana by Sri Rama, but how, when the former came to this place, the id[ol] rooted itself, much to the disappointment of Vibhishana, to the place with a view [of] becoming the "guardian angel" of the Chola Kings. The presence of the oth[er] deities are explained in a similar way. A description is given of the town of Sri-rangam and extensive quotations from the songs of Alwars about Sri Ranganadha a[re] appended. The book is made attractive by the inclusion of illustrations of some [of] the best views of the temple.

———



ஸ்ரீ நடராஜர்.

சிதம்பரம்.

ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் பிரதி வருஷமும் செல்லும் தென் இந்தியாவின் மஹா க்ஷேத்திரங்களுள் ஒன்றாகிய இந்தப் புண்ணிய பூமி வடக்கில் சுவேத நதியென ஸம்ஸ்கிருதத்தில் புகழப்பெற்ற வெள்ளாற்றை எல்லையாகவும், கிழக்கில் மஹோததியை (வங்காளாக்குடாக்கடலை) எல்லையாகவும், தெற்கில் காவிரிமா நதியின் கிளை நதியாகிய கொள்ளிடத்தை எல்லையாகவும், நான்காவது திக்காகிய மேற்கில் வியவஸாய ஸாதகமான வீராணத்தேரியை எல்லையாகவும் பெற்றிருக்கிறது. இந்த க்ஷேத்திரம் தென் இந்தியா இருப்புப் பாதையில் சென்னப்பட்டணத்திலிருந்து 154 மைல் தெற்கே உள்ளது.



சிதம்பரம் கோவிலின் கோப

"கோயில்" என்று சொல்லப்படும் சிதம்பர க்ஷேத்திரம் தில்லைவனம், பெரும்பற்றப்புலியூர், புண்டரீகபுரம், வியாக்ரபுரம், தஹராகாசம், பூலோக கைலாஸம் எனப் பல பெயரால் வழங்கப்படுகிறது.

கோவிலுக்குள் சித் சபையின் கிழக்கில் பரமானந்த கூபம் எனப்படும் கிணறும், வடக்கே சிவகங்கைக் குளமும், கோயிலின் வெளியில் தெற்கே புலி மடுவும், திருப்புலீச்சுரத்துக்கு எதிரே வியாக்ரபாத தீர்த்தமெனப்படும் இளமைநாயனார் குளமும், அனந்தேச்வரத்திற்கு முன்னே அனந்த தீர்த்தமும், இதற்கு மேற்கே நாகசேரியும், திருக்களாஞ்சேரியில் பிரம்ம தீர்த்தமும், பிரம்மசாமுண்டிசோவிலின் முன்னே சிவப்பிரியையும், இதற்குத் தென் கிழக்கே திருப்பாற் கடலும், கீழ் சமுத்திரத்தில் பாசமறுத்த துறையில் குய்ய தீர்த்தமும் ஆகிய பத்து முக்கிய தீர்த்தங்களையுடையது.

இவ்விடத்தில் தான் மாணிக்கவாசக சுவாமிகள் புத்தரை வாதில் வென்றதும், ஒரு ஊமைப் பெண்ணைப் பேச வைத்ததும், "திருச்சிற்றம்பலக் கோவை" பாடிச் சைவத்தை



ங்களும் சிவகங்கை குளமும்.

நிலை நிறுத்திப் பெருமை பெற்றதும்! உபமந்யு முனிவருக்குப் பாற்கடல் அளித்ததும் இங்கேதான். அபயகுலசேகர சோழராஜன் காலத்தில் நம்பியாண்டார் நம்பியால் தேவாரப்பதிகங்கள் கண்டெடுக்கப்பட்டதும் இவ்விடத்தில்தான். இந்த ஸ்தானம் தற்காலம் மேலண்டைப் பிராகாரத்தின் வடமேற்கு திக்கிலிருக்கிறது. அவ்வறையை அக்காலத்தில் காட்டிய விநாயகர் மேல் கோபுர வாசலைப் பார்த்த மாதிரி இருந்துவருகிறார். இவருக்குத் "திருமறைகாட்டிப்பிள்ளையார்" என்று பெயர்.

பிந்தி அநபாய சோழராஜன் காலத்தில் சேக்கிழார் நாயனார் "பெரியபுராணம்" பாடியது இக்கோயிலினுள்ளிருக்கும் ஆயிரக்கால் மண்டபத்தில். கோயிலின் வெளியில் தெற்கிலிருக்கும் ஞானப்ரகாசக்குளக்கரையில் சேக்கிழார் பிம்பமடங்கிய ஒருசிறுகோயில் இருக்கிறது.

சேரமான் பெருமாணாயனார் "போன் வண்ணத் தந்தாதி" பாடி ஸ்ரீ நடராஜரை அந்தரங்க பூஜைசெய்து பகவானது சிலம்பொலி கேட்டது இவ்விடத்தில் தான்!

பதஞ்ஜலி மஹரிஷியும் வ்யாக்ரபாத மஹரிஷியும்.

திருக்கோவலூரிலிருந்த மெய்ப்பொருளையனார் தாம் உயிர் துறக்கும் காலத்தில் ஸ்ரீ நடராஜரை தரிசிக்க விரும்ப அந்தப்படி நடராஜர் காக்ஷிகொடுத்து அனுக்ரஹித்தார்.

உமாபதிசிவாசாரியார் தாம் ஜாதியில் உயர்ந்தவரென்ற பெருமை பாராட்டாமல் பெற்றான் சாம்பனுக்கும் முள்ளிச் செடிக்கும் முக்தியளித்த ஸ்தலம் கோயிலுக்கு தென் கிழக்கே ரயில் ஸ்டேஷனுக்கு எதிரிலுள்ள "கொற்றவன்குடி" என்னுமிடத்தில் இப்



சிதம்பரம் கோவிலின் காக்ஷி.

பொழுதும் உமாபதிசிவாசாரியார் பிம்பமடங்கிய ஒரு சிறு கோயில் இருக்கிறது. இரண்யவர்மன் காலமுதல் சோழ ராஜாக்கள் இவ்விடம் தங்கியிருந்த அரண்மனை முதலிய கட்டிடங்கள் இந்தக் கொற்றவன்குடியில்தான் இருந்திருக்கவேணுமென்று ஊஹிக்கப்படுகிறது. சமீப காலத்தில் கூட இக்குடியிருப்பிலுள்ள குளத்தங்கரையில் சில ஸ்தலங்களை வெட்டுகையில் சிலா பிம்பங்கள் முதலியன கிடைத்தனவாம்.

நடராஜ மூர்த்தி வருஷத்தில் ஆறு தடவைதான் சித் சபையாகிய கர்ப்பக்கிருஹத்திலிருந்து வெளியில் கொண்டு வரப்பட்டு அபிஷேகம் செய்து வைக்கப்படுவார். அவையாவன: சித்திரை திருவோணம், ஆனி உத்திரம், ஆவணி பூர்வ சதுர்த்தசி, புரட்டாசி பூர்வ சதுர்த்தசி, மார்கழி திருவாதிரை, மாசி பூர்வ சதுர்த்தசி. இந்த ஆறு தினங்களிலும் கூட ஆனி, மார்கழி இரண்டுந்தான் விசேஷ உத்ஸவமாகக்கொண்டாடப்படுகிறது. இந்தஇரண்டு தினங்களில் மட்டும் ஆயிரக்கால் மண்டபத்தில் அபிஷேகம் செய்யப்படுவார். மற்றைய நான்கு தினங்களிலும் சித்சபையின் முன்னிலுள்ள கனக சபையிலேயே அபிஷேகம் நடத்தப்படும். “ஆனித் திருமஞ்சனம்”, “மார்கழித் திருவாதிரை” இந்த இரண்டிலும் பிந்தியதாகிய மார்கழி திருவாதிரை விசேஷதினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தில்தான் சேந்தனருக்கு பகவான் களி சாப்பிட்டு தரிசனம் கொடுத்தபடியால் அன்றைய தினம் ஸ்திரீகள் விசேஷமாய் களி நிவேதனம் செய்து நடராஜரைதரிசனம் செய்கிறார்கள். மேலே குறிப்பிட்ட ஆறு அபிஷேகங்கள் தவிர அந்தந்த கோயிலில் பிரம்மோத்ஸவத்தின் கடைசி தினமாகிய “தீர்த்தவாரி” யன்றும் நடராஜருக்கு அபிஷேகம் உத்ஸவம் நடத்த வேண்டுமென்று ஆகமங்கள் விளக்குகின்றன.



ஆருத்ரா தர்சனம்.



கனகஸபை (நந்திகேச்வரர் மண்டபம்.)

இந்த ஸ்தலத்திலுள்ள கோயில் தாண்டவ மூர்த்தியாகிய நடராஜமூர்த்தி அபார க்திக்குப் பெயர் பெற்றது. இந்த மூர்த்திக்கு வலதுபக்கத்தில் சிதம்பர "ரஹஸ்யம்" டங்கியுளது. அவ்விடத்தில் ஸுவர்ண வில்வதளங்கள் தொங்கவிடப்பட்டுத் திரையால் ப்பொழுதும் ரஹஸ்யமெனப்படும் ஸ்தலம் மறைக்கப்பட்டிருக்கும். பூஜாகாலங்களில் பூஜை செய்யும் தீக்ஷிதர்கள் அத்திரையை மூன்றுதரம் தூக்கி ஜனங்களுக்கு தரிசனம் செய்துவைப்பார்கள்.

சிவனுடைய பல முகூர்த்தங்களில் நடராஜர் முக்யமானதினால் தான் மற்றைய கோவில்களிலும் அதைக் கொண்டாடுகிறார்கள். இதர கோயில்களிலுள்ள கலைகள் அர்த் யாமம் ஆனதும் அடங்கிச் சிதம்பரத்தில் ஐக்கியமாவதாகவும் காலையில் அவ்வவ்விடத் திற்குத் திருப்புவதாகவும் ஐதிஹ்யம். ஆத்மகலைகள் ஜாக்ரதகாலத்தில் தன்னிடதிலி ருந்து கண் முதலான த்வாரங்கள் வாயிலாக வெளியே சென்று, ஸுஷுப்திதசையில் (நன் றாய்த் தூங்கும் ஸமயத்தில்) ஆத்மாவானிடத்தில் (தன்னிடத்தில்) ஒடுங்குவதுபோல இச் சிதம்பர க்ஷேத்திரத்தில் ரஹஸ்ய ரூபமாகிய ஆத்மா, காலையில் வெளியே சென்று, பிறகு அர்த்தஜாமத்தில் தன்னிடத்திலேயே லயிக்கிறது.

நடராஜ விக்கிரஹமும் அம்பாள் சிவகாமஸுந்தரியினது விக்கிரஹமும் ரஹஸ்ய மும் அடங்கியுள்ள கர்ப்பக்கிரஹத்தினுட் செல்ல வெள்ளித் தகடுகளால் ஆகிய ஐந்து படிகள் உண்டு. இந்தப்படிகளுக்கு "பஞ்சாக்ஷரப்படிகள்" எனப் பெயர். ஐந்தெழுத்தால் ஆகிய மஹா மந்திரம் காரணம்பற்றி ஏற்பட்ட படிகள். பஞ்சாக்ஷர ஜபஸித்தி இல்லாமல் நடராஜ மூர்த்தியை அடைய முடியாதென்பதை இந்தப் படிகள் ஒருவாறு குறிக்கின்றன.



சிதம்பரம் ஆலயம் மேற்கு கோபுரமும் தெற்கு கோபுரமும் நடராஜரின் சித்ஸபை கனகஸபை தேவஸபை முதலியவைகளும் கோவிந்தராஜப்பெருமாள் கோவிலும் அடங்கிய காக்ஷி.

புராண வரலாறு.

நடராஜமூர்த்தி ஏற்பட்டவிதம்.

முன்னொரு காலத்தில் கைலாஸத்திலிருக்கும் பரமேசுவரனைப் பார்ப்பதற்காக ஸ்ரீ மகாவிஷ்ணு அங்கு சென்ற ஸமயத்தில் ஈசுவரனானவர் தமது ஸபையின் நடுவிலிருந்து பரபரப்புடன் ஸ்ரீ மகாவிஷ்ணுவை ஆதரவாய் வரவேற்று உபசரித்து தமது ஆஸனத்திலேயே அவரையும் உட்காரவைத்துக்கொண்டு அவரோடு ரஹஸ்யமாக ஸல்லாபம் செய்துகொண்டிருந்தார். இதைக்கண்டு ஸபையோரெல்லோரும் இன்னதென்று தெரியாமல் வியந்துகொண்டிருக்கும் தருவாயில் ஜகத்பிதாக்களான இவ்விருவர்களும் திடீரென்று ஸபையை கலைத்துவிட்டு ஒருவரோடொருவர் கைகோர்த்தபடியே பேசிக்கொண்டு கைலாஸத்தைவிட்டு கீழே இறங்கிவந்தார்கள். வரும்பொழுது ஈசுவரனானவர் தேவதாரு வனத்தில் அநேக மஹரிஷிகள் ரொம்பவும் கர்மடர்களாயிருந்துகொண்டு தபஸ் செய்துகொண்டு ஸாதுக்களாயிருக்கிறார்கள்; ஆனால் கர்மாவே எல்லாவற்றிற்கும் மேம்பட்டது, அதுவே ஸரிவர நடத்தப்பட்டால் எல்லா பலன்களையும் கொடுத்துவிடும்; அதுகளைத் தவிர பலத்தைக் கொடுப்பதற்கென்று ஈசுவரனொருவன் கிடையாது என்று அநீசுவரவாதிகளாய் அதனால் அவர்கள் மிகவும் மமதையுடனிருக்கிறார்களாதலால் அவர்களுக்கு புத்தி வரும்படியாகச் செய்ய வேண்டுமென்றும் அதற்காகத் தாம் மிகவும் ஸௌந்தரமான ஒரு புருஷவேஷம் தரித்துக்



முக்குறுணி விநாயகர்கோவில் (நேர் காக்ஷி).

வியாக்ரபாதரின்கதை.

மத்யந்தினரென்ற ஒருமஹர்ஷிக்கு மிகவும் ஸத்புத்திரனாய் ஒரு குமாரர் பிறந்தார்.
நக்கு வயது வந்ததும் உபநயனம் முதலான ஸம்ஸ்காரங்களை செய்வித்து நல்ல குரு
ாவது அல்லது ஆதிகுருமூர்த்தியான ஸாக்ஷாதீசுவரனையாவது அடைந்து அவர்
ஸந்தோஷிக்கும்படி ஸேவை செய்துவரும்படியும் அதனால் எல்லாவித சிரேயஸ்ஸை
... யலாமென்றும் பலவிதமான புத்திவாதங்கள் சொல்லி எல்லா க்ஷேத்ரங்களுக்
மம்பட்டதான தில்லவனத்துக்குப் போகும்படியனுப்பினர். அக்குமாரரும் வெ
அலைந்து திரிந்து கடைசியில் தில்லவனம் சேர்ந்து அங்குள்ள சிவகங்கை குளத்தி
ம் செய்து அருகாமையிலிருக்த ஸ்ரீமூலநாதரை தரிசனம் செய்து அவரைப்பூஜி
னக்கு முக்கியகார்யமென்று கருதி இராப்பகலாக அதேகார்யமாக இருந்தார்.
ம் பூஜைக்காக பற்பலகாடுகளிலும் முள்ளுகளிலும் கல்லுகளிலும் போய் பூச
த்திரங்களையும் புஷ்பங்களையும் அரிக்க ஆரம்பிப்பதற்கு முன்னதாக இருட்டாயிருக்
பொழுதே அவைகளை கொணர்ந்து கொண்டுவர வேண்டியிருப்பதால் தமக்கு மரங்க
றும்பொழுது வழுக்காதிருக்கவேண்டிய நிமித்தம் கைகளும் கால்க... புலியைப்
லிமையான நகப்பற்றுள்ளவைகளாயிருக்கவேண்டுமென்றும். ... கட்டு
ரில் புஷ்பங்களை தோஷங்களில்லாததாக கவனித்து ப...
கள் மிகுந்த பிரகாசத்துடன் கூடினவையாக இ...
தித்தார். ஸ்ரீ மூலநாதரும் ...



ராஜஸபை என்று சொல்லப்படும் ஆயிரக்கால் மண்டபம்.

திருப்பாற்கடல்.

இவ்வாறு வியாக்ரபாதர் ஸ்ரீமூலநாதரை வெகுபக்தியுடன் பூஜைசெய்து வருந்
தில் ஒருநாள் இவர் தகப்பனாகிய மத்தியந்தின மஹர்ஷியானவர் அங்கு வந்து
குமாரரின் சரிதையைப்பார்த்து மிகவும் ஸந்தோஷித்து, அவருக்கு கிருஹஸ்தாசிரம
பெருமையை யெடுத்துக்கூறி, அவரைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்ட அவரு
தற்கிணங்க, உடனே வஸிஷ்டமஹர்ஷியினுடைய தங்கையை வியாக்ரபாதருக்குக்
ணம் செய்து வைத்தார். பிறகு வியாக்ரபாதர் தர்மபத்தினியுடன் ஈசுவரபூஜை செய்
கையில் அவருக்கு ஒரு புத்திரப்பேறு உண்டாயிற்று. உடனே வஸிஷ்டமஹர்ஷி
து மருமகனுக்கு உபமந்யுவென்று நாமகரணம் செய்வித்துக் குழந்தையை தய்
ாசிரமத்திற்கு கூட்டிக்கொண்டு போய்விட்டார். அங்கு காமதேனுவின் பா
துக்கொண்டு அக்குழந்தையும் மிகவும் ஸௌக்யமாய் வளர்ந்தது. வயதான பிற
ன வியாக்ரபாதர் உபமன்யுவை வஸிஷ்டாசிரமத்திலிருந்து தமதாசிரமத்திற்குக் கூட்
வ அந்த உபமன்யுவானவர் தமது மாமாகிருஹத்தில் சாப்பிட்ட காமதேனுவின்
ன்பழக்க ... இங்கும் அந்தமாதிரியான பால் வேண்டுமென்று பிடிவாதம் செய்ய
ந்ர ... ன்னசெய்வதென்று வியாகுலத்துடன் ஸ்ரீமூலநாதரிடம் போ
...டனே ஈசுவரனும் தமது பக்தனுடைய பிரார்த்தனைக்கிண
...ங்கு தருவித்து அதை உபமந்யுவுக்கு கொடுக்கச்சொ
... ஈசுவரனைக்குறித்து தபஸ்செய்த

முக்குருணிவிநாயகர் கோவில் (பக்கத்து காக்ஷி).

இதைக்கண்ட மஹர்ஷிகளுக்கு ஒன்றும் தோன்றாமல் தாங்கள்செய்த ஹோமகுண்ட
முள்ள அக்னியை வாரியெடுத்து ஈசுவரனை நோக்கி அவர் முகத்திலெறிந்தார்க
அதை ஈசுவரன் தமது கையிலேந்திக்கொண்டு இந்த ரிஷிகளுக்கு இன்னும் ஸரிய
புத்தி வாராமையால் சினங்கொண்டு உக்ரமான தாண்டவத்தை நடனம் செய்
பித்தனர். அதைக் கண்ணுேக்க சக்தியற்றவர்களாய் மகர்ஷிகளெல்லாம் மூர்ச்
தரையில் விழுந்தனர். அந்த அத்புதமான தாண்டவத்தின் வேகத்தால் பூமாே
நடுங்கினள். மோஹினிரூபமாய் எதிரில் நின்றுகொண்டிருந்த மஹாவிஷ்ணுவும்
என்னமாக முடியுமோ வென்று சித்தம் கலங்கவாரம்பித்தனர். அச்சமயம் ஸா
தாண்டவமூர்த்தியாகிய பரமேசுவரன் அம்பாளை மனதில் நினைக்கவும் பரதேவ
எல்லா கணங்களுடனும் உடனே அங்குவந்து தாண்டவமாடிக் கொண்டிருக்கும்
னுக்குப்பக்கத்தில் அமர்ந்தனள். உடனே தாண்டவத்தின் வேகத்தையும் சற்று
படுத்தி ஸௌம்யமாய், மஹாவிஷ்ணுவையும் நிஜரூபத்தை யெடுத்துக்கொள்ளச்
ஈசுவரனுனவர் மந்தஹாஸத்துடன் தேவதாருவனத்து மஹர்ஷிகளை மூர்ச்சை
தெழுந்திருக்கச்செய்து அவர்களையும் கருணையுடன் அனுக்ரஹித்து அவர்களுக்கு தி
மான ஞானக்கண்களை கொடுத்து தமது ஆனந்தத் தாண்டவ மஹிமையை தர்சிக்கு
காக்ஷிகொடுத்தார். இவ்வாறு அவர்களுடைய அஹங்காரமும் அக்ஞானமும் வி
பிறகு தாண்டவரூபத்திலேயே தம்மை ஸதா பூஜிக்கும்படி அவர்களுக்கு ஆக்ஞை செ
விட்டு எல்லாருடனும் அந்தர்த்தானமாயினர். இதுதான் நடராஜ மூர்த்தி எற்பட்ட

மதின்பிராகாரத்திலுள்ள நந்திகேச்வரர் மண்டபம்.

ஹாஸத்துடனிருந்த ஈசுவரன் அதை ஒரே குத்தாய் குத்திக் கொன்று அந்தக்ஷணத்தி
ய அதன் தோலை உறித்து தன்னிடுப்பில் வஸ்திரமாகக் கட்டிக்கொண்டுவிட்டார்.
தக்கண்ட மஹர்ஷிகள் ஆச்சரியப்பட்டு முன்னிலும் அதிகமான வேகத்துடன் விஷத்திர
்களால் ஹோமம் செய்து மிகவும் கோரமான விஷத்தைக் கக்கிக்கொண்டுவரும் ஒரு
பத்தை அந்த ஹோமகுண்டத்திலிருந்து உண்டாக்கி அதை ஈசுவரனைக் குறித்து ஏவி
ஹாலாஹல விஷத்தையே சாப்பிட்ட ஈசுவரனுக்கு இது ஒரு பெரிதா? அவர்
ர்ப்பத்தைப் பிடித்துத் தமது கையில் ஒரு கங்கணமாகக் கட்டிவிட்டார். இதைக்
மஹர்ஷிகள் தங்களது ஸாமர்த்தியத்தையெல்லாம் உபயோகப்படுத்தி மிகவும
பமாயுள்ள ஒரு பூதத்தை அந்த குண்டத்திலிருந்து உண்டாக்கி அதை ஈசுவரனி
பிரயோகித்தார்கள். அது மிக அட்டஹாஸம் செய்துகொண்டு வரும்ஸமயத்தில்
வம் தமது சக்தியை இவர்கள் இன்னுமறியவில்லையேயென்று தாமும் அட்டஹா
ன் கிளம்பி அந்த பூதத்தை ஒரே மிதியாய் மிதித்து தமது பாதத்துக்கு பீடமாய்
க்கொண்டு விட்டார். இதற்குப் பின்னும் புத்திவருத அந்த மஹர்ஷிகள் மறுபடி
களுக்குத் தெரிந்த மந்திரங்களையெல்லாம பிரயோகம் செய்து அவைகளையே ஈசுவா
எவினர்கள். இந்த மந்திரங்களெல்லாம் தங்களுக்கு உத்பத்தி ஸ்தானமாயிருக்கும்
னிடம் என்ன செய்யக்கூடும்? அவரிடம் செல்லவும் அவர் தமது இடதுகாலை
தபாதமாகத் தூக்கினதும் அவைகளெல்லாம் அப்பாதத்தை சுற்றிலும் பாதஸரமாக
ந்துகொண்டு அவரை சரணமடைந்துவிட்டன. உடனே ஈசுவரனும் தாண்டவத்
ஆரம்பிக்கவே கால்களிலுள்ள சிலம்புகளிலிருந்து வேதகோஷங்கள் உண்டாயின.



சிதம்பரம் கோவில் வடக்கு கோபுரவாசலும் சிவகங்கை குளமும் அதற்கு இரு பக்கமுமுள்ள காக்ஷிகளும். குளத்திற்கு மேல்பக்கத்தில் சிவகாமசுந்தரி அம்மன் கோவில் தெரிகிறது.

ள்ளப்போவதாகவும் தமக்கு உதவியாக ஸ்ரீ மகாவிஷ்ணுவும் மிகவும் ரூபலாவண்ய ள்ள ஒரு ஸ்திரீவேஷம் தரித்துக்கொண்டு தன்னோடு வரவேண்டுமென்றும் மகாவிஷ்ணு டம் சொன்னார். அவரும் அதற்கிணங்கி ஈசுவரன் முன்னதாகச் சென்றால் தாம் மோ கிரூபம் தரித்துக்கொண்டு பின்னாடி வருவதாகக் கூறினார். உடனே ஈசுவரனுனவ கத்தில் யாருமதுவரையில் கண்டறியாத அவ்வளவு அழகிய வடிவத்தை எடுத்துக் ாண்டு கால்களில் சிலம்புத்தண்டைகள் ஒலிக்க ஜில்ஜில் என்று நடந்துகொண்டு கையில் டுக்கொன்றை யேந்திக்கொண்டு தேவதாருவனம் சென்று அங்குள்ள ஒவ்வொரு ரிஷிக ின் ஆசிரமத்தின் வாசலிலும் நின்று பிக்ஷை கேட்டார். உள்ளிருந்த ரிஷிபத்னிகள் ிக்ஷை கொண்டுவரும்பொழுது இவருடைய ரூபத்தைப் பார்த்து மயங்கி ஒன்றும் தோன் றாதவர்களாய் அவர் பின்பாகவே சென்றார்கள். இவ்வாறு ஈசுவரனுனவர் வீடு வீடாய் பிக்ஷாடனஞ் செய்து ரிஷிபத்னிகளையெல்லாம் மயக்கித் தன் பின்னோடு கூட்டிச் செல்கை யில் ஆச்ரமங்களுக்குள்ளிருந்த மஹரிஷிகள் தங்கள் அக்னிஹோத்ர கிருஹங்களிலிருந்து பத்னிகளை கூப்பிட்டும் ஒருவரையும் காணமையால் எழுந்திருந்து வெளியில் வந்து என்ன ாரணமென்று பார்க்கையில் ஈசுவரனைப் பின்தொடர்ந்து எல்லா ஸ்திரீகளும் போவதைக் கண்டு கோபித்தார்கள். அத்தருணத்தில் ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் ஜகத்தை மோஹிக்கச் செய்யக்கூடிய மோஹினி அவதாரத்தை எடுத்துக்கொண்டு மிகவும் உல்லாஸமாய் ஹம்ஸ தியுடன் நடந்துவருவதைக்கண்டு எல்லா மஹர்ஷிகளும் இதென்ன ஆச்சர்யம் இப்படி



சிவகாமஸுந்தரி அம்மன் கோவில்

யும் ஒரு ஸ்திரீவ்யக்தி உண்டாவென்று மயங்கி ஒன்றும் தோன்றாமல் தங்கள் கர்மாக்
யெல்லாம் மறந்து அந்த மோஹினி அவதாரத்துடன் கூடத் தொடர்ந்து சென்றார்க
இவ்வாறு நேர்ந்ததைக்கண்டு சில கிழட்டு மஹர்ஷிகள், இதென்ன இப்படி விபரீதம் ஏ
பட்டுவிட்டது ; இந்த பிக்ஷாடனம் செய்பவன் நமது தர்மபத்னிகளின் மனதையெல்லா
கொள்ளை கொண்டுவிட்டான் ; அவனுடைய பத்னிபோல் தோன்றுகிற இந்த மோஹி
யோ நமக்குள் யௌவனஸ்தர்களாயுள்ள ரிஷிகளின் மனதைக் கொள்ளை கொண்டுவிட
டாள்; இதை நாம் பெரியோர்களாயிருந்து சும்மா பார்த்திருந்தால் ரொம்பவும் கெடுதலா
முடியும்; ஆதலால் இந்த பிக்ஷாடனம் செய்பவனுக்கு எவ்விதத்தாலும் கெடுதல் செய்ய
வேண்டும் ; அவன் யாராயிருந்தாலும்ஸரி ; அவனை ஸம்ஹரிப்பதற்குத் தக்கப்படி ஆபிசா
ஹோமம் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு பெரிய அக்னிகுண்டத்தை ஏற
படுத்தி அதில் அக்னியைவளர்த்து கொடூரமான ஆபிசாரஹோமங்களை செய்யவாரம்பித்
தார்கள். இதைக் கண்டதும் ஈசுவரனும் மகாவிஷ்ணுவும் புன்சிரிப்பு செய்துகொண்டு
வேடிக்கை பார்ப்பவர்கள்போல் எதிரில் வந்து நின்றார்கள். பயமின்றி எதிரில் நிற்கும்
பிக்ஷாடனரைக் கண்டதும் கர்மாவினாலேயே ஸமஸ்த கார்யங்களையும் முடிக்கலாமென்று
கர்வங்கொண்டிருக்கும் அந்த மஹர்ஷிகள் இன்னும் கோபபரவசர்களாய் வெகு உக்ரமாக
ஹோமம் செய்தார்கள். அதன் பலனாய் அந்த ஹோமகுண்டத்திலிருந்து அந்த ரிஷிக
ளின் அஹங்காரமே உருவெடுத்து வந்ததோவென்று சொல்லும்படி ஒரு பயங்கரமான புலி
ஒன்று நெருப்புத்தணல்போன்ற கண்களுடன் கிளம்பிற்று. அதை அந்த மஹர்ஷிகள்
உடனே ஈசுவரனை நோக்கி ஏவினார்கள். அது பயங்கரமாக ஸமீபத்தில் வரும்வரையிச்



ஆயிரக்கால் மண்டபம் எறும் வழி. இந்த மண்டபத்தில் தான் பதஞ்சலி மஹர்ஷி ஒரு திரைக்குள்ளிருந்துகொண்டு தமது நிஜரூபமாகிய ஆதிசேஷனுடைய ரூபத்தை யெடுத்துக்கொண்டு தமது ஆயிரம் சிஷ்யர்களுக்கும் ஒரே ஸமயத்தில் தமது ஆயிரம் முகங்களினாலும் வியாகரண மஹாபாஷ்யம் சொல்லிக் கொடுத்ததாக சொல்லப்படுகிறது.

ஞானக்கண்ணுக்கு ஏகதேசம் தோன்றிற்று. உடனே தம்மை தேவதாருவனத்துக்கு அனுப்பாமல் தமது பிதா தில்வவனத்துக் கனுப்பினரேயென்று சற்று கலங்கினாராயினும் தமது பிதா தமக்கு எல்லா சிரேயஸ்ஸும் இங்கு கிடைக்குமென்று சொன்னவாக்யம் பொய்யாகாதென்று அந்த க்ஷணத்திலேயே நிச்சயப்படுத்திக்கொண்டு மறுபடி சஞ்சலமில்லாத மனதுடன் ஏகாக்ர சித்தராய் தபஸ்ஸிலமர்ந்தார். அப்பொழுது தில்வவனத்திலேயே ஆனந்தத்தாண்டவதர்சனம் அவருக்கு கிடைக்குமென்றும், அந்த தர்சனத்திற்காகவே இன்னொருமஹானும் அவருடன் வந்துசேருவாரென்றும் ஒரு ஸ்புரணம் உண்டாயிற்று. அதனால் ஸந்தோஷமடைந்தவராய் காலத்தை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தார்.

பதஞ்சலியின் கதை.

முன்தேவதாருவனத்தில் தாம் கண்டகாக்ஷியை ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் ஆதிசேஷனிடம் பகரவே அவரும் அந்த அத்புதக்காக்ஷியைக் காண்பதற்குத் தனக்கு மிகுந்த அவா விருப்பதாகத்தெறிவிக்க ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர், "அப்படியானால் உம்முடைய புத்திரனை நமக்குப்படுக்கையாக அமர்த்திவிட்டு நீர்போய் ஈசுவரனைக் குறித்து தபஸ்



சிவகங்கை குளம் இன்னொரு காக்ஷி.

செய்யும்'' என்று சொல்லி அவரை அனுப்பினர். அவ்வாறே அவரும் தபஸ் செய்கையில் ஈசுவரன் கருணைகூர்ந்து அவருக்கு முன்வந்து என்ன வேண்டுமென்று கேட்டார். அதற்கவர் தமது அவாவைத்தெறிவிக்கவே ஈசுவரனும் மகிழ்ந்து அவரை பதஞ்சலிரூபத்தையெடுத்துக்கொண்டு தில்வவனத்திற்குச்சென்று அங்கு எற்கனவே காத்திருக்கும் வியாக்ரபாத மஹர்ஷியுடன் காத்திருந்தால் அவ்விடத்தில் தை மாதத்தில் குருவாரம் புஷ்யநக்ஷத்திரத்தில் விருஷபலக்னத்தில் தாம் ஆநந்தத்தாண்டவத்தின் காக்ஷியளிப்பதாக அருள் புரிந்தார். உடனே மிகுந்தஸந்தோஷத்துடன் ஆதிசேஷனும் தமது ரூபத்தை மறைத்து பதஞ்சலியாக மாறி தில்வவனம் சென்று அங்கு வியாக்ரபாதரைக்கண்டு இருவருமாக சங்கதிகளை ஒருவரோடொருவர் சொல்லிமகிழ்ந்து ஈசுவரனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

ஆநந்தத்தாண்டவதர்சனம்.

இவ்வாறு இவர்களிருக்கையில், ஆநந்தத்தாண்டவ தர்சனத்தில் மிகுந்த இச்சையுள்ள த்ரிஸஹஸ்ர (3000) முனிவர்களும் இவர்களிடம்வந்து தங்களது அபிலாஷையைத் தெரிவித்துக்கொண்டதும் அவர்களையும் அங்கேதானே குறிப்பிட்டகாலத்தை எதிர் பார்த்து காத்துக்கொண்டிருக்கச் சொன்னார்கள். பிறகு ஈசுவரனால் குறிக்கப்பட்டதினம் உதயமாச்சுது. 'இன்றையதினம் அபாரகருணாநிதியாகிய ஆண்டவன் வந்து நர்த்தனஞ் செய்வார். நாமெல்லோரும் கண்குளிரப் பார்த்து அளவிலடங்காத ஆனந்தத்தையடையலாம்' என்று எல்லோரும் கொந்தளித்துக் கொண்டிருந்தார்கள். ஸூர்யபகவானும்



நிருத்தஸபை (இன்னொரு காக்ஷி). இவ்விடத்தில்தான் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியிருக்கிறது.

கலை அளிப்பதாயும் ஸகலமான தேவர்களுக்குக்கூட துர்லபமாயும் மோக்ஷத்தைக் கொடுப்பதாயுமுள்ள ஆனந்தத்தாண்டவ தரிசனத்தால் எல்லோருஞ் ஸுகிகளாகவும் பாபத்தை விலக்கினவர்களாகவும் பிறப்பைப் பயனுள்ளதாகச்செய்தவர்களாகவும் முக்தர்களாகவும் ஆகவேண்டுமென்று திருவுளத்தெண்ணிக் கிடைப்பதற்கரிய ஆனந்தத்தாண்டவத்தை எல்லோரும் பார்க்கும்படி நடித்தருளினர்.

இந்த அத்புதமான நர்த்தனம் முடிந்ததும் ஸ்ரீநடராஜரானவர் லோகத்தை உஜ்ஜீவிக்க செய்யும் பொருட்டு தமது கையிலிருந்த உடுக்கை பதிநான்குதரம் அடித்தார். அதிலிருந்து பதிநான்கு ஸூத்ரங்கள் மாஹேசுவர ஸூத்ரங்கள் என்று சொல்லப்பட்டவைகள் உண்டாயின. இதிலிருந்துதான் வியாகரணசாஸ்திரம் முழுமையுமுண்டாச்சுது. இதையேதான் நந்திகேசுவரரும் அடியில் கண்டசுலோகத்தால் சொல்லுகிறார்.

नृत्तावसाने नटराजराजः ननाद ढक्कां नवपञ्चवारम् ।
उद्धर्तुकामः सनकादिसिद्धानेतद्विमर्शे शिवसूत्रजालम् ॥

சிதம்பரம்.

சித் என்றால் ஞானம், அம்பரம் என்றால் ஆகாசம்; சிதம்பரம் என்றால் ஞானாகாசம் என்று அர்த்தம். வெளிரூபமாகிய ஜடஆகாசத்தை விலக்கவேண்டி சித் என்ற விசேஷணம். ஆகாசம் என்றால் தன்னையும் மற்றதையும் பிரகாசிக்கச்செய்யும் பேரொளி. அப்பேரொ

சித்ஸபையும் கனகஸபையும், இவைகளைச் சுற்றியுள்ள முதல் பிராகாரமும். சித்ஸபைக்கு பக்கத்தில் சண்டிகேச்வரர் கோயிலும் கனகஸபைக்கு பக்கத்தில் கல்யாண மண்டபமும் காண்கின்றன.

ளியே ஸ்ரீமந்நடராஜமூர்த்தியாதலால்தான் அவருக்கு சிதம்பரேசுவரர் என்று பெயர். இந்த சிதம்பரமானது ஆகாசரூபமாயுள்ளதால்தான் ஒருவருடையவும் சர்மசக்ஷுஸ்ஸுக்குப் புலப்படுகிறதில்லை. ஆகாசம்தான் முதன் முதலில் பிரம்மத்தினிடத்திலிருந்து வெளித்தோற்றத்துக்கு உண்டானதாக तस्माद्वा एतस्मादात्मन आकाशः संभूतः என்கிற தைத்திரீய உபநிஷத் முதலான வேதவாக்யங்களால் சொல்லப்படுகிறது. இதனாலேயே எல்லாக்ஷேத்ரங்களுள்ளும் சிதம்பரக்ஷேத்ரமே முதலில் உண்டாக்கப்பட்டதாக ஸந்தேகமின்றிக்கூறலாம். இந்த சிதம்பரமானது பூமியின் ஹிருதயத்தின் மத்தியிலிருக்கிறதென்று चिदम्बरं तु हृन्मध्ये என்கிற ஸ்ரீஜாபாலதர்சனோபநிஷத்தால் தெரிகிறது. இத்தகைய ஆகாசத்தின் நடுவிலிருக்கிறபடியால்தான் அங்குள்ள பரமாத்மாவான சித்ஸபேசரை சிரமப்பட்டுத்தேடிக் கண்டுபிடித்து அந்த நிரதிசயமான ஆநந்தத்தை அனுபவிக்கவேண்டியது ஸர்வேந்திரியநிக்ரஹம் செய்தமுனிகளுக்கும் மிகவும் அவச்யமென்று உபநிஷத்துக்கள் கதறுகின்றன. சாந்தோக்யோபநிஷத்தில் குருவானவர் சிஷ்யனை நோக்கி சொல்லுகிறார்: अथ यदिदमस्मिन्ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म दहरोऽस्मिन्नन्तराकाशस्तस्मिन्यदन्तस्तदन्वेष्टव्यं तद्वाव विजिज्ञासितव्यमिति । ஸாக்ஷாத்பரப்பிரம்மமே இங்கு இருக்கிறபடியால் இதற்கு பிரம்மபுரம் என்று பெயர். இந்தபிரம்மபுரத்தில் தஹரமான அதாவது அல்பமான அல்லது சிறிதான புண்டரீகம் அதாவது தாமரைபோலொத்த ஹிருதயத்தையே இருப்பிடமாகக்கொண்டு அதற்குள்ளிருக்கும் ஆகாசம் (அதாவது பிரம்மபுரமென்றும், புண்டரீகபுரமென்றும், தஹர



தேவ ஸபை. இதில் உத்ஸவ மூர்த்தி இருக்கிறது.

ராகாசமென்றும் சொல்லப்படும் சிதம்பரம்) அதற்குள்ளிருக்கும் வஸ்து எதுவோ அதைத்தான் தேடவேண்டுமென்றும், நன்றாய்த்தெரிந்துகொள்ளவேண்டுமென்றும் மேற்கூறிய உபநிஷத்தின் தாத்பர்யம். இதன் பேரில் இவ்வள்வு அல்பமாயிருக்கும் தஹரபுண்டரீக ஆகாசத்துக்குள் என்ன விருக்கிறதென்று கேட்கும் சிஷயன் கேள்விக்கு குரு சொல்லுகிறார்:—यावान्वा अयमाकाशस्तावानेषोऽन्तर्हृदय आकाश उभे अस्मिन्द्यावापृथिवी अन्तरेव समाहिते उभावग्निश्च वायुश्च सूर्याचन्द्रमसावुभौ विद्युन्नक्षत्राणि यच्चास्येहास्ति यच्च नास्ति सर्वं तदस्मिन्समाहितमिति ॥ அதாவது இந்தலோகத்தில் உள்ளது இல்லாதது எல்லாம் இந்த தஹராகாசத்தில் அடங்கியுள்ளதென்று குரு சொல்லவும் சிஷ்யனானவன் அப்படியானல் இந்த பிரம்மபுரமானது ஜரை முதலிய அவஸ்தைகளாலாவது த்வம்ஸத்தினலாவது விகாரத்தையோ நாசத்தையோ அடைந்தால் அப்பொழுது உள்ளிருக்கும் வஸ்துவில் என்ன பாக்கியுள்ளது என்று கேட்டான். அதற்கு குரு சொல்லுகிறார். नास्य जरयैतज्जीर्यति न वधेनास्य हन्यत एतत्सत्यं ब्रह्मपुरमस्मिन्कामाः समाहिता एष आत्मापहतपाप्मा विजरो विमृत्युर्विशोको विजिघत्सोऽपिपासः सत्यकामः सत्यसंकल्पो यथा ह्येवेह प्रजा अन्वाविशन्ति यथानुशासनं यं यमन्तमभिकामा भवन्ति यं जनपदं यं क्षेत्रभागं तं तमेवोपजीवन्ति ॥ இந்த பிரம்மபுரமானது ஜரை முதலிய அவஸ்தைகளால் விகாரமடைவதில்லை, ஒருநாளும் நாசமடைவதில்லை, எப்பொழுதும் ஸத்யமாய் உள்ளது. அதற்குள்ளிருக்கும் பரமாத்மாவானவர் பாபாஹிதர், அதாவது தர்மம் அதர்மம் இரண்டுக்கும் மேம்பட்டவர், ஜரையில்லாதவர், நாசமில்லாதவர், சோகமில்லாதவர், பசியில்லாதவர், தாஹமில்லாதவர், ஸத்யகாமர், ஸத்யஸங்கல்பர். இத்தகைய குணங்களோடு கூடியவர் தான் அறியப்படவேண்டியவர்.

இதையேதான் நாராயணோபநிஷத்திலும் दहं विपापं परमेश्मभूतं यत्पुण्डरीकं पुरमध्यसंस्थम् तत्रापि दहं गगनं विशोकस्तस्मिन्यदन्तस्तदुपासितव्यम् । என்று சொல்லியிருக்கிறது.

கைவல்யோபநிஷத்திலும் பரமஹம்ஸபரிவ்ராஜகர்களாயிருக்கும் ஸந்யாஸிகள் த்யானத்தால் தேடிக்கண்டுபிடித்தறியவேண்டிய வஸ்துவைச்சொல்லும்பொழுது विविक्तदेशे च सुखासनस्थः शुचिः समग्रीवशिरः शरीरः । अन्त्याश्रमस्थः सकलेन्द्रियाणि निरुध्य भक्त्या स्वगुरुं प्रणम्य । हृत्पुण्डरीकं विरजं विशुद्धं विचिन्त्य मध्ये विषदं विशोकम् । अचिन्त्यमव्यक्तमनन्तरूपं शिवं प्रशान्तममृतं ब्रह्मयोनिम् । तमादिमध्यान्तविहीनमेकं विभुं चिदानन्दमरूपमद्भुतम् । उमासहायं परमेश्वरं प्रभुं त्रिलोचनं नीलकण्ठं प्रशान्तम् । ध्यात्वा मुनिर्गच्छति भूतयोनिं समस्तसाक्षिं तमसः परस्तात् । स ब्रह्मा स शिवः सेन्द्रः सोऽक्षरः परमः स्वराट् । स एव विष्णुः स प्राणः स कालोऽग्निः स चन्द्रमाः । स एव सर्वं यद्भूतं यच्च



வடக்கு கோபுரம், சிதம்பரம்.

भव्यं सनातनम्। ज्ञात्वा तं मृत्युमत्येति नान्यः पन्था विमुक्तये ॥ என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குகிறது.

இது விஷயத்தை விரிக்கினால் மிகவும் பெருகுமாதலால் இத்துடன் நிறுத்தினோம். மேற்கூறிய உபநிஷத்துக்களைப் பார்த்தால் இந்த சிதம்பரத்தின் மகிமை நன்கு விளங்கும்.

நடராஜமூர்த்தி.

நடராஜர் என்றால் ஸபாநாயகர் என்று பொருள். இதன் தாத்பர்யம் யாதெனில், இந்த உலகம் முழுமையும் ஒரு நாடகஸபை—அதாவது எங்கும் நிறைந்தும் அதிர்ஷ்டாயுமுள்ள ஸபேசரான ஆத்மா அல்லது கடவுளுடைய சக்தியால் ஸர்வத்தையும், சேதனமுள்ளதாயும் உத்ஸாஹமுள்ளதாயும் காண்பிக்கும் ஒரு பொம்மையாட்டம். நடிப்பிவித்தால் யார்தான் நடிக்கமாட்டார்கள்; பாடும்படி செய்வித்தால் யார்தான் பாடமாட்டார்கள் என்பதாய் தத்வக்ஞான ஓர்கவி கூறுகின்றார். ஆனால் அந்தர்யாமியான ஆத்மாவுக்கு ஸமஸ்தஜகத்தும் கேவலம் ஜடமாக இருக்கும்.

மனதுக்கு நிஜமான குரு ஆத்மா அல்லது தானேயானபடியால் நடராஜர் அந்த குருவைக்குறிக்கிறார். குருவில் இருவகையுண்டு- பிரத்யக்ஷகுரு, அப்ரத்யக்ஷகுரு. பிரத்யக்ஷகுருவாவது சிஷ்யனுக்கு உபதேசம்செய்து அவனை ஸரியான வழிக்குக்கொண்டுவருகிறவர். குருவென்னும் பதத்துக்கு ஸாதாரணமாக இப்படித்தான் அர்த்தம் செய்கின்றார்கள். ஆனால் யதார்த்தத்தில் எல்லா உபதேசமும் தனக்குள்ளேயிருந்தே வருகிறது. இதனால் ஆத்மா அல்லது கடவுளானவர் பிரத்யக்ஷகுருவை வியாஜமாகக்கொண்டிருக்கிறார் என்பதுமட்டுமல்ல. எப்பொழுதும் விருத்தி தனக்குள்ளிருந்து உண்டாகவேண்டுமென்பதே. உதாரணமாக, செடியானது தனக்குள்ளிருந்தே முளைக்கிறது; எரு, ஜலம், முதலியவைகளெல்லாம் அதன் விருத்திக்கு உபகாரணமாயுள்ளன. இதே மாதிரியாக மனதும் வெளியிலிருந்து கிடைக்கும் உபதேசங்களைப்பரிபக்குவம் செய்துகொண்டு தனக்குள்ளிருந்தேதான் விருத்தியாகவேண்டும். அந்த யதார்த்த குருவை மூர்த்திமானாகக் காண்பித்தால் நடராஜராகிறது. ஒரு குருவின் வேலைகளுள் மிகவும் முக்கியமானது யாதெனில் தான் செய்யும் உபதேசங்களின்படி தானே நடந்து காண்பிப்பது. நடராஜர் சின்னத்துக்கு இதுதான் முக்கிய கருத்து.

வலது கைகளில் ஒன்றிலுள்ள சிறு உடுக்கானது, சப்தநிஷ்டம் ஜகத் என்னும் சுருதிவாக்கியப்படிக்கு இந்த ஜகத்துக்கெல்லாம் காரணபூதமாயுள்ள சப்தத்தை குருவாகிய கடவுள் கையிலடக்கி யிருக்கிறாரென்பதைக் குறிக்கிறது. அதாவது ஸமஸ்த

உலகமும் அவர் கைக்குள்ளிருக்கிறது. அவருக்கு இஷ்டமிருந்தால் பிரகாசப்படுத்தலாம்; இல்லாவிடில் இல்லை. ஞானிக்கு அவன் பிரியப்பட்டால் உலகம் ஸத்தாகிறது. இல்லாவிட்டால் அஸத்தாய்ப்போய்விடுகிறது. ஒருபக்கத்திலிருக்கும் மான்தான் மனது. எப்படி மானானது யதேச்சையாய் துள்ளிக்குதிக்கிறதோ அதே பிரகாரம் மனதானது ஒரு வஸ்துவிலிருந்து மற்றொரு வஸ்துவினிடம் அதி சீக்கிரத்தில் பாய்கிறது. ஆத்மாவானது இந்த மான்போலொத்த மனதுக்கு எட்டாமல் வெகுதூரத்திலிருக்கிறது. ஆகையால்தான் விக்ரஹத்திலும் மானைக் காலுக்கு ஸமீபத்தில் வைத்திருக்கிறது. தானே கொன்ற ஒரு புலித்தோல்தான் நடராஜருக்கு வஸ்திரமாயிருக்கிறது. அகங்காரம் அல்லது அகம்பாவம் தான் அந்தப்புலி. அதை எதிர்த்தால் அது மிக்க குரூரமாயும், உக்ரமாயும் பயங்கரமாயும் சண்டை செய்கிறது. ஆனால் அதைக்கொன்றேதீரவேண்டும். அதை குருவாகிய நடராஜர்தான் கொல்லலாம். அவர் சிரஸில் கங்கையையும் சந்திரனையும் தரிக்கிறார். கங்கை தான் மிகவும் குளிர்ந்ததும், ஆசுவாஸகரமாயுள்ளதுமான சித்சக்தி அல்லது ஞானம். சந்திரன், ஆத்மாவின் பரஞ்ஜோதிர்மயத்வத்தையும் ஆநந்தமயத்வத்தையும் குறிக்கிறது. ஒரு பாதத்தை, பிறப்பு இறப்புக்குக் காரணமாயுள்ள முடிவில்லாமலிருக்கும் மஹாமாயையைக் குறிக்கும் முஸலகன் என்னும் ராக்ஷஸன் மேல் வைத்து அவனை நசுக்கிக்கொண்டிருக்கிறார். மற்றொரு பாதத்தை உயரத் தூக்கிக்கொண்டிருக்கிறார். அது ஜகன்மாயை, மனசு, இவைகளை அதிக்கிரமித்ததாயும் ஜாக்ரத் ஸ்வப்ன ஸுஷுப்தியாகிற மூன்றவஸ்தைகளுக்கும் மேலானதாயுமுள்ள துரீயாவஸ்தையை காண்பிக்கிறது. ஆனந்தபாவத்தைக் காண்பிக்கும் இரண்டாவது வலது கையானது ஞானத்தின் மிகச்சிறந்த அதிகாரமான ஸகஜமான சாந்தியைக்குறிக்கின்றது. இடது கையில் ஒன்றில் அக்னிவைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது குருவானவர் தன்னுடைய உபதேசத்தின் பிராமாண்யத்தை ஸ்தாபிக்க ஆத்மாவின் ஜ்யோதிஸ்ஸைக் கொண்டுவருகிறார். இதன் பாவார்த்தம் யாதெனில் குருவின் உபதேசம் ஸ்வானுபவத்தில்தான் நன்றாக அறியலாமென்பது. அவர் நர்த்தனம் செய்யும் இடத்தை தில்லைவனம் என்று சொல்லுகிறார்கள். தில்லைவனமாவது பலவஸ்துக்களின் ஸமூகத்தால் வனம் அல்லது காடு என்று சொல்லப்படும் மனுஷ்யனுடையவும், உலகத்தினுடையவும் சரீரமே. அந்த இடத்திலுள்ள அவர் நடிக்கும் ஸபையானது ச்மசானம். அதாவது உலகமாகிற தோற்றத்துக்குக் காரணபூதமாயிருக்கும் நாமரூபங்கள், ராகத்வேஷாதிகள் முதலியவைகளை எரித்த இடம்; சுத்த சித்ஸ்வரூபமாய் வெளியில் ஒன்றினிடத்திலும், பற்றுதலில்லாமலும் மாயாரஹிதமாயுமுள்ளது.

கிழக்கு கோபுரம், சிதம்பரம்.

மேல் சொன்னவைகள் நடராஜ சின்னத்துக்குச் சில முக்கியமான லக்ஷணங்கள். குரு

சித்ஸபை. ஒருவன் ஈசான்யத்தில் தலைவைத்துப் படுத்தால் அவனது ஹிருதயம் அவனது தேகத்தில் எங்கிருக்குமோ அதுபோன்ற மானிட தேகத்திற்கு ஒப்பிட்டிருக்கும் இக்கோவிலில் ஹிருதயம் உள்ள ஸ்தானத்தில் இந்த ஸபை அமைக்கப்பெற்றுளது.

வின் உபதேசங்களாவன. மாயை அல்லது அக்ஞானத்தைக் கீழே நசுக்கவேண்டும். உலகத்தை நமக்குள் ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் உலகத்துக்கு வசப்படக்கூடாது. மான்போலொத்த மனதைப் பிந்தித்தள்ளவேண்டும். அகங்காரத்தை நாசம்செய்யவேண்டும்; சுத்தமாயும் உபாதிரஹிதமாயும் இருக்கும் ஞானத்தை அடையவேண்டும். ராகத்வேஷம், அகம் முதலியவைகள் இல்லாமல் ஆத்மாவுக்கு ஸ்வயமாயுள்ள ஆனந்தம், தேஜஸ், ஸத்யம் முதலியவைகளை அனுபவிக்கவேண்டும். இப்படிப்பட்ட தத்வார்த்தத்தைத்தெரிந்துகொண்டு நடராஜ விக்கிரஹத்தை தரிசனம் செய்தால் அது ஒரு கல்லாகவும், தாம்ரமாகவும், ஸ்வர்ணமாகவும் தோன்றாமல் உத்ஸாஹப்படுத்துகிறதும், உத்கர்ஷமாக்குகிறதும், அதிமேன்மையான உபதேசத்தைச் செய்கிறதுமான ஒரு சின்னமாய் விளங்கும்.

இவ்வளவு மஹிமை வாய்ந்த இந்த சிதம்பரக்ஷேத்திரத்தில் இத்துணைபெருமைவாய்ந்த நடராஜமூர்த்தியை தர்சனம் பண்ணக்காத்திருந்து கிருதார்த்தர்களான மேற்கூறிய பதஞ்சலி வியாக்ரபாத மஹர்ஷிகளைத் தவிர இன்னும் அனேகம் பெரியோர்கள் மிகுந்த அவாவுடனிருந்து இங்குவந்து தர்சிப்பதால் தங்கள் ஜன்மம் கடைத்தேறுவதாகக் கருதி அவ்வாறு செய்திருக்கிறார்கள். அவர்களிற் சிலரைக்குறித்து இங்கு சொல்வோம்.



நூற்றுக்கால் மண்டபம்.

மிகுந்த பிரகாசத்துடன் ஆகாயத்தின் மத்தியில் வந்துநின்றனன்.

அதைக்கண்ட பதஞ்ஜலி வியாக்கிரபாதர் இருவரும் தங்கள் ஆசிரமங்களிலிருந்து புறப்பட்டு மூலஸ்தானம் வந்து பகவானுடைய வரவை எதிர்பார்த்திருக்கும்போது பிரணவாத்மாவாயும் ஜகத்குருவாயுமுள்ள நடராஜபதி வந்தாரென்று தாளத்வனியோடு கலந்த காஹளமுதலிய வாத்தியத்வனிகள் உயர்ந்து கேட்வும், மிருதங்கம் சங்கம் பணவம் கொம்பு குழல் முதலிய வாத்யங்கள் சப்திக்கவும், சகல வாத்யங்களுக்கும் மேலாய் சப்திக்கின்ற தாளத்வனிக்கு முன்னே கணேசுவரர்களான ஆயிரமுகங்களையுடைய பானுகம்பனும் பர்வதம்போன்ற ஸஹஸ்ரசிருங்கனும் ஆனந்த மோகிதர்களாய் வேகத்துடன் பூமியை அடைந்தார்கள். அவர்களில் பானுகம்பன் சந்திரமண்டலத்துக்குச் சமானமான வெண்மையுள்ள பெருத்த சங்கங்களை ஆயிரமுகங்களிலும் வைத்து அண்டம் பிளக்கும்படி பிரணவத்வனி உச்சரிக்கும்படி கோஷித்தனன். பரமசிவப்பிரஸாதத்தால் காந்தர்வவேதத்தில் மிகுந்த வல்லமையுள்ள சக்கிர சிருங்கனென்று பேர்பெற்ற பாணாசுரன் ஆயிரம் கரங்



சிவகங்கை குளம் வடபாகம்.



சிதம்பரம் கோவில் வடக்கு மேற்கு கோபுரங்களும், சிவகங்கை குளமும், அம்மன் கோவிலும், சித்ஸபை, கனகஸபை, தேவஸபைகளும் அடங்கிய காக்ஷி.

களால் அடிக்கின்ற சுத்தமத்தளத்வனியானது கடலோசையடங்க சப்திக்கவும், தோற்கருவி துளைக்கருவி நரம்புக்கருவி கஞ்சக்கருவி கண்டக்கருவியென்னும் ஐவகை நாதங்களும் நான்கு வேதங்களின் கோஷங்களும் பரமேசுவரருடைய சரணாரவிந்தங்களை விட்டு நீங்கா ஸ்ரீநூபுரங்களின் சப்தமும் தேவர்களுடைய இனிமையுள்ளகானங்களும் ஏககாலத்திற் கேட்டவுடனே தேவர்களால் வர்ஷிக்கும் பாரிஜாத முதலிய வாஸனையுள்ள மலர்களைக்கண்டு பதஞ்சலிவியாக்ரபாதர் இருவரும் அந்த திக்கைநோக்கி நமஸ்கரித்து அஞ்ஜலி பந்தனஞ்செய்து 'ஓ பார்வதிநாதனே! நடராஜதெய்வமே! எங்களை அனுக்ரகிக்கவேண்டும். தேவரீரது பாதாம்புஜத்தை தர்சிபிக்கவேண்டும்.' என்று புளகாங்கிதவிக்ரகர்களாய்த் துதித்துக்கொண்டிருக்கையில் கருணாநிதியான பரமேசுவரர் பதஞ்சலிக்கும் வியாக்ரபாதருக்கும் ஞானதிருஷ்டியைக் கொடுத்து மோகத்தின் மாதாவாயும் ஜகத்தை ஸம்ஹாரஞ் செய்கின்றவளாயுமிருக்கிற மஹாமாயையாகிய திரையை நீக்கியருளலும் உடனே ஆயிரம் சூரியர்கள் உதித்ததுபோன்றதாயும் இவ்வளவென்றறிய முடியாததாயும் சர்மநேத்திரங்களால் கிரகிக்கத்தகாததாயும் யோகிகளுடைய ஹிருதயத்தில் விளங்குவதாயுமுள்ள ஒரு தேஜோவிசேஷம் ஞானமயமானசித்ஸபையில் ஆவிர்ப்பவித்தலும், அந்த தேஜஸின் நடுவே அசைவற்று ஓர் சரணத்தை ஊன்றியும் மற்றொரு சரணத்தைக் குஞ்சிதமாகத் தூக்கியும், அத்திருவடிகளிற் சாத்திய மாணிக்கமயமான திருச்சிலம்புகளும், அழகிய அரையில் அணிந்த புலித்தோலுடையும், படத்தின் ரத்தினங்களால் விளங்குகின்ற ஸர்ப்பக்கடிஸூத்ரமும், நவரத்தினங்களிழைத்த உதரபந்தனமும், யக்ஞோப

வீதம் பொருந்திய திருமார்பும், வளைத்து வீசியருளிய வாமகரமும், பணிகங்கணந்தரித்த அபயஹஸ்தமும், அசைகின்ற டமருகமும் ஜ்வலிக்கின்ற அக்கினியும் ஏந்திய இருகைகளும், காளகூடத்தாலழகிய திருக்கழுத்தும், திருத்தோடும் சங்கக்குழையும் பொருந்திய செவிகளும், திருவாய்ப்பவளத்தில் பிரகாசிக்கின்ற புன்னகையும், மலர்ந்த பங்கஜத்தின் அழகுபோன்ற திருமுகப்பிரஸன்னமும், பார்வதி தேவியைப்பார்த்தருளுகின்ற திருநயனங்களின் கடாக்ஷவிளக்கமும், புருவமாகிய இளங்கொடியில் விளங்குகின்ற நெற்றியாகிய சந்திரனும், கங்கை ஸர்ப்பம் சந்திரன் கொன்றை வெள்ளெருக்கு கொக்கிறகு மத்தம் தும்பை இவைகளால் அழகிய ஜடாபாரமும், கபாலமாலையும், ஆபாதமஸ்தகபர்யந்தஞ் சாத்திய திருவெண்ணீறும், அசைகின்ற சிவந்த ஜடாபாரமும் பொருந்தி விளங்குகிற அத்புதமான ஆனந்தத்தாண்டவரூபத்தை புனிதர்களான பதஞ்சலிவியாக்ரபாதர் இருவரும் கண்டு அதற்கு இடதுபக்கத்தில் இருண்ட மேகம்போற் குழலிலே மின்னல்போன்ற செந்தாமரைமாலையும், அழகிய நெற்றியும், அதிற்பொருந்திய சிந்தூரதிலகமும், ஸௌந்தர்யப்பிரவாகத்தின் அலைகள் போன்ற இரண்டு புருவங்களும்; தாமரைமலர்போன்ற கண்களும், அணிகளணிந்த திருக்காதும், சம்பகமலர்போன்ற நாசியும், பவழத்தை வென்ற இதழும், முத்துக்கள்போன்ற பல் வரிசையும், கன்னிக்கமுகு போன்ற கழுத்தில் விளங்குகின்ற நித்தியமாகிய பொலிவினையுடைய திவ்யமங்கள பூஷணமும், இளம் மூங்கிலைப்போன்ற இருபாஹுக்களும், கரகமலத்திலேந்திய செங்கழுநீர்மலரும், பெருத்துயர்ந்த ஸ்தனப்பிரதேசத்தில் விளங்குகிற முத்துவடமும், ஸௌந்தர்



நர்த்தனஸபை. இது நடராஜர் நர்த்தனத்துக்காக வரும்பொழுது ஏறிக்கொண்டு வந்த ரதமென்று சொல்லுகிறார்கள். அதனால்தான் இதற்கு சக்கிரம்கூட போட்டிருக்கிறது. இங்குள்ள தூண்கள் மிகுந்த வேலைப்பாடுடனிருக்கின்றன.

யப் பிரவாஹத்தின் சுழிபோன்ற அழகிய நாபியும், பீதாம்பரந்தரித்த அழகிய இடையும், அதில் தரித்த ஒட்டியாணமும், நவரத்னமிழைத்த மேகலாபரணமும், மன்மதனுடைய உத்யானவனத்தில் இருக்கின்ற வாழைபோன்ற அழகிய தொடைகளும், கருடப்பச்சைபோன்ற முழந்தாள்களும், காமராஜனுடைய காஹளவாத்தியம்போன்ற இருஜங்கைகளும், செந்தாமரை மலர் போன்ற கால்களில் விளங்குகின்ற நவரத்ன நூபுரங்களும், பசுமையுள்ள திருமேனியும், அழகிய ஆனந்தமான புன்னகையும் பொருந்தி, அக்னியை விட்டு நீங்காத உஷ்ணம்போல அந்நடராஜமூர்த்தியைவிட்டு அகலாது நடனதரிசனத்தை நோக்கி நிற்கும் சிவகாமசுந்தரியென்னும் தேவியை தரிசித்து பதஞ்சலி வியாக்ரபாதர் இருவரும் க்ஷணநேரம் தன்னைமறந்து ஒன்றுந்தோன்றாமலிருக்கையில் தயாளுவாகிய பரமேசுவரருடைய கிருபாதிருஷ்டியால் தெளிவையடைந்து ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து கையை சிரஸின்மேல் தூக்கி அஞ்ஜலிபந்தனஞ்செய்து கண்ணில் ஆனந்தநீர் பெருக மேனிமுழுதும் மயிர்கூச்செறிந்து சொல்லற்கரிய ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கி ஸ்தோத்திரஞ்செய்தார்கள். உடனே பிர்ம்மா விஷ்ணு இந்திரன்முதலிய தேவர்கள் மகாதேவனைப்பார்த்து 'நாதனே நாங்களும் தேவரீரது ஜோதிர்மயமான சிதம்பரஸபையையும் அதில் நடிக்கும் ஆனந்தத்தாண்டவத்தையும் தரிசிக்கும்படி கிருபை செய்தல் வேண்டும்' என்று பிரார்த்திக்கவும் சித்ஸபேசன் புன்சிரிப்புடன் அருகில் அமர்ந்தருளுஞ் சிற்சக்தியாகிய சிவகாமசுந்தரியின் முகாம்புஜத்தை வீக்ஷித்து ஸகல இச்சைகளின் பலன்

ஹிரண்யவர்மன்.

பாண்டியநாயகம் ஸுப்ரமண்யஸ்வாமி கோயில்.

முக்காலத்திலேயே வடதேசங்களில் அரசனுயிருந்த ஸிம்ஹவர்மன் என்பவன் தனது ராஜ்யத்தைத்துறந்து வெகுதூரம்வந்து கடைசியில் இந்தக்ஷேத்ரத்தையடைந்து பதஞ்சலி வியாக்ரபாதர்களைக்கண்டு வணங்கி அவர்களின் கிருபையால் சிவகங்கையில் ஸ்நானம்செய்து ஸ்ரீநடராஜரின் ஆநந்தத் தாண்டவத்தை தர்சனம் செய்தான். உடனே ஈசுவரனின் அநுக்ரஹத்தால் அவ்வரசன் சரீரமுழுமையும் ஸ்வர்ணவர்ணமாய் மாறிவிட்டதால் அவ்வரசனுக்கு அது முதல் ஹிரண்யவர்மன் என்று பிரஸித்தியுண்டாயிற்று. பிறகு அவன் தனது ராஜ்யத்தையடைந்து அங்கிருந்து திரும்பி ஸ்மஸ்தவிபவத்துடன் வந்து ஸ்ரீநடராஜரின் கர்ப்பகிருஹம் முதலிய கோவிலைக்கட்டி. அவைகளுக்கெல்லாம் ஸ்வர்ணத்தகடுகள் போட்டுவைத்ததாகவும் உத்ஸவங்களெல்லாம் ஏற்படுத்தினதாகவும் சிதம்பர மாஹாத்மியத்தில் சொல்லுகிறது.

ஜைமினி மஹர்ஷி.

ஜைமினி, வியாக்ரபாதர், பதஞ்ஜலி மஹர்ஷிகள்.

இவர் பூர்வமீமாம்ஸா சாஸ்திரத்தை இயற்றியவர். இவர் தமது சாஸ்திரத்தில் ஈசுவரனைப்பற்றிப் புகழ்ந்து சொல்லாததால் அதனுல் தமக்கு ஏற்பட்ட தோஷத்தை விலக்கக் கருதி இந்த க்ஷேத்திரத்தில் வந்து பதஞ்ஜலி வியாக்ரபாதர் முதலிய மஹர்ஷிகளுடன் சேர்ந்து ஆநந்தத் தாண்டவ தர்சனஞ்செய்து வெகு காலம் ஈசுவரனைப் பூஜித்து “ வேதபாதஸ்தவம் ” முதலிய அத்புதஸ்தோத்ரங்களால் நடராஜரை ஸ்தோத்ரம் செய்து கிருதார்த்தானுர்.

அப்பய்யதீக்ஷிதர்.

இவர் மிகப்பிரஸித்திபெற்ற ஸம்ஸ்கிருதவித்வான். 16-வது நூற்றுண்டிலிருந்தவர். இவர் எல்லா சாஸ்திரங்களிலும் வல்லவர். 104 கிரந்தங்களுக்குமேல் ஸம்ஸ்கிருதத்தில் எழுதியிருக்கிறுர். உலகம் முழுமையுமே இவரை மிக்க கௌரவமாகக்கொண்டாடுகிறுர்கள். பெ



மேற்கு கோபுரம், சிதம்பரம்.

யரைச் சொல்லாமல் "தீக்ஷிதர்" என்றுமட்டில் சொன்னாலும் இவரைத்தான் குறிக்கும். இவ்வளவு பெருமை வாய்ந்த ஞானவான் காஞ்சிபுரத்துக்கு ஸமீபத்திலுள்ள அடையப்பள்ளம் என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவராயினும் தமது முதிர்ந்த வயதில் இந்த சிதம்பர க்ஷேத்ரம் வந்து நடராஜதர்சனம் செய்யவேண்டுமென்று ரொம்பவும் அவாகொண்டு கடைசியில் இவ்வூருக்கு வந்து சேர்ந்தார். இவர் முதன்முதலில் கோவிலுக்கு தர்சனத்துக்குப்போனபொழுது ஈசுவரனுக்கு சந்தனாபிஷேகம் ஆய்க்கொண்டிருந்தது. அதை தர்சித்ததும் தீக்ஷிதர் சொன்ன சுலோகம்:

मौलौ गङ्गाशशाङ्कौ करचरणतले शीतलाङ्गा भुजङ्गाः

वामे भागे दयार्द्रा हिमगिरितनया चन्दनं सर्वगात्रे ।

इत्थं शीतं प्रभूतं तव कनकसभानाथ वोढुं क्व शक्तिः

चित्ते निर्वेदतप्ते यदि भवति न ते नित्यवासोऽस्मदीये ॥

மற்றொரு நாள் தர்சனத்துக்குப்போகும்பொழுது கோவிந்தராஜப்பெருமாள் ஸந்நிதிக்கு நேராக வந்ததும் ஒரு கண்ணுக்கு பெருமாளும் ஒரு கண்ணுக்கு ஈசுவரனும் புலப்பட்டது. அப்பொழுது சொன்ன சுலோகமாவது:

मारमणमुमारमणं फणधरतल्पं फणाधराकल्पम । मुरमथनं पुरमथन वन्दे बाणारिमसमबाणारिम ॥

இதைத்தாண்டி உள்ளே நடராஜர் ஸந்நிதிக்குச் சென்றதும் சொன்ன சுலோகமாவது:

संपत्तेरवटं कुटीकृतवटं विश्वावने लम्पटं दिक्कल्याणपटं सरित्पदसटं शान्तिः स्रवन्तीतटम् ।

धीरात्मप्रकटं धनंजयभटं दूरप्रभाकङ्कटं चिन्माधुर्यघटं चिदम्बरनटं पश्याम्यपर्णाविटम् ॥

இவ்வாறு ஈசுவரனை ஸ்தோத்ரம் செய்துகொண்டு ஆநந்தபரிதராயிருக்கையில் ஒருநாள் காலையில் 10-மணி சுமாருக்கு கோவிலில் இரண்டாங்காலம் தர்சனம் செய்துவிட்டு தமது கிருஹத்துக்குச் சென்றார். அங்கு தமது பத்னியை மாத்யான்ஹிகத்துக்கு தீர்த்தம் கொண்டுவரச் சொல்லிவிட்டு தாம் திண்ணையிலுட்கார்ந்தார். உட்கார்ந்ததும் அடியில் கண்ட சுலோகத்தைச் சொன்னார்.

चिदम्बरमिदं पुरं प्रथितमेव पुण्यस्थलं सुताश्च विनयोज्ज्वलाः सुकृतयश्च काश्चित्कृताः ।

वयांसि मम सप्ततेरुपरि नैव भोगे स्पृहा न किंचिदहमर्थये शिवपदं दिदृक्षे परम् ॥

आभाति हाटकसभानटपादपद्मज्योतिर्मयो मनसि मे तरुणारुणोऽयम् ।

இந்த பாதிசுலோகம் சொல்லிமுடிந்ததும் அப்படியே சாய்ந்துவிட்டார். அதே சமயத்தில் கோவிலுக்குள் பூஜைசெய்துகொண்டிருந்தவர்கள் தீக்ஷிதரவர்கள் மிக வேகமாய் வந்து கனகஸபையைத்தாண்டி பஞ்சாக்ஷரப்படிகளேறி சித்ஸபைக்குள் நடராஜரிடம் செல்வதைக்கண்டு பின்தொடர்ந்து ஓடிப்போய் பார்க்கையில் அங்கு அவரைக்காணாமையால் ஈசுவரனோடு ஐக்யமானதாக அறிந்தார்கள்.

மாணிக்கவாசகர்.

திருவாதவூரார் என்னும்
மாணிக்கவாசகர்.

இவர் பாண்டிய நாட்டிலே வாதபுரி யென்னும் ஊரிலே ஒரு பிராமணகுலத்தில் பிறந்த பிராமணோத்தமர். இவர் மிகவும் ஆஸ்திகாயிருந்து பாண்டிய அரசனுக்கு மந்திரியாய் தனக்கு ஞானோபதேசம் பெறவேண்டி குருவைத்தேடி நிற்கையில் ஈசுவரனே இவருடைய தபோமஹிமையிலீடுபட்டு இவருக்கு ஞானோபதேசம் செய்வித்து கடைசியில் இவரை சிதம்பரத்துக்கு வரும்படி ஆக்ஞாபித்துச் சென்றார். இவரும் அப்படியே சிதம்பரம் வந்து ஆநந்தத்தாண்டவ தர்சனம் செய்துகொண்டு ஸ்வஸ்தமாயிருந்தார். அச்சமயத்தில் ஒரு நடராஜபக்தர் தீர்த்தயாத்திரை செய்துகொண்டு ஈழதேசத்துக்குச்சென்று அங்கு சிதம்பரத்தின் மஹிமையைப் பலவாறாக எடுத்துச் சொன்னார். அதைக்கேள்வியுற்ற அவ்வரசன் அவரை தமது ஸபைக்குத் தருவித்தான். அவர் வந்து உட்காரும்பொழுது 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லிக்கொண்டு உட்கார்ந்தார். அவர் அவ்வாறு உட்கார்ந்ததன் காரணத்தைக்கேட்க அவர் சிதம்பரத்தைக் குறித்தும் நடராஜரைக் குறித்தும் சாமாரியாய் பிரஸங்கித்தார். இதைக் கேட்ட அரசனுக்குப் பக்கத்திலிருந்த புத்தகுருவானவன் வெகு கோபத்துடன் அவ்வரசனோடும் பரிவாரங்களோடும் உடனே புறப்பட்டு தில்லைக்கு வந்து அவ்விடத்தில் புத்தஸமயத்தினுயர்வைப்பத்தி பிரஸங்கிக்க ஆரம்பித்தான். இதையறிந்த தில்லை மூவாயிரத்தவர் மனம் கலங்கியஸமயத்தில் ''மாணிக்கவாசகர் புததரை வாதில் வெல்லுவர்'' என்று நடராஜர் ஸ்வப்னத்தில் சொன்னதைக்கேட்டு மனம் தேறி எல்லோருமாகச் சென்று மாணிக்கவாசகரை கூட்டிவந்து புத்தகுருவின் பிரஸங்கத்துக்குச் சென்றார்கள். மாணிக்கவாசகரும் புத்தகுருவின் பிரஸங்கத்தை சாஸ்திரபூர்வமாய் கண்டித்து சைவத்தின் பெருமையை நன்கெடுத்துக்கூறி அந்த புத்தரின் கொடுஞ்சொற்களைக்கேட்டு துக்கித்து நாமகளேசினந்து புத்தரின் நாவைவிட்டகலுமாறு செய்தனர். பிறகு அவ்வரசன் பிரார்த்தனைக்கிணங்கி அவன் ஊமைப்பெண்ணைப் பேசவைத்து அவளைக்கொண்டே புத்தர்கேட்ட அக்கிரமவினாக்களுக்கு விடையளிக்கும்படிசெய்து அரசனைசந்தோஷிப்பித்தனர். அந்தவினாக்களையும் விடைகளையும் "திருச்சாழல்" என்பதாக செய்தனர். பிறகு ஒருநாள் ஸபாநாயகர் ஒரு வேதியருருக்கொண்டு இவர் முன்வந்து நின்றனர். மாணிக்கவாசகரும் அவரையுபசரித்து அவர் வந்த காரணத்தை வினவினர். அதற்கு "யான் பாண்டிய நாட்டிலுள்ளவன். தங்களை சிவன் ஆண்டுகொண்டவண்ணமும், தங்களுக்காக திருவிளையாடல்கள் செய்தவிதமும், தாங்கள் பிறகு ஸ்தலயாத்திரை செய்து இத்



தெற்கு கோபுரம், சிதம்பரம்.

தில்லைக்கு வந்து புத்தரைவென்றவரலாறும் அறிந்து மகிழ்ந்தவன். தாங்கள் பாடிய பாடல்களனைத்தையும் தங்களிடமே கேட்க விருப்பமுடையவனாகி இங்கு வந்தேன்" என்றார். இதைக் கேட்ட மாணிக்கவாசகர் மகிழ்ந்து தாம் பாடிய பாடல்களனைத்தையும் தெளிவாகச்சொல்லிவந்தார். வேதியரும் கையில் ஏடுபிடித்து ஒன்றேனும் விடாது எழுதித் தீர்ந்தவுடன் ஸபாநாயகரை பாட்டின் தலைவனாகவைத்து ஒரு திருக்கோவை பாடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவ்வாறே மாணிக்கவாசகரும் பாட அந்தக்கோவை முடிந்ததும் வேதியர் ஏட்டை சுருட்டிக்கொண்டு மின்னல் போல் மறைந்துவிட்டார். மாணிக்கவாசகர் அவரை திடீரென்று காணாதவராய் வருந்தி வந்தவர் ஈசுவரனேயென்று தெரிந்துகொண்டு மனதை ஸமாதானப்படுத்திக்கொண்டார். ஈசுவரனும் அந்த ஓலையைஎடுத்துக்கொண்டு கோவிலில் சித்ஸபைக்குள் போகும்ஸமயத்தில் அங்குவந்திருந்த தேவர்களுக்குதன் பெருமையை எடுத்துரைத்து "திருவாதவூரார் சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையார் கையெழுத்து" என்று திருக்கோவை முடிந்த இடத்தில் எழுதி, மைக்காப்புஞ்செய்து உலகமெல்லாமறியட்டுமென்னும் கருணையுடன் வாசப்படியில் வைத்துவிட்டு உள்ளே தம்மிருப்பிடம் சென்றனர். காலையில் பூஜைசெய்யவந்த தில்லைமூவாயிரத்தவர்கள் இதைக்கண்டு ஆச்சர்யப்பட்டு ஏட்டை எடுத்துப்பார்த்து உண்மையறிந்து அத்திருக்கோவையின் பொருளுணருமாறு எல்லோரும் கூடி மாணிக்கவாசகரிடம்சென்று ஏடுகண்டவிதத்தை சொல்லி அதற்கு பொருள்கூறுமாறு வேண்டினர். மாணிக்கவாசகரும் முதல்நாள் நடந்த செய்தியை சொல்லி மனமகிழ்ந்து அவர்களுடன் கனகஸபைக்குசென்று ஸாக்ஷாத் சிதம்பரேசனை சுட்டிக்காட்டி இத்தமிழ்நூலுக்குப்பொருள் இவர்தாமென்று சொல்லி ஸபையில் எல்லோரும் காண நடராஜர் ஜோதிஸ்ஸோடு மறைந்தார்.

நந்தனர்.

நந்தனர்.

இவர் ஆதனூர் என்னும் கிராமத்திலே பறச்சேரியில் அந்த்யஜகுலத்தில் பிறந்தவர். நீசஜாதியில் பிறந்தபோதிலும் ஜன்மாந்தரவாஸனையால் இவருக்கு ஈசுவரபக்தி மிகவும் ஜாஸ்தியாகவிருந்தது. எப்பொழுதும் ஈசுவரபக்தி செய்கிறதும் பறச் சேரியிலுள்ள மைத்தவர்களையும் கூட்டி ஈசுவரபஜனம் செய்கிறதும் குளம் வெட்டுகிறது

முதலான ஈசுவரகைங்கர்யங்களை செய்கிறதுமாய் காலத்தை கழித்தனர். தாழ்ந்தஜாதியில் பிறந்துவிட்டதால் ஈசுவரனுடைய கோவிலுக்குள் போய் தர்சனம் செய்கிறதற்கில்லையே என்று மிகுந்தமனவருத்தப்படுவார். திருப்பன்கூர் என்னும் க்ஷேத்ரத்தில் இவருக்காக ஈசுவரன்கூட மனமிரங்கி தமது நந்தியை இவருக்கு தர்சனம்கிடைக்கவேண்டி சற்று விலகியிருக்கும்படி ஆக்ஞாபித்தார். இத்தகைய சிவபக்தருக்கு காலக்கிரமத்தில் சிதம்பரத்தை தர்சிக்கவேண்டுமென்ற அவா உண்டாச்சுது. ஆனால் அங்குபோய்வர அவருடைய யஜமானாகிய அந்தணர் உத்தரவு கொடுக்கவில்லை. அதனால் அதேசிந்தையுடையவராய் பைத்தியம் பிடித்தவர்போலாய் தனதுவியவஸாயவேலைகளையெல்லாம் ஒன்றும் கவனியாமல் நடராஜரையே ஸதா த்யானம் செய்துகொண்டிருந்தார். வேலைகள் குந்தகமானதைப்பற்றி யஜமான் கோபித்துக்கொண்டால் உடனே இவர் ஈசுவரனை பிரார்த்திக்கிறதும் அவர் அதிசீக்கிரத்தில் அவ்வேலைகளை முடித்துக்கொடுக்கிறதுமாயிருந்தது. இவர் ஒவ்வொருநாளும் சிதம்பரத்துக்கு "நாளைப்போவேன்; நாளைப்போவேன்" என்று சொல்லிவந்தபடியால் இவருக்கு "திருநாளைப்போவார்" என்ற பெயருண்டாயிற்று. கடைசியாய் நந்தனார் யஜமானனை ரொம்பவும் மன்றாடிக்கேட்கிறார்:

பாம்பும் புலியும் மெய்ப் பாடுபட்டுத் தேடிப் பார்த்துப் பயிரிட்டது,
பார் அளந்த திருமாலும் வேதனும் பார்த்துக் களித்ததுண்டு,
பார்வதி என்றொரு சிமாட்டி அதில் பாதியைத் தின்றதுண்டு,
பாதி யிருக்குது பறையா நீயும் போய்ப் பாரென்றுத்தாரம் தாரும்

என்று கெஞ்சினார். பிராமணரும் மனமிரங்கி உத்திரவு கொடுத்தார். உடனே அவருக்குண்டான ஸந்தோஷத்துக்கு ஓர்எல்லையில்லை. சிதம்பரத்துக்கு ஓடிவந்தார். இராப்பகலாய் ஓயாமல்கோவிலை சுற்றிவந்தார். ஒருசமயம் தேகவருத்தத்தினால் மயங்கி சோர்ந்து நித்திரையடைந்தார். அச்சமயத்தில் ஸ்ரீநடராஜர் அவர்முன்பாக ஸ்வபனத்தில் வந்து அவரது பக்தியைப்புகழ்ந்து "நமதுபக்தர்களான பிராமணர்களை உன்னிடம் வரச்சொல்லுகிறோம்; அவர்கள்முன் நீ இந்தப்பிறப்பு நீங்கும்படி நெருப்பிலே முழ்கியெழுந்து அவர்களோடு நமது ஸபைக்கு வந்துசேருவாய்" என்றுசொல்லிவிட்டு அந்தர்த்தானமாயினார். உடனே நந்தனார் விழித்தெழுந்து முன்னிலும் பதின்மடங்கு அதிக ஸந்தோஷத்துடன் குதித்துக்கொண்டிருந்தார். ஈசுவரனும் அன்றிரவே தில்லை மூவாயிரத்தவர்களுக்கும் கனவிலேதோன்றி தமக்கு மிகவும் பக்தனான நந்தன் தம்மை தர்சிக்கவேண்டி தெற்கு கோபுரவாசலுக்கு வெளியில் வந்து காத்துக்கொண்டிருப்பதாகவும், தான் நீசஜாதியில் பிறந்தவனாதலால் உள்ளேவருகிறதற்குத் தயங்குகிறானென்றும், அவனைப்பரிசுத்தம் செய்யவேண்டி அவனுக்கு அக்னிப்பிரவேசம் செய்வித்து தம்முடையஸந்நிதிக்கு கூட்டிவரும்படிக்கும் ஆக்ஞாபித்தார். உடனேமறுநாட்காலையில் ஈசுவரனுடைய ஆக்ஞைப்பிரகாரம் பிராமணர்களெல்லோரும் தெற்குகோபுரவாசலுக்கு வெளியில்வந்து அக்னிகுண்டம் வளர்த்து நந்தனாரைக் கண்டு தங்களுக்குஏற்பட்ட ஆக்ஞையை தெரிவித்தார்கள். உடனே நந்தனார் அளவிலடங்காத ஆனந்தத்துடன் ஸ்ரீநடராஜனது திவ்யசரணாரவிந்தங்களை தியானித்துக்கொண்டு அந்த அக்னிகுண்டத்திலிறங்கவே அதிலிருந்து பழையசண்டாளதேகம்போய் அதி உத்தமமான பிராமணசரீரத்துடன் விபூதிருத்ராக்ஷதாரியாய் நடராஜரை சாமாரியாய் ஸ்தோத்திரம் செய்துகொண்டு வெளியேவந்தனர். உடனே எல்லோரும் அவரை நமஸ்

கரித்து அவருடன் கனகஸபைக்குசென்றார்கள். அங்கு எல்லோருக்கும் முன்னிலேயில் ஸ்ரீநடராஜமூர்த்தியின் ஆநந்தத்தாண்டவதர்சனம் செய்து பரவசராய் ஈசுவரனின் குஞ்சித பாதத்தையடைந்தார்.

திருநீலகண்டநாயனர்.

இவர் சிதம்பரத்திலேயே குயவர் குலத்தில் பிறந்தவர். இவரும் இவரது பத்னியும் மிகவும் ஈசுவரபக்தர்களாக இருந்தார்கள். இவர் தமது தொழிற்செய்யும் நேரங்கள்போக பாக்கிஸமயங்களிலெல்லாம் நடராஜர் கோவிலிலேயே ஈசுவரனை தர்சனம் செய்வதும் ஸ்தோத்ரம் செய்வதுமாக காலத்தை கழித்தார். ஒருநாள் இவர் ஒருவேசியின் வீடுசென்று வந்ததை இவர்பத்னி அறிந்து இவரை கோபித்துக்கொண்டு இனி தம்மிடம் வந்தால் ஈசுவரன்மேலாணையென்றாள். இதனல் மிகவும்மனவருத்தமுற்றவராய் அதுமுதல் தன் பத்னியிடம் ஸம்போகமில்லாமலேயிருந்தார். மேலும் தம்மிடமென்று அவள் பன்மையாகக்கூறியபடியால் ஸ்திரீஜாதிஸமூகத்தையே அவள் எண்ணிச்சொன்னதாகக்கருதி அதுமுதல் ஒருஸ்திரீயுடனுமே ஸம்போகம் செய்யாமலிருந்தார். மைத்தப்படி தம்பதிகளிருவரும் மிகவும் ஸகஜமாயிருந்துகொண்டு ஈசுவரனுக்கு ஸதா தொண்டு செய்துகொண்டிருந்தனர். வயதும் முதிர்ந்துவிட்டது. ஈசுவரனும் இவர்களுடைய பக்திக்கு ஈடுபட்டு இவர்களிடம் கருணைகூர்ந்து ஒருநாள் ஒருபிராமணவேடம் பூண்டு இவரிடம் வந்து ஒரு பழைய ஓட்டைக்கொடுத்து அதைஜாக்ரதையாக வைத்துவைக்கவேண்டுமென்றும் பிறகு தாம் வந்துகேட்கும்பொழுது கொடுக்கவேண்டுமென்றும் சொல்லிப்போனர். பிறகு கொஞ்சநாட்கள் கழித்து திரும்பிவந்து அந்தஓட்டைக்கேட்டார். வீடுமுழுவதும் தேடிப் பார்த்தும் அந்த ஓடுஅகப்படவில்லை. வேறுபுதியதாக நல்ல ஓடாய்க்கொடுப்பதாக சொன்னல் வந்தபிராமணர் உடன்படவில்லை. இதனல் மனம் வருந்திநிற்கையில் அந்த பிராமணர் இவரை 'பழைய ஓட்டை நான் அபகரிக்கவில்லை' யென்று ஸத்யம் செய்துகொடுக்க சொல்லி கூப்பிட்டார். அதற்கு திருநீலகண்டநாயனரும் உடன்படவே அவர் பத்னியை கையைப்பிடித்துக்கொண்டு ஸ்நானம் செய்து எழுந்திருந்து தான் எடுக்கவில்லையென்று சொல்லவேண்டுமென்றார். தான் செய்திருக்கும் சபதத்தால் தான் பத்னியுடன் சேர்ந்தாப்போல் கையைப்பிடித்துக்கொண்டு ஸ்நானம் செய்யமுடியாமலிருப்பதை எவ்வளவுதூரமெடுத்து சொல்லியும் அந்த பிராமணர் கேட்காததால் திருநீலகண்டநாயனர் எல்லோருடனும் ஒருகுளத்துக்குப்போய் அதில் தானும் தனதுபத்னியுமாக ஒருகுச்சியின் இருபக்கங்களையும் பிடித்துக்கொண்டு அந்தபிராமணர் முதலிய எல்லோருடைய முன்னிலையிலும் ஸ்நானம் செய்தனர். ஸ்நானம் செய்து எழுந்திருந்ததும் எதிரிலிருந்த பிராமணரைக்காணவில்லை. அவருக்கு பதிலாக ஸாக்ஷாத் ஈசுவரனே ரிஷபாரூடராய் நேரில்வந்து நின்றார். இந்த தம்பதிகளும் வயது முதிர்ந்தவர்களாயில்லாமல் மிகவும் யௌவனஸ்தர்களாக மாறிவிட்டார்கள். அதுமுதல் இவருக்கு இளமைநாயனர் என்றும் இவர் ஸ்நானம்செய்த குளத்துக்கு இளமைநாயனர்குளமென்றும் பெயர்வந்தது.

சேக்கிழார்.

பெரியபுராணம் எனப்படும் சைவத்தின் பெருமைவிளக்கும் நாயன்மார் மஹான்களது சரித்திரத்தைச்சொல்லும் இந்நூல் தொண்டைமண்டலம்சேர்ந்த 24 கோட்டங்களுள்

ஒன்ருகிய புலியூர்க்கோட்டத்திலடங்கிய குன்றத்தூரில் சேக்கிழாரெனப்படும் வேளாளகுலத்திலுதித்தவரொருவரால் இயற்றப்பட்டது. இவருக்குப்பெயர் அருண்மொழித்தேவர். அநபாயசோழனெனப்படும் இரண்டாவது குலோத்துங்கசோழமஹாராஜா (கி. பி. 1123—1146) இவாது திறமையைவியந்து இவருக்கு "உத்தமச்சோழப்பல்லவன்" எனப்பட்டம்கொடுத்து இவரை கும்பகோணத்திற்கு ஸமீபத்திலுள்ள திருநாகேசுவரத்தில் தமது சோழதேசமந்திரியாக நியமித்தனர். அக்காலத்தில் இளமைப் பருவத்திலிருந்த அநபாயன்எனப்பட்ட இவ்வரசன் ஜைனமதநூலாகிய 'சீவகசிந்தாமணி'யை சிறந்ததெனக் கருதியிருந்ததைப்பார்த்து, சேக்கிழார் வியசனமுற்று திருத்தொண்டத்தொகை, அந்தாதி இவைகளின்பெருமையை எடுத்துக்காட்ட அரசன் அந்நூல்களைவிரித்து காவியமாக எழுத இவரைவேண்டினன். அந்தப்படிசெய்ய சம்மதித்து, சேக்கிழார் சிதம்பரம்வந்துசேர்ந்தனர். இவ்விதம்செய்து சிதம்பரம்கோயிலிலுள்ள நடராஜமூர்த்தியை பிரார்த்தித்து ஆயிரக்கால் மண்டபத்தில் தினப்படி பகவானைத்யானம் செய்து புராணமெழுத ஆரம்பித்தனர். அது முடிவுபெற்றதைத்தெரிந்துகொண்ட சோழமன்னர் தாமேநேரில்போய் அதைஅரங்கேற்றி வைக்கவேண்டி சிதம்பரம்போயினர். இப்பெரியபுராணத்திற்கே விசேஷமாய் பிரகாசிக்கும் ஸம்பந்தர் தேவியிடம் ஞானப்பால்பெற்ற சித்திரைமாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தன்றையதினம் ஆரம்பித்து அடுத்தவருஷம் அதேமாதம் நக்ஷத்திரத்தில் இதை ராஜாமுதலியோர் ஸன்னிதியில் அரங்கேற்றினர். பின்னர் யானைபின்மீது ராஜா சேக்கிழார்சகிதம் இப்புராணத்தை ஊர்வலம்எடுத்துவந்தனர். பின்னர் இவருக்கு "தொண்டர்சீர்பரவுவார்" என்று பட்டமும் கொடுக்கப்பட்டது. இவருக்கு தற்காலம் சிதம்பரம் க்ஷேத்திரத்தில் தெற்கு மாடவீதியின் பின்னுள்ள 'ஞானவாபி' என்னும் குளத்தங்கரையில் ஒரு சந்நிதி விளங்கி வருகிறது.

சிலாசாஸன விசேஷம்.

இக்கோவிலின் வடக்கு கோபுரம் தனது வெற்றிகளில் ஒன்றைக்கொண்டாட விஜய நகரத்தரசனுகிய கிருஷ்ணதேவ ராயனுல் கட்டிவைக்கப்பட்டதாம்.

வடக்கு கோபுர வாயிலில் மேல் பக்கத்தில் விஜய நகரத்தரசனுகிய கிருஷ்ண தேவன் கோபுரம் கட்டிவைத்த நிமித்தம் மேற்படி ராஜாவின் சிலை ஒரு பிரையில் வைக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு கோபுரவாயிலின் கீழ் பாரிசத்தில் வீரப்பிரதாப கிருஷ்ணதேவ மஹாராயர் என்ற அரசர் ஸிம்ஹாத்திரி அரசன்மீது படையெடுத்துச் சென்று திரும்பினதும் கடவுளைப் பூசித்து வடக்குகோபுரம் கட்டிவைத்த விஷயமும் கூறப்பட்டிருக்கக் காணலாம்.

மேற்கூறிய இடத்திலேயே கிழக்கு, மேற்கு, தெற்கு கோபுரங்கள் மகுடமன்னர்களால் கட்டி முடிவு பெற்றனவென்றும், ஆனுல் வடக்கு கோபுரம் மாத்திரம் கடவுளாலேயே எற்படுத்தப் பட்டதென்றும் கூறப்பட்டிருக்கிறது. பிற்கூறியதின் தாத்பர்யம் நான்காவதான வடக்கு கோபுரம் நான்கிலும் சிறந்ததெனக் கொள்ளவேண்டுமெனக் கூறப்பட்டுள்ள தெனக்கொள்ளல் வேண்டுமென்பது சிலர் கருத்து.

தெற்கு கோபுரம் பெருஞ்சிங்கதேவர் என்ற பல்லவ அரசன் ஒருவனுல் எற்படுத்தப்பட்டதெனக் கூறுகின்றனர். "சொக்கச்சியன்" என்னும் பெயருடைய இத்தெற்கு

கோபுரத்தை ஏழுநிலையுடன் கட்ட செங்கல்பட்டுக்கு சமீபத்திலுள்ள ஆத்தூரில் 364 வேலி நிலம் விட்டதாக சாஸனம் இருக்கிறது.

இக்கோவிலில் முதல் வெளிப் பிராகாரத்தில் கிழக்கில் குலோத்துங்க சோழன் பாண்டிய, கேரள அரசர்கள் மீதுகொண்ட ஜயத்தையும் அதனால் அவர் ஸஹ்யாத்திரி மலைச்சிகரத்தில் ஜயஸ்தம்பம் கட்டி வைத்த விஷயத்தையும் பற்றி ஸம்ஸ்கிருத சுலோகங்கள் இரண்டில் கூறப்பட்டுள்ளது.

மேற்படி பிராகாரத்தின் வடக்கில் கோராஜகேசரிவர்மன் செய்த புராதனமான மாசிமக தினத்தன்று "திருத்தொண்டத்தொகை" என்பதைக் கூறி முடிக்க ஏற்பட்ட கொடையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

முதல் பிராகாரத்தின் வெளிப்புறத்தில் வடக்கில் முதலாவது குலோத்துங்க சோழன் என்ற இரண்டாம் ராஜேந்திர சோழதேவன் கோவிலுக்கெதிராக உள்ள சபையில் ஓர் கல் அமைத்த விஷயம் கூறப்பட்டுள்ளது.

பிடாரியார் கோவில் ஒன்றைக் கட்டி முடிக்க சோழக்கோனார் என்பவருக்கு ஸகல புவன சக்கரவர்த்தி கோப்பெருஞ் சிங்கதேவர் என்ற பெயர் வாய்ந்த பல்லவ அரசர் நிலம் கிரயம் செய்து கொடுத்த விஷயம் தமிழில் பைரவர் கோவில் வடசுவரில் காட்டப்பட்டிருக்கிறது.

இரண்டாவது பிராகாரத்தின் வடசுவரில் ஸகல புவன சக்கரவர்த்தி அவனியாளப் பிறந்தான் என்ற பல்லவ அரசன், சாலிய வர்த்தகர்கள் ஸ்வாமிக்கும் அம்மனுக்கும் வஸ்திரம் கொடுத்து வரவேண்டும் என்ற நிபந்தனையின் மேல் வீடு கட்டிக் கொள்ளக் காலி நிவேசனம் கொடுக்கத் தீர்மானித்த விஷயம் தமிழில் காட்டப்பட்டுளது.

இரண்டாவது பிராகாரத்தின் மேற்கு வாயிலில் இடது புறத்திலுள்ள ஓர் தூணில் மஹா ராஜஸிம்ஹன் என்ற ஓர் அரசன் கோவிலின் கீழ் கோபுரத்தைக் கட்டிவைத்தான் என்ற விஷயம் காட்டப்பட்டிருக்கிறது. கீழ் கோபுர வாயிலின் வலது பார்சத்தில் சோழ குலவல்லி என்றவள் நாயன்மார்களது "பாமாலை" என்ற துதியைச் சொல்லிவைக்க ஏற்பாடுசெய்த விஷயம் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்கு கோபுர வாசலின் வலது புறத்தில் அம்மனது ஐப்பசி பூரத்திருநாள்களின் கொண்டாட்டத்தில் ஒருநாள் செலவைக் கொடுப்பதற்கு ஓர் கிராமம் மானியம் விடப்பட்ட விஷயம் கூறப்பட்டுளது.

மற்றக் கோவில்கள் அமைக்கப்பட்டிருப்பதுபோல் இக்கோவில் கிழக்கு மேற்கில் நீண்டு அமைக்கப்பட்டிராது, தென் வடக்கில் நீளமாக அமைக்கப்பெற்றிருப்பது இங்கு ஒரு சிறப்ப விசேஷம்.

இக்கோவிலுக்கு நான்கு பிராகாரங்கள் உண்டு. இவைகளுள் மூன்றுவதில் "ஆயிரக்கால் மண்டபம்" என்ற மண்டபம் அமைக்கப்பெற்றிருக்கிறது. இங்கிருந்து பார்த்தால் இக்கோயிலுக்குள் உள்ள மற்றைய சிறிய ஸந்நிதிகள் தென்படும்.

இரண்டாவது பிராகாரத்தில் தான் சிவன் கோவிலும், மற்ற தேவதைகளின் கோவில்களும் இருக்கின்றன. தங்க ஓடுகளால் போர்த்தப்பட்டுள்ள 'கனகஸபை' தான் நட

ராஜமூர்த்தியினது நடனஸபை என்பார்கள். இம்மாதிரி ஸபையின் பெருமையைக் காட்டும் இடம் ஐந்து. அவையாவன:—1 கனகசபை (பொன்னம்பலம்) எனப்படும் இச்சிதம்பரம், 2 ரஜதசபை (வெள்ளியம்பலம்) எனப்படும் மதுரை, 3 தாமிரசபை எனப்படும் திருநெல்வேலி, 4 சித்திரஸபை எனப்படும் திருக்குற்றாலம், 5 இரத்தினசபை எனப்படும் திருவாலங்காடு.

எல்லா வெளி கோபுரங்களிலும் பிரைகளில் அமைக்கப்பெற்றிருக்கும் அழகிய சிலைகள் ஜனங்களுக்கு வியப்பைத்தரும்படி ஏற்பட்டிருக்கக் காணலாம். மேற்கு கோபுரத்திலுள்ள சிலைகளுக்குப் பெயர்கள்கூட வெட்டப்பட்டிருக்கின்றன.

பாண்டியநாயகம் என்ற சுப்பிரமணியர் கோவிலும் முக்குறுணி அரிசிப் பிள்ளையார் கோவிலும், சிவகாமி அம்மன் கோவிலும், கோவிந்தராஜப் பெருமாள்கோவிலும் இக்கோவிலுக்குள் அடங்கியுள்ளன.

முக்குறுணி அரிசிப் பிள்ளையார் கோவில் மூன்றாம் பிராகாரத்தின் தென்மேற்கிலிருக்கிறது. முதற் பிராகாரத்தில் தென் மேற்கில் நடராஜ மூர்த்தியினது நடனத்தைத் தரிசனம் செய்ததாகக் கூறப் பட்டுள்ள கோவிந்தராஜப் பெருமாள் கோவில் அமைக்கப் பெற்றிருக்கிறது. இங்குள்ள சண்டிகேசர் கோவிலும் மூர்த்தியும் விசேஷ மஹிமை பெற்றவைகள்.

சிதம்பராலயபரிபாலனம்.

இத்தென்னாட்டிலுள்ள மற்றைய தேவஸ்தானங்களைப் போலல்லாமல் இந்த தேவஸ்தானமட்டும் "தில்லைவாழ் அந்தணர்" என்று வழங்குகிற தீக்ஷிதர்களால் பரிபாலித்து வரப்பெறுகின்றது. இந்ததீக்ஷிதர்கள் நடராஜர் வரும்பொழுதே கூடவந்தவர்களென்றும் நடராஜர் உள்பட இவர்கள் மூவாயிரம்பேர்கள் வந்ததால் இவர்களுக்கு தில்லை மூவாயிரத்தவர்கள் என்று பெயர் வந்ததாகவும் தெரிகிறது. இவர்களிலும் கிருஹஸ்தாசிரமத்தில் இருக்கப்பட்ட எல்லோருக்கும் தர்மகர்த்தா பூஜை முதலிய ஸர்வஸ்வதந்தர பாத்தியங்கள் ஸமமாய் உண்டு. நீண்டகாலங்களில் நடக்கவேண்டிய கார்யங்களுக்கும், அந்தந்த சமயங்களில் நடக்கவேண்டிய கார்யங்களுக்கும், அவ்வப்பொழுது ஒன்றுகூடி நிர்ணயஞ்செய்து அதற்கேற்றவாறு நடத்தி வருகிறார்கள். இந்த தேவஸ்தானத்துக்கு எவ்வித வரவு செலவு கணக்குகள் இல்லாமலும், மூலதனம் முதலிய பொருள் இல்லாமலும், ஸர்க்கார் மோஹினி முதலிய வரும்படி இல்லாமலும் அநாதி காலமாகத் தொடங்கப்பட்ட ஆறுகால நித்ய பூஜாகாலங்களிலும், பிர்ம்மோத்ஸவம் முதலிய உத்ஸவ காலங்களிலும் பக்தர்களால் அபிமானத்தோடு கொடுக்கப்பட்ட பொருள்களைக்கொண்டு வெகுவிமரிசையாக நடந்து வருவது மிகவும் ஆச்சரியப்படத்தக்கது. கோவிலில் நீண்டகாலமாய் இருந்து வருகிற ஆபரணம் தங்கம், வெள்ளிப்பாத்திரங்கள் முதலியவற்றை மிகவும் சிரத்தையோடு காபாற்றிவருகிறார்கள். வேதசாஸ்திர ஞானத்தாலும், ஒழுக்கத்தாலும் அநாதிகாலமாக மேற்கண்ட தீக்ஷிதர்கள் எல்லோராலும் விசேஷமாகப் போற்றப்படுகின்றார்கள். நித்யபூஜைகளும், உத்ஸவங்களும் வைதிகமுறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன.

॥ ताण्डवाष्टकम् ॥

सदञ्चितमुदञ्चितनिकुञ्चितपदं झलज्झलच्चलितमञ्जुकटकं
पतञ्जलिदृगञ्जनमनञ्जनमचञ्चलपदं जननभञ्जनकरम् ।
कदम्बरुचिमम्बरवनं परममम्बुदकदम्बकविडम्बकगलं
चिदम्बुधिमणिं बुधहृदम्बुजरविं परचिदम्बरनटं हृदि भज ॥

हरं त्रिपुरभञ्जनमनन्तकृतकङ्कणमखण्डदयमन्तरहितं
विरिञ्चसुरसंहतिपुरन्दरविचिन्तितपदं तरुणचन्द्रमकुटम् ।
परं पदविखण्डितयमं भसितमण्डिततनुं मदनवञ्चनपरं
चिरन्तनमिमं प्रणतसञ्चितनिधिं परचिदम्बरनटं हृदि भज ॥

अवन्तमखिलं जगदभङ्गगुणतुङ्गममतं धृतविधुं सुरसरि-
त्तरङ्गनिकुरुम्बधृतिलम्पटजटं शमनडम्भहरं भवहरम् ।
शिवं दशदिगन्तरविजृम्भितकरं करलसन्मृगशिशुं पशुपतिं
हरं शशिधनञ्जयपतङ्गनयनं परचिदम्बरनटं हृदि भज ॥ ३ ॥

अनन्तनवरत्नविलसत्कटककिंकिणीझलज्झलझलं झलरवं
मुकुन्दविधिहस्तगतमद्दललयध्वनिधिमिद्धिमितनर्तनपदम् ।
शकुन्तरथबर्हिरथनन्दिमुखदन्तिमुखभृङ्गिरिटिसङ्घनिकटं
सनन्दसनकप्रमुखवन्दितपदं परचिदम्बरनटं हृदि भज ॥ ४ ॥

अनन्तमहसं त्रिदशवन्द्यचरणं मुनिहृदन्तरवसन्तममलं
कबन्धुवियदम्ब्ववनिगन्धवहवह्निमखबन्धुरविमञ्जुवपुषम् ।

अनन्तविभवं त्रिजगदन्तरमणिं त्रिणयनं त्रिपुरखण्डनपरं
सनन्दमुनिवन्दितपदं सकरुणं पराचिदम्बरनटं हृदि भज ॥

अचिन्त्यमलिबृन्दरुचिबन्धुरगलस्फुरितकुन्दनिकुरुम्बधवलं
मुकुन्दसुरबृन्दबलहन्तृकृतवन्दनलसन्तमहिकुण्डलधरम् ।
अकम्पमनुकम्पितरतिं सुजनमङ्गलनिधिं गजहरं पशुपतिं
धनञ्जयनुतं प्रणतरञ्जनपरं पराचिदम्बरनटं हृदि भज ॥ ६ ॥

परं सुरवरं पुरहरं पशुपतिं जनितदन्तिमुखषण्मुखममुं
मृडं कनकपिङ्गलजटं सनकपङ्कजरविं सुमनसं हिमरुचिम् ।
असङ्गमनसं जलधिजन्मगरलं कबलयन्तमतुलं गुणनिधिं
सनन्दवरदं शमितमिन्दुवदनं परचिदम्बरनटं हृदि भज ॥ ७॥

अजं क्षितिरथं भुजगपुङ्गवगुणं कनकश‍ृङ्गिधनुषं करलस-
त्कुरङ्गपृथुटङ्कपरशुरुचिकुङ्कुमरुचिं डमरुकं च दधतम् ।
मुकुन्दविशिखं नमदवन्ध्यफलदं निगमबृन्दतुरगं निरुपमं
सचण्डिकममुं झटिति संहृतपुरं परचिदम्बरनटं हृदि भज ॥८॥

अनङ्गपरिपन्थिनमजं क्षितिधुरन्धरमलङ्करुणयन्तमखिलं
ज्वलन्तमनलं दधतमन्तकरिपुं सततमिन्द्रसुरवन्दितपदम् ।
उदञ्चदरविन्दकुलबन्धुशतबिम्बरुचिसंहतिसुगन्धिवपुषं
पतञ्जलिनुतं प्रणवपञ्जरशुकं परचिदम्बरनटं हृदि भज ॥९॥

इति स्तवममुं भुजगपुङ्गवकृतं प्रतिदिनं पठति यः कृतसुख-
सदः प्रभुपदद्वितयदर्शनपदं सुललितं चरणश‍ृङ्गरहितम् ।
सरःप्रभवसंभवहरित्पतिहरिप्रमुखदिव्यनुतशंकरपदं
स गच्छति परं न तु जनुर्जलनिधिं परमदुःखजनकं दुरितदम् ॥

इति श्री पतञ्जलिकृततताण्डवाष्टकं संपूर्णम् ।

திருஞானஸம்பந்தர் திருவாய்மலர்ந்தருளியது:—

கோயில் முதல்திருமுறை—பண்-குறிஞ்சி.

கற்றாங் கெரியோம்பிக் கலியைவாராமே, செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே, பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 1

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ், சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை, மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே. 2

மையா ரொண்கண்ணார் மாட நெடுவீதிக், கையாற்பந்தோச்சுங் கழிசூழ் தில்லையுட்
பொய்யா மறைபாடல் புரிந்தா னுலகேத்தச், செய்யானுறைகோயில் சிற்றம் பலந்தானே. 3

நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப், பிறைவந் திறைதாக்கும் போம்பலந்தில்லைச்
சிறைவண் டறையோவாச் சிற்றம் பலமேய, விறைவன் கழலேத்து மின்ப மின்பமே. 4

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச், செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய, செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. 5

வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந், திருமாந் தில்லையுட் சிற்றம் பலமேய
கருமா னுரியாடைக் கறைசேர் கண்டத்தெம், பெருமான் கழலல்லாற் பேணா துள்ளமே. 6

அலையார் புனல்சூடி யாகத் தொருபாக, மலையான் மகளோடு மகிழ்ந்தா னுலகேத்தச்
சிலையா லெயிலெய்தான் சிற்றம் பலந்தன்னைத், தலையால் வணங்குவார் தலையா னார்களே. 7

கூர்வா ளரக்கன்றன் வலியைக் குறைவித்துச், சீரா லேமல்கு சிற்றம் பலமேய
நீரார் சடையானை நித்த லேத்துவார், தீரா நோயெல்லாந் தீர்த லிண்ணமே. 8

கோணா கணையானுங் குளிர்தாமரை யானுங், காணார் கழலேத்தக் கனலா யோங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேத்த, மாணா நோயெல்லாம் வாளா மாயுமே. 9

பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடு, முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய, நட்டப்பெருமானைநாளுந் தொழுவோமே. 10

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன், சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை, கோலத் தாற் பாடவல்லார் நல்லாரே. 11

கோயில் மூன்றாம்திருமுறை—பண்—-காந்தாரபஞ்சமம்.

ஆடினாய் நறுநெய்யொடு பாறயி ரந்தணர் பிரியாத சிற்றம்பல
நாடினா யிடமாநறுங் கொன்றை நயந்தவனே
பாடினாய் மறையோடுபல் கீதமும் பல்சடைப் பனிகால்கதிர் வெண்டிங்கள்
சூடினா யருளாய் சுருங்கவெந் தொல் வினையே. 1

கொட்டமே கமழுங்குழ லாளொடு கூடினாயெரு தேறினாய் நுதல்
பட்டமே புனைவாயிசை பாடுவ பாரிடமா
நட்டமே நவில்வாய் மறையோர் தில்லை நல்லவர் பிரியாத சிற்றம்பல
மிட்டமா யுறைவா யிவைமேவிய தென்னை;கொலோ. 2

நீலத் தார்கரிய மிடற்றார் நல்ல நெற்றி மேலுறை கண்ணினார் பற்று
சூலத்தார் சுடலைப்பொடி நீறணிவார் சடையார்
சீலத் தார்தொழு தேத்து சிற்றம்பலஞ் சேர்தலாற் கழற் சேவடி கைதொழக்
கோலத் தாயரு ளாயுன காரணங் கூறுதுமே. 3

கொம்ப லைத்தழ கெய்திய நுண்ணிடைக் கோலவாண் மதி போல முகத்திரண்
டம்ப லைத்தகண் ணான்முலை மேவிய வார்சடையான்
கம்ப லைத்தெழு காமுரு காளையர் காத லாற்கழற் சேவடி கைதொழ
வம்ப லத்துறை வான டியார்க்கடை யாவினையே. 4

தொல்லை யாரமு துண்ணநஞ் சுண்டதோர் தூம ணிமிட றாபகு வாயதோர்
பல்லை யார்தலையிற்பலி யேற்றுழல் பண்டரங்கா
தில்லை யார்தொழு தேத்துசிற் றம்பலஞ் சேர்த லாற்கழற் சேவடி கைதொழ
வில்லை யாம்வினை தானெரி யம்மதி லெய்தவனே. 5

ஆகந் தோயணி கொன்றை யாயன லங்கை யாயம ரர்க்கம ராவுமை
பாகந் தோய்பக வாபலி யேற்றுழல் பண்டரங்கா
மாகந் தோய்பொழின் மல்குசிற் றம்பல மன்னி னாய்மழு வாளி னாயழ
னாகந் தோயரை யாயடி யாரை நண்ணா வினையே. 6

சாதி யார்பளிங் கின்னொடு வெள்ளிய சங்க வார் குழை யாய்திக ழப்படும்
வேதி யாவிகிர் தாவிழ வாரணி தில்லை தன்னு
ளாதி யார்க்கிட மாயசிற் றம்பல மங்கை யாற்றொழ வல்லடி யார்களை
வாதி யாதகலுங்கலி யாமலி தீவினையே. 7

வேயி னார்பணைத் தோளியோ டாடலை வேண்டி னாய்விகிர் தாவுயிர் கட்கமு
தாயி னாயிடு காட்டெரி யாட லமர்ந்தவனே
தீயி னார்கணை யாற்புர மூன்றெய்த செம்மை யாய்திகழ் கின்றசிற் றம்பல
மேயி னாய்கழ லேதொழு தெய்துது மேலுலகே. 8

தாரி னார்விரி கொன்றை யாய்மதி தாங்கு நீள்சடை யாய்தலைவாநல்ல
தேரி னார்மறு கிற்றிரு வாரணி தில்லைதன்னுட்
சீரி னால்வழி பாடொழி யாததோர் செம்மை யாயழ காயசிற் றம்பல
மேரினா லமர்ந் தாயுன சீரடி யேத்துதுமே. 9

வெற்ற ரைழறல் வார்துவ ராடையர் வேடத் தாரவர் கள்ளுரை கொள்ளன்மின்
மற்றவ ருலகின் னவலம் மவைமாற்றகில்லார்
கற்றவர் தொழுதேத்துசிற் றம்பலங் காத லாற்கழற் சேவடிகைதொழ
வுற்ற வருலகின் னுறுதி கொளவல் லவரே. 10

நாறு பூம்பொழி னண்ணிய காழியு ணன்மறை வல்ல ஞான சம்பந்த
னூறு மின்றமி ழாலுயர்ந் தாருறை தில்லைதன்னு
ளேறுதொல்புக ழேந்துசிற் றம்பலத் தீசனை யிசையாற் சொன்ன பத்திவை
கூறு மாறுவல் லாருயர்ந் தாரொடுங் கூடுவரே. 11

அப்பர் என்கிற திருநாவுக்கரசு சுவாமிகள். திருவாய்மலர்ந்தருளியது :

நான்காந்திருமுறை—கோயிற்றிருநேரிசை—பண்-கொல்லி

செஞ்சடைக் கற்றைமுற்றத் திளநிலா வெறிக்குஞ் சென்னி
நஞ்சடை கண்டனாரைக் காணலா நறவநாறு
மஞ்சடை சோலைதில்லை மல்குசிற் றம்பலத்தே
துஞ்சடை யிருள்கிழியத் துலங்கெளி யாடுமாறே. 1

ஏறனா ரேறுதம்பா லிளநில வெறிக்குஞ் சென்னி
யாறனா ராறுசூடி யாயிழை யாளோர்பாகர்
நாறுபூஞ் சோலைத்தில்லை நவின்றசிற் றம்பலத்தே
நீறுமெய்ப் பூசிநின்று நீண்டெரி யாடுமாறே. 2

சடையனார் சாந்தநீற்றர் தனிநிலா வெறிக்குஞ் சென்னி
யுடையனா ருடைதலையி லுண்பதும் பிச்சையேற்றுக்
கடிகொள்பூந் தில்லைதன்னுட் கருதுஞ்சிற் றம்பலத்தே
யடிகழ லார்க்கநின்று வனலெரி யாடுமாறே. 3

பையரா வசைத்தவல்குற் பனிநிலா வெறிக்குஞ் சென்னி
மையரிக் கண்ணியாளு மாலுமோர் பாகமாகிச்
செய்யெரி தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற் றம்பலத்தே
கையெரி வீசிநின்று கனலெரி யாடுமாறே. 4

ஓதினார் வேதம்வாயா லொளிநிலா வெறிக்குஞ் சென்னிப்
பூதனார் பூதஞ்சூழப் புலியுரி யதளனார்தா
நாதனார் தில்லைதன்னு ணவின்றசிற் றம்பலத்தே
காதில்வெண் குழைகடாழக் கனலெரியாடுமாறே. 5

ஓருடம் பிருவராகி யொளிநிலா வெறிக்குஞ் சென்னிப்
பாரிடம் பாணிசெய்யப் பயின்றவெம் பரமமூர்த்தி
காரிடந் தில்லைதன்னுட் கருதுசிற் றம்பலத்தே
பேரிடம் பெறுகநின்று பிறங்கெரி யாடுமாறே. 6

முதற்றனிச் சடையைமூழ்க முகிழ்நிலா வெரிக்குஞ் சென்னி
மதக்களிற் றுரிவைபோர்த்த மைந்தரைக் காணலாகு
மதத்துவண் டறையுஞ்சோலை மல்குசிற் றம்பலத்தே
கதத்ததோ ரரவமாடக் கனலெரி யாடுமாறே. 7

மறையனார் மழுவொன்றேந்தி மணிநிலா வெறிக்குஞ் சென்னி
யிறைவனா ரெம்பிரானா ரேத்துவா ரிடர்க டீர்ப்பார்
சிறைகொணீர்த் தில்லைதன்னுட் டிகழ்ந்தசிற் றம்பலத்தே
யறைகழ லார்க்கநின்று வனலெரி யாடுமாறே. 8

விருத்தனாய்ப் பாலனாகி விரிநிலா வெரிக்குஞ் சென்னி
நிருத்தனார் நிருத்தஞ்செய்ய நீண்டபுன் சடைகடாழக்
கருத்தனார் தில்லைதன்னுட் கருதுசிற் றம்பலத்தே
யருத்தமா மேனிதன்னோ டனலெரி யாடுமாறே. 9

பாலனாய் விருத்தனாகிப் பனிநிலா வெறிக்குஞ் சென்னி
காலனைக் காலாற்காய்ந்த கடவுளார் விடையொன்றேறி
ஞாலமாந் தில்லைதன்னு ணவின்றசிற் றம்பலத்தே
நீலஞ்சேர் கண்டனார்தா நீண்டெரி யாடுமாறே. 10

மதியிலா வரக்கனோடி மாமலை யெடுக்கநோக்கி
நெதியன்றோ ணொரியவூன்றி நீடிரும் பொழில்கள்சூழ்ந்த
மதியந்தோய் தில்லைதன்னுள் மல்குசிற் றம்பலத்தே
யதிசயம் போலநின்று வனலெரி யாடுமாறே. 11

கோயிற்றிருநேரிசை—பண்-கொல்லி.

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
யெத்தினாற் பத்திசெய்கே னென்னை நீ யிகழ வேண்டாம்
முத்தனே முதல் வாதில்லையம்பலத்தாடுகின்ற
அத்தா வுன் னாடல் காண்பா னடியனேன் வந்தவாறே. 1

கருத்தனாய்ப் பாடமாட்டேன் காம்பன தோளிபங்கா
வொருத்தரா லறிய வொண்ணாத் திருவுரு வுடைய சோதீ
திருத்தமாந் தில்லை தன்னுட்டி கழ்ந்த சிற்றம்பலத்தே
நிருத்தநான் காணவேண்டி நேர்பட வந்தவாறே. 2

கேட்டிலேன் கிளைபிரியேன் கேட்குமா கேட்டியாகின்
நாட்டினே னின்றன்பாத நடுப்பட நெஞ்சினுள்ளே
மாட்டினீர் வாளைபாயு மல்கு சிற் றம்பலத்தே
கூட்டமாங் குவிமுலையாள் கூட நீ யாடுமாறே. 3

சிந்தையைத் திகைப்பியாதே செறிவுடை யடிமைசெய்ய
எந்தை நீ யருளிச் செய்யா யாது நான் செய்வதென்னே
செந்தியார் வேள் வியோவாத் தில்லைச் சிற் றம் பலத்தே
யந்தியும் பகலுமாட வடியிணை யலசுங்கொல்லோ. 4

கண்டவா திரிந்துநாளுங் கருத்தினா னின்றன்பாதங்
கொண்டிருந் தாடிப்பாடிக் கூடுவன் குறிப்பினாலே
வண்டுபண் பாடுஞ்சோலை மல்கு சிற் றம் பலத்தே
யெண்டிசை யோருமேத்த விறைவ நீயாடுமாறே. 5

பார்த்திருந் தடியனேனான் பரவுவன் பாடியாடி
மூர்த்தியே யென்பனுன்னை மூவரில் முதல்வனென்பன்
ஏத்துவா ரிடர்கடீர்ப்பாய் தில்லைச்சிற் றம்பலத்துக்
கூத்தாவுன் கூத்துக்காண்பான் கூடநான் வந்தவாறே. 6

பொய்யினைத் தவிரவிட்டுப் புறமலா வடிமைசெய்ய
ஐயநீ யருளிச்செய்யா யாதியே யாதிமூர்த்தி
வையகந் தன்னின்மிக்க மல்குசிற் றம்பலத்தே
பையநுன் னாடல்காண்பான் பரம நான் வந்தவாறே. 7

மனத்தினாற் றிகைத்துநாளு மாண்பலா நெறிகண்மேலே
கனைப்பாரா லென்செய் கேனோ கறையணி கண்டத்தானே
தினைத்தனை வேதங்குன்றாத் தில்லைச்சிற் றம்பலத்தே
யனைத்துநின் னிலயங்காண்பா னடியனேன் வந்தவாறே. 8

நெஞ்சினைத் தூய்மைசெய்து நினைக்குமா நினைப்பியாதே
வஞ்சமே செய்தியாலோ வானவர் தலைவ னேநீ
மஞ்சடைச் சோலைத்தில்லை மல்குசிற் றம்பலத்தே
யஞ்சொலாள் காணநின்று வழகநீ யாடுமாறே. 9

மண்ணுண்ட மாலவனு மலர்மிசை மன்னினானும்
விண்ணுண்ட திருவுருவம் விரும்பினார் காணமாட்டார்

திண்ணுண்ட திருவேமிக்க தில்லைச்சிற் றம்பலத்தே
பண்ணுண்ட பாடலோடும் பரமநீ யாடுமாறே. 10

கோயிற்றிருவிருத்தம்—பண்—கொல்லி.

பாளையுடைக் கமுகோங்கிப்பன்மாட நெருங்கியெங்கும்
வாளையுடைப் புனல்வந்தெறி வாழ்வயற் றில்லைதன்னுள்
ஆளவுடைக் கழற்சிற்றம் பலத்தா னாடல்கண்டாற்
பீளையுடைக்கண்களாற்பின்னைப் போய்த் தொண்டர் காண்பதென்னே 1

பொருவிடை யொன்றுடைப் புண்ணியமூர்த்திபுலி யதளன்
உருவுடை யம்மலை மங்கை மணாளனுலகுக்கெல்லாங்
திருவுடை யந்தணர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
திருவடி யைக்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே 2

தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங்கொண் டெப்பொழுதும்
அடுத்து வணங்கு மயனோடு மாலுக்குங் காண்பரியான்
பொடிக் கொண் டணிந்து பொன்னா கியதில்லைச் சிற்றம்பலவன்
உடுத்த துகில் கண் டகண்கொண்டுமற்றினிக் காண்பதென்னே. 3

வைச்ச பொருணமக் காகுமென்றெண்ணி நமச்சிவாய
அச்சமொழிந்தேனணி தில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர் நந்தி யுந் தியின் மேலசைத்த
கச்சின ழகுகண்டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே 4

செய்ஞ்ஞின்ற நீல மலர்கின்றதில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே. 5

ஊனத்தை நீக்கி யுலகறிவனென்னை யாட்கொண்டவன்
றேனொத் தெனக்கினி யான்தில்லைச் சிற்றம் பலவனெங்கோன்
வானத் தவருய்ய வன்னஞ்சை யுண்டகண் டத்திலங்கும்
ஏனத்தெ யிறுகண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே. 6

தெரித்த கணையாற் றிருபுர மூன்றும்செந் தீயில்மூழ்க
வெரித்த விறைவ னிமையவர் கோமா னிணையடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 7

சுற்றுமமரர் சுரர்பதி நின்றிருப் பாதமல்லாற்
பற்றொன் றிலோமென் றழைப்பப் பரவையு ணஞ்சையுண்டான்
செற்றங் கனங்கனைத் தீவிழித் தான் றில்லையம்பலவ
னெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 8

சித்தத்தெழுந்த செழுங்கமலத்தன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்
முத்தும் வயிரமு மாணிக்கந் தன்னுள் விளங்கிய தூ
மத்த மலர்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே. 9

தருக்கி மிகுத்துத்தன் றோள்வலி யுன்னித் தடவரையை
வரைக்கைக ளாலெடுத் தார்ப்ப மலைமகள் கோன்சிரித்தவ
வரக்கன் மணிமுடி பத்து மணிதில்லை யம்பலவன்
நெருக்கிமிதித்தவிரல்கண்ட கண்கொண்டுகாண்பதென்னே. 10

கோயில் திருவிருத்தம்—பண்—கோல்லி.

கருநட்ட கண்டனை யண்டத் தலைவனைக் கற்பகத்தைச்
செருநட்ட மும்மதி லெய்யவல்லானைச்செந் தீமுழங்கத்
திருநட்ட மாடியைத் தில்லைக் கிறையைச்சிற் றம்பலத்துப்
பெருநட்ட மாடியை வானவர் கோனென்று வாழ்த்துவனே. 1

ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடந்தா னடியவர்க்காச்
சென்று தொழுமின்க டில்லையுட்சிற் றம்பலத்துநட்டம்
என்றுவந் தாயெனு மெம்பெரு மான்றன் றிருக்குறிப்பே. 2

கன்மன வீர்கழி யுங்கருத் தேசொல்லிக் காண்பதென்னே
நன்மன வர்நவி றில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
பொன்மலையில் வெள்ளிக் குன்றது போலப்பொலிந்திலங்கி
யென்மனமேயொன்றிப் புக்கனன் போந்த சுவடில்லையே 3

குனித்த புருவமுங்கொவ்வைச் செவ்வாயிற்குமிண்சிரிப்பும்.
பனித்தசடையும் பவளம் போன்மேனியிற்பால் வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே. 4

வாய்த்தது நந்தமக் கீதோ பிறவி மதித்திடுமின்
பார்த்தற்குப்பாசுபதமருள் செய்தவன்பத்தருள்ளீர்
கோத்தன்று முப்புரந் தீவளைத் தான் றில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன் றோநந்தங்கூழைமையே. 5

பூத்தன பொற்சடை பொன் போன்மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி யரித்தன பல்குறட் பூதகணந்
தேத்தென வென்றிசை வண்டுகள் பாடுசிற் றம்பலத்துக்
கூத்தனிற் கூத்துவல்லாருளரோ வென்றன் கோல்வளைக்கே. 6

முடிகொண்ட மத்தமு முக்கண்ணி னோக்கு முறுவலிப்புந்
துடிகொண்ட கையுந்துதைந்த வெண்ணீறுஞ்சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்தோலுமென்பாவிநெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை யம்பலக்கூத்தன்குரைகழலே. 7

படைக்கல மாகவுன் னாமத்தெழுத்தஞ்செ னாவிற்கொண்டேன்
இடைக்கல மல்லே னெழுபிறப் பும்முனக் காட்செய்கின்றேன்
றுடைக்கினும் போகேன் றொழுது வணங்கித்தூ நீறணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச் சிற்றம் பலத்தவனே. 8

பொன்னொத்த மேனிமேல் வெண்ணீ றணிந்து புரிசடைக்கண்
மின்னொத் திலங்கப் பலிதேர்ந் துழலும் விடங்கர்வேடச்

சின்னத்தி ளுன்மலி தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்னத்த னுடல்கண் டின்புற்ற தாலிவ் விருநிலமே. 9

சாட வெடுத்தது தக்கன்றன் வேள்வியிற் சந்திரனை
வீட வெடுத்தது காலனை நாரண னுன்முகனுந்
தேட வெடுத்தது தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
ஆட வெடுத்திட்ட பாதமன் றேநம்மை யாட்கொண்டதே. 10

ஐந்தாம்திருமுறை—திருக்குறுந்தொகை.

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம், பொன்னம் பாலிக்கு மேலுமிப்பூ மிசை
யென்னம் பாலிக்கு மாறுகண் டின்புற வின்னம், பாலிக்கு மோவிப் பிறவியே. 1

அரும்பற் றப்பட வாய்மலர் கொண்டுநீர், சுரும்பற் றப்படத்தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன், பெரும்பற் றப்புலி யூரெம் பிரானையே. 2

அருச்சுற் றவினை யாலடர்ப் புண்டுநீ, ரெரிச்சுற் றக்கிடந் தாரென் றயலவர்
சிரிச்சுற் றுப்பல பேசப் படாமுன்னந், திருச்சிற் றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே. 3

அல்ல லென்செயு மருவினை யென்செயுந், தொல்லை வல்வினைத் தொண்டந்தா னென்செயுந்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க் கெல்லை, யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே. 4

ஊனி லாவி யுயிர்க்கும் பொழுதெலா, நானிலாவியிருப்பனென் னுதனைத்
தேனி லாவிய சிற்றம் பலவனார், வானி லாவி யிருக்கவும் வைப்பரே. 5

சிட்டர் வானவர் சென்று வரங்கொளுஞ், சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லுமச், சிட்டர் பாலணு கான்செறு காலனே. 6

ஒருத்த னுருல கங்கட் கொருசுடர், திருத்தனார் தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்த னாரிளை யார்விட முண்டவெம், அருத்த னாடி யாரை யறிவரே. 7

விண்ணி றைந்ததோர் வெவ்வழ லின்னுறு, வெண்ணி றைந்த விருவர்க் கறிவொணுக்
கண்ணி றைந்த கடிபொழி லம்பலத் துண்ணி, றைந்து நின் றாடு மொருவனே. 8

வில்லை வட்டப்பட வாங்கி யவுணர்தம், வல்லை வட்டம் மதின் மூன்றுடன் மாய்த்தவன்
றில்லை வட்டத்திசை கைதொழு வார்வினை, யொல்லை வட்டங்கடந் தோடுத லுண்மையே. 9

நாடி நாரணனுன்முக னென்றிவர், தேடியுந் திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத், தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே. 10

மதுர வாய்மொழி மங்கை யோர் பங்கினன், சதுரன் சிற்றம் பலவன் றிருமலை
யதிர வார்த்தெடுத் தான்முடி பத்திற, மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே. 11

பனைக்கைமும்மத வேழ முரித்தவ, னினைப்ப வர்மனங்கோயிலாக் கொண்டவ
னனைத்தும் வேடமா மம்பலக் கூத்தனைத், தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ. 12

தீர்த்தனைச் சிவனைச் சிவலோகனை, மூர்த்தியை முதலாய வொருவனைப்
பார்த்த னுக்கருள் செய்தசிற் றம்பலக், கூத் தனைக்கொடி யேன்மறந் துய்வனோ. 13

கட்டும் பாம்புங் கபாலங்கை மான்மறி, யிட்ட மாயிடு காட்டெரி யாடுவான்
சிட்டர் வாழ்தில்லை யம்பலக் கூத்தனை, யெட்ட னைப்பொழு தும்மறந் துய்வனோ. 14

மாணி பால்கறந் தாட்டி வழிபட, நீணு லகெலா மாளக் கொடுத்தவ
னணியச் செம்பொனம் பலத்துண்ணின்ற, தாணுவைத்த மியேன் மறந்துய் வனோ. 15

பித்தனைப்பெருங் காடரங் காவுடை, முத்தனை முளை வெண் மதி சூடியைச்
சித் தனைச்செம் பொனம்பலத் துண்ணின்ற, வத்த னையடி யேன் மறந் துய்வனோ. 16

நீதியை நிறைவை மறைநான்குட, னோதியையொருவர்க்கு மறிவொணாச்
சோதி யைச்சுடர்ச் செம்பொனி னம்பலத் தாதியை யடியேன் மறந்துய்வனோ. 17

மைகொள் கண்டனெண் டோளன் முக் கண்ணினன், பைகொள் பாம்பரை யார்த்த பரமனார்
செய்ய மாதுறை சிற்றம் பலத்தெங்க, ளைய னையடி யேன் மறந் துய்வனோ. 18

முழுதும் வானுலகத் துள தேவர்கள் தொழுது போற்றியுந் ய செம் தூபொன்னினா
லெழுதி மேய்ந்த சிற் றம்பலக் கூத்தனை, யிழுதை யேன் மறந் தெங்ஙன முய்வனோ. 19

காரு லா மலர்க் கொன்றையந் தாரனை, வாரு லாமுலை மங்கை மணாளனைத்
தேரு லாவிய தில்லையுட் கூத்தனை, யார்கிலா வமுதை மறந்துய்வனோ. 20

ஓங்கு மால் வரை யேந்த லுற்றான் சிரம், வீங்கி விம்முற வூன்றிய தாளினான்
றேங்கு நீர்வயல் சூழ்தில்லைக் கூத்தனைப், பாங்கிலாத் தொண்ட னேன் மறந் துய்வனோ. 21

ஆறாந்திருமுறை—பெரியதிருத்தாண்டகம்.

அரியானை யந்தணர்தஞ் சிந்தை யானை யருமறையி னகத்தானையணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப்,பாலைத் திகழொளியைத் தேவர் கடங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக் கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே 1

கற்றானைக் கங்கைவார் சடையான் றன்னைக் காவிரிசூழ் வலஞ் சுழியுங்கருதினானை
யற்றானையலர்ந்தார்க்கு மருள்செய்வானை யாரூரும் புகுவானை யறிந்தோமன்றே
மற்றாருந் தன்னொப்பா ரில்லாதானை வானவர்க ளெப்பொழுதும் வணங்கி யேத்தப்
பெற்றானைப் பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 2

கருமானி னுரியதளே யுடையா வீக்கிக் கனைகழல்கள் கலந் தொலிப்ப வனல் கையேந்தி
வருமானத் திரடோள்கள் மட்டித் தாட வளர்மதியுஞ் சடைக் கணிந்து மானேர் நோக்கி
யருமான வாண் முகத்தா ளமர்ந்துகாண வமரர்கணமுடி வணங்க வாடுகின்ற
பெருமானைப் பெரும்பற்றப் புலியூரானைப்பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 3

அருந்தவர்க டொழுதேத்து மப்பன்றன்னை யமரர்கடம் பெருமானை யரனைமூவா
மருந்தமரர்க் கருள் புரிந்த மைந்தன்றன்னை மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்தொளிய தாரகையுந் திசைகளெட்டுந் திரிசுடர்க ளோரிரண்டும் பிறவுமாய
பெருந்தகையைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவா நாளே. 4

அருந்துணையையடியார் தம்மல்லறீர்க்கு மருமருந்தையகன் ஞாலத்தகத்துட்டோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு வான்புலன் களகத் தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும் பயனைப்போகமாற்றிப்பொதுநீக்கித்தனை நினையவல்லோர்க்கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே 5

கரும்பமரு மொழிமடவாள் பங்கன்றன்னைக் கனவயிரக் குன்றதனைக் காட்சி யானை
யரும்பமரும் பூங்கொன்றைத்தாரான்றன்னை யருமறையோடாறங்கமாயினானைச்
சுரும்பமருங்கடி பொழில்கள் சூழ்தென்னாரூர்ச் சுடர்க்கொழுந்தைத்துளக்கிலாவிளக்கைமிக்க
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. 6

வரும்பயனை யெழுநரம் பினோசையானை வரைசிலையா வானவர்கள் முயன்ற வாளி
யரும்பயஞ்செ யவுணர்புர மெரியக் கோத்த வம்மானை யலைகடனஞ் சயின்றான் றன்னைச்

சுரும்பவிழுங் குழன் மடவார் கடைக்க ணோக்கிற் றுளங்காத சிந்தையராய்த் துறந்தோ ருள்ளப்
பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே 7

காரானையீருரிவைப் போர்வையானைக் காமரு பூங்கச்சியே கம்பன் றன்னை
யாரேனு மடியவர்கட் கணியான் றன்னை யமரர்களுக்கரிவரிய வளவி லானைப்
பாரோரும் விண்ணோரும் பணியகட்டம் பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனையெண்ணில்
பேரானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாதநாளெல்லாம் பிறவா நாளே. 8

முற்றாத பான் மதியஞ் சூடினானை மூவுலகுந்தானாய முதல்வன் றன்னைச்
செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான்றன்னைத் திகழொளியை மரகதத்தைத் தேனைப் பாலைக்
குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன் றன்னைக் கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றார்கள் பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 9

காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங் கடிக்கமலத் திருந்தயனுங் காணவண்ணஞ்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத் திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்
ஏரொளியை யிருநிலனும் விசும்பும் விண்ணு மேழுல குங்கடந் தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. 10

புக்கதிருத்தாண்டகம்.

மங்குன் மதிதவழுமாடவீதி மயிலாப்பிலுள்ளார் மருகலுள்ளார்
கொங்கிற் கொடுமுடியார் குற்றாலத்தார் குடமூக்கிலுள்ளார் போய்க்கொள்ளம்பூதூர்
தங்குமிடமறியார் சாலநாளார் தருமபுரத்துள்ளார் தக்களூரார்
பொங்கு வெண்ணீறணிந்து பூதஞ்சூழப்புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 1

நாகமரைக்கசைத்த நம்பரிந்நாள் நனிபள்ளியுள்ளார் போய் நல்லூர்த் தங்கிப்
பாகம் பொழுதெல்லாம் பாசூர்த்தங்கிப் பருதிநியமித்தார் பன்னிருநாள்
வேதமும் வேள்விப்புகையுமோ வாவிரிநீர் மிழலை யெழுநாட்டங்கி
போகமும் பொய்யாப் பொருளுமானார் புலியூர்ச்சிற்றம்பலமே புக்கார்தாமே. 2

துறங்காட்டி யெல்லாம் விரித்தார் போலுந் தூமதியும் பாம்புமுடையார் போலு
மறங்காட்டி மும்மதிலுமெய்தார் போலு மந்திரமுந்தந்திரமும் தாமே போலும்
அறங்காட்டி யந்தணர்க்கன்றாலநீழ லற மருளிச் செய்தவரானிந்நாட்
புறங்காட்டெரியாடிப் பூதஞ்சூழப் புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 3

வாரேறு வனமுலையாள் பாகமாக மழுவாள் கையேந்தி மயானத்தாடிச்
சீரேறு தண்வயல் சூழோத வேலி திருவாஞ்சியத்தார் திருநள்ளாற்றார்
காரேறு கண்டத்தார் காமற் காய்ந்த கண்விளக்குநெற்றியார் கடனஞ்சுண்டார்
போரேறு தாமேறிப் பூதஞ்சூழப் புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 4

காரார் கமழற் கொன்றைக் கண்ணி சூடிக் கபாலங்கையேந்திக் கணங்கள் பாட
வூராரிடும் பிச்சை கொண்டுழ லு முத்தமராய் நின்றவொருவனார்தாஞ்
சீரார்கழல் வணங்குந் தேவ தேவா திருவாரூர்த் திருமூலத்தானமேயார்
போரார் விடையேறிப் பூதஞ்சூழப் புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 5

காதார்குழையினர் கட்டங்கத்தார் கயிலாயமாமலையார் காரோணத்தார்
மூதாயர் மூதாதையில்லார் போலு முதலு மிறுதியுந்தாமே போலு
மாதாய மாதர் மகிழவன்று மன்மதவேள்தன்னுடலங்காய்ந்தாரிந்நாட்
போதார்சடைதாழப்பூதஞ்சூழப் புலியூர்ச்சிற்றம்பலமே புக்கார்தாமே. 6

இறந்தார்க்கு மென்று மிறவாதர்க்கு மிமையவர்க்கு மேகமாய் நின்றுசென்று
பிறந்தார்க்கு மென்றும் பிறவாதர்க்கும் பெரியான்றன் பெருமையே பேசிநின்று
மறந்தார்மனத் தென்று மருவார்போலு மறைக்காட் டுறையுமழு வாட்செல்வர்
புறந்தாழ் சடைதாழப் பூதஞ்சூழப் புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார்தாமே. 7

குலாவெண் ணெடுமாலை யென்புபூண்டு குளிர்கொன்றைத் தாரணிந்துகொல் லேறேறிக்
கலாவெண் களிற்றுரிவைப் போர்வை மூடிக்கை யோடனலேந்திக் காடுறைவார்
நிலாவெண் மதியுரிஞ்ச நீண்டமாட நிறைவயல் சூழ்நெய்த்தான மேயசெல்வர்
புலால்வெண் டலையேந்திப் பூதஞ்சூழப் புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார்தாமே. 8

சந்தித்த கோவணத்தர் வெண்ணூன்மார்பர் சங்கரனைக் கண்டீரோ கண்டோமிந்நாள்
பந்தித்த வெள்விடையைப் பாயவேறிப் படுதலையி லென்கொலோ வேந்திக்கொண்டு
வந்திங்கென் வெள்வளையுந் தாமுமெல்லா மணியாரூர் நின்றந்தி கொள்ளக்கொள்ளப்
பொன்றிமணி விளக்குப் பூதம்பற்றப் புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார்தாமே. 9

பாதங்க ணல்லார் பரவியேத்திப் பத்திமையாற் பணிசெய்யுந் தொண்டர்தங்கள்
ஏதங்க டீர விருந்தார்போலு மெழுபிறப்பு மாளுடைய வீசனார்தாம்
வேதங்களோதி யோர்வீணை யேந்திவிடை யொன்றுதா மேறி வேதகீதர்
பூதங்கள்சூழப் புலிதோல் வீக்கிப் புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார்தாமே. 10

பட்டுடுத்துத் தோல்போர்த்துப் பாம்பொன் றார்த்துப் பகவனார் பாரிடங்கள் சூழநட்டஞ்
சிட்டராய்த் தீயேந்திச் செல்வார்தம்மைத் தில்லைச்சிற் றம்பலத்தே கண்டோ மிந்நாள்
விட்டிலங்கு சூலமே வெண்ணூ லுண்டே யோதுவதும் வேதமே வீணையுண்டே
கட்டங்கங்கை யதேசென்று காணீர் கறைசேர் மிடற்றெங் கபாலி யார்க்கே. 11

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாய்மலர்தருளியது :—

ஏழாந்திருமுறை—பண்-குறிஞ்சி.

மடித்தாடு மடிமைக்க ணன்றியே மனனேநீ வாழு நாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடுங் கரதலத்திற் றமருகமு மெரியகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடும் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 1

பேராது காமத்திற் சென்றாற்போலன்றியே பிரியா துள்கிச்
சீரார்ந்த வன்பராய்ச் சென்றுமுன் னடிவீழுந் திருவி னாரை
யோராது தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான்
பேராளர் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 2

நரியார்கங் கள்ளத்தாற் பக்கானபரி சொழிந்து நாளு முழ்கிப்
பிரியாத வன்பராய்ச் சென்றுமுன் னடிவீழுஞ் சிந்தை யாரைத்
தரியாது தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான்
பெரியோர்கள் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 3

கருமையார் தருமனார் தமர்நம்மைக் கட்டியகட் டறுப்பிப் பானை
யருமையாந் தன்னுலகந் தருவானை மண்ணுலகங் காவல் பூண்ட
வுரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையாற் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே 4

கருமானி னுரியாடைச் செஞ்சடைமேல் வெண்மதியக் கண்ணி யானை
யுருமன்ன கூற்றத்தை யுருண்டோட வுதைத்து கந்துலவா வின்பக்
தருவானைத் தருமனார் தமர்செக்கி விடும்போது தடுத்தாட் கொள்வான்
பெருமானார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பேற்றா மன்றே. 5

உய்த்தாடித் திரியாதே யுள்ளமே யொழிகண் டாயூன் கணோட்ட
மெத்தாலுங் குறைவில்லை யென்பர் காணெஞ்ச மேநம்மை நாளும்
பைத்தாடு மரவினன் படர்சடையன் பரஞ்சோதி பாவந் தீர்க்கும்
பித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 6

முட்டாத முச்சந்தி மூவா யிரவர்க்கு மூர்த்தி யென்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார் பாவமும் வினையும் போக
விட்டானை மலையெடுத்த விராவணனைத் தலைபத்து நெரியக் காலாற்
றொட்டானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பேற்றா மன்றே. 7

கற்றானுங் குழையுமா றன்றியே கருமா கருத கிற்றார்க்
செற்றாதுங் குறைவில்லை யென்பர்கா ணுள்ளமே நம்மை நாளுஞ்
செற்றாட்டித்தருமனார் தமர்செக்கி விடும்போது தடுத்தாட் கொள்வான்
பெற்றேறிப் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 8

காடுடைய காதன்பா னன்றென்று செய்மனமே நம்மை நாளுந்
தாடுடைய தருமனார் தமர்செக்கி விடும்போது தடுத்தாட் கொள்வான்
மோடுடைய சமணர்க்கு முடையுடைய சாக்கியர்க்கு மூடம் வைத்த
பீடுடைய புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே. 9

பாரூரு மாவல்கு லுமைநங்கை யவள்பங்கன் பைங்கணேற்ற
னாரூரன் றருமனார் தமர்செக்கி விடும்போது தடுத்தாட் கொள்வா
னாரூரன் றம்பரா னாரூரன் மீகோங்கி லணிகாஞ்சி வாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றா மன்றே. 10

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியது:—

கோயின்மூத்த திருப்பதிகம்.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
யடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
னடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே. 1

முன்னின் றாண்டா யெனைமுன்ன மியானு மதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன் பிற்பட் டொழிந்தேன் பெம்மானே
யென்னின் றருளி வரநின்று போந்தி டென்னா விடிலடியா
ருன்னின் றிவனா ரென்னாரோ பொன்னம் பலக்கூத் துகந்தானே. 2

உகந்தா னேயன் புடையடிமைக் குருகா வுள்ளத் துணர்விலியேன்
சகந்தா னறிய முறையிட்டாற் றக்க வாறன் றென்னாரோ
மகந்தான் செய்து வழிவந்தார் வாழ வாழ்ந்தா யடியேற்குன்
முகந்தான் றாரா விடின்முடிவேன் பொன்னம் பலத்தெம் முழுமுதலே. 3

முழுமுத லேயைம் புல்னுக்கு மூவர்க்கு மென்றனக்கும்
வழிமுத லேநின் பழவடி யார்திரள் வான்குழுமிக்
கெழுமுத லேயரு டந்திருக்க விரங்குங் கொல்லோவென்
றழுமது வேயன்றி மற்றென் செய்கேன் பொன்னம் பலத்தரசே. 4

அரைசே பொன்னம் பலத்தாடு மமுதே யென்றுன் னருணோக்கி
யிரைதேர் கொக்கொத் திரவுபக லேசற் றிருந்தே வேசற்றேன்
கரைசே ரடியார் களிசிறப்பக் காட்சி கொடுத்துன் னடியேன்பாற்
பிரைசேர் பாலி னெய்போலப் பேசா திருந்தா லேசாரோ. 5

ஏசா நிற்ப ரென்னையுனக் கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்ப ரியான்றானும் பேணா நிற்பே னின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந் திருவோ லக்கஞ் சேவிக்க
வீசா பொன்னம் பலத்தாடு மெந்தா யினித்தா னிரங்காயே. 6

இரங்கு நமக்கம் பலக்கூத்த னென்றென் றேமாந் திருப்பேனை
யருங்கற் பனைகற் பித்தாண்டா யாள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கு மடியார் களுநீயு நின்று நிலாவி விளையாடு
மருங்கே சார்ந்து வரவெங்கள் வாழ்வே வாவென் றருளாயே. 7

அருளா தொழிந்தா லடியேனை யஞ்சே லென்பா ராரிங்குப்
பொருளா வென்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து வருந்து வேனை வாவென்றுன்
றெருளார் கூட்டங் காட்டாயேற் செத்தே போனாற் சிரியாரோ. 8

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் றிருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன் றிருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந் தலைவா வென்பா ரவர்முன்னே
நரிப்பாய் நாயே னிருப்பேனோ நம்பி யினித்தா னல்காயே. 9

நல்கா தொழியா னமக்கென்றுன் னாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா வணங்கா மனத்தா னினைந்துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப் பரவிப் பொன்னம் பலமென்றே
யொல்கா நிற்கு முயிர்க்கிரங்கி யருளா யென்னை யுடையானே. 10

திருமாளிகைத்தேவர் திருவாய்மலர்ந்தருளியது :—

திருப்பதிகம்—பண் - பஞ்சமம்.

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே சித்தத்துட் டித்திக்குந் தேனே
யளிவள ருள்ளத் தானந்தக் கனியே யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே. 1

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னு ளிருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந் தூயநற் சோதியுட் சோதீ
யடல்விடைப் பாகா வம்பலக்கூத்தா வயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத் தொண்டனேன் பணியுமா பணியே. 2

தற்பரம் பொருளே சசிகண்ட சிகண்டா சாமகண் டாவண்ட வாணா
நற்பெரும் பொருளா யுரைகலந் துன்னை யென்னுடை நாவினா னவில்வா
னற்பனென் னுள்ளத் தளவிலா வுன்னைத் தந்தபொன் னம்பலத் தாடீ
கற்பமா யுலகா யல்லையா னாயைத் தொண்டனேன் கருதுமா கருதே. 3

பெருமையிற் சிறுமை பெண்ணொடா ணாயென் பிறப்பிறப் பறுத்தபே ரொளியே
கருமையின் வெளியே கயற்கணா ளிமவான் மகளுமை யவள்களை கண்ணே
யருமையின் மறைநான் கோலமிட் டரற்று மப்பனே யம்பலத் தமுதே
யொருமையிற் பலபுக் குருவினின் றாயைத் தொண்டனே னுரைக்குமா றுரையே. 4

கோலமே மேலை வானவர் கோவே குணங்குறி யிறந்ததோர் குணமே
காலமே கங்கை நாயகா வெங்கள் காலகா லாகாம நாசா
வாலமே யமுதுண்டம் பலஞ்செம் பொற்கோயில் கொண்டாட வல்லானே
ஞாலமே தமியேனற் றவத்தாயைத் தொண்டனே னணுகுமா றணுகே. 5

நீறணி பவளக்குன் றமே நின்ற நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவனபோகமே யோக வெள்ளமே மேருவில் வீரா
வாறணி சடையெம்மற் புதக்கூத்தா வம்பொன் செயம்பலத் தரசே
யேறணி கொடியெம் மீசனே யுன்னைத் தொண்டனே னிசையுமா றிசையே. 6

தனதனற் றோழா சங்கரா சூல பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே கண்கண்மூன் றுடையதோர் கரும்பே
யனகனே குமர விநாயக சனக வம்பலத் தமரசே கரனே
யுனகழ லிணையென் னெஞ்சினு ளினிதாத் தொண்டனே னுகருமா றுகரே. 7

திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே திகைக்கின்றேன் றனைத்திகை யாமே
நிறம்பொன்னு மின்னு நிறைந்தசே வடிக்கீழ் நிகழ்வித்த நிகரிலா மணியே
யறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசா யாலின்கீ ழிருந்தவம் பலவா
புறஞ்சமண் புத்தப் பொய்கள்கண் டாயைத் தொண்டனேன் புணருமா புணரே. 8

தக்கனற் றலையு மெச்சன்வன் றலையுந் தாமரை நான்முகன் றலையு
மொக்கவிண் டுருள வொண்டிருப் புருவ நெறித் தரு ளியவுருத் திரனே
யக்கணி புலித்தோ லாடைமே லாட வாடப் பொன்னம்பலத் தாடுஞ்
சொக்கனே யெவர்க்குந் தொடர்வரி யாயைத் தொண்டனேன் றொடருமா தொடரே. 9

மடங்கலாய்க் கனகன் மார்புகீண் டானுக் கருள்புரி வள்ளலே மருளா
ரிடங்கொண்முப் புரம்வெந் தவியவை திகத்தே ரேறிய வேறுசே வகனே
யடங்கவல் லரக்க னருட்டிரு வரைக்கீ ழடர்த்தபொன் னம்பலத் தரசே
விடங்கொள்கண் டத்தெம் விடங்கனே யுன்னைத் தொண்டனேன் விரும்புமா விரும்பே. 10

மறைகளு மமரர் கூட்டமு மாட்டா தயன்றிரு மாலொடு மயங்கி
முறைமுறை முறையிட் டோர்வரி யாயை மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிக
ளறைகழ லான்சீ ரறிவிலா வெறுமைச் சிறுமையிற் பொறுக்குமம் பலத்து
ணிறைதரு கருணா நிலயமே யுன்னைத் தொண்டனே னினையுமா நினையே. 11

பண்—பஞ்சமம்.

உயர்கொடி யாடை மிடைபட லத்தி னோமதூ மப்பட லத்தின்
பெயர்நெடு மாடத் தகிற்புகைப் படலம் பெருகிய பெரும்பற்றப் புலியூர்ச்
சியரொளி மணிக ணிரந்துசேர் கனக நிறைந்தசிற் றம்பலக் கூத்தா
மயர்வறு மமரர் மகுடந்தோய் மலர்ச்சே வடிகளென் மனத்துவைத் தருளே. 1

கருவளர் மேகத் தகடுதோய் மகுடக் கனகமா ளிகைகலந் தெங்கும்
பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில்சா லெழின்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவதி நிதியந் திரண்டசிற் றம்பலக் கூத்தா
வுருவள ரின்பச் சிலம்பொலி யலம்பு முன்னடிக் கீழதென் னுயிரே. 2

வரம்பிரி வாளை மிளிர்மடுக் கமலங் கரும்பொடு மாந்துமே திகள்சேர்
பரம்பிரி செந்நெற் கழனிச்செங் கழுநீர்ப் பழனஞ்சூழ் பெரும்பற்றப் புலியூர்ச்
சிரம்புணர் முடிவா னவரடி முறையா விறைஞ்சுசிற் றம்பலக் கூத்தா
நிரந்தர முனிவர் நினைதிருக் கணைக்கா னினைந்துநின் றொழிந்ததென் னெஞ்சே. 3

தேர்மலி விழவிற் குழலொலி தெருவிற் கூத்தொலி யேத்தொலி யோத்தின்
பேரொலி பரந்து கடலொலி மலியப் பொலிதரு பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்நில விலயத் திருநடத் தியல்பிற் றிகழ்ந்தசிற் றம்பலக் கூத்தா
வார்மலி முலையாள் வருடிய திரண்மா மணிக்குறங் கடைந்ததென் மதியே. 4

நிறைதழை வாழை நிழற்கொடி நெடுந்தெங் கிளங்கமு குளங்கொணீள் பலமாப்
பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதண முதுமதிற் பெரும்பற்றப் புலியூர்ச்
சிறைகொணீர்த் தரளத் திரள்கொணீத் திலத்த செம்பொற்சிற் றம்பலக் கூத்தா
பொறையணி நிதம்பப் புலியத ளாடைக் கச்சநூல் புகுந்ததென் புகலே. 5

அதுமதி யிதுவென் றலந்தலை நூல்கற் றழைப்பொழிந் தருமறை யறிந்து
பிதுமதி வழிநின் றொழிவிலா வேள்விப் பெரியவர் பெரும்பற்றப் புலியூர்ச்
செதுமதிச் சமணுந் தேருஞ் சேராச் செல்வச்சிற் றம்பலக் கூத்தா
மதுமதி வெள்ளத் திருவயிற் றுந்தி வளைப்புண்டென் னுண்மகிழ்ந் ததுவே. 6

பொருவரைப் புயத்தின் மீமிசைப் புலித்தோல் பொடியணி பூணுநூ லகலம்
பெருவரை புரைதிண் டோளுடன் காணப் பெற்றவர் பெரும்பற்றப் புலியூர்த்
திருமரு வுதரத் தார்திசை மிடைப்ப நடஞ்செய்சிற் றம்பலக் கூத்தா
வுருமரு வுதரத் தனிவடந் தொடர்ந்து கிடந்ததென் னுணர்வுணர்ந் துணர்ந்தே. 7

கணியெரி விசிறு கரந்துடி விடவாய்க் கங்கணஞ் செங்கைமற் றபயம்
பிணிகெட விவைகண் டுன்பெரு நடத்திற் பிரிவிலார் பெரும்பற்றப் புலியூர்த்
திணிமணி நீல கண்டத்தென் னமுதே சீர்கொள்சிற் றம்பலக் கூத்தா
வணிமணி முறுவற் பவளவாய்ச் செய்ய சோதியு ளடங்கிற்றென் னறிவே. 8

திருநெடு மாலிந் திரனயன் வானோர் திருக்கடைக் காவலி னெருக்கிப்
பெருமுடி மோதி யுகுமணி முன்றிற் பிறங்கிய பெரும்பற்றப் புலியூர்ச்
செருநெடு மேரு வில்லின்முப் புரந்தீ விரித்தசிற் றம்பலக் கூத்தா
கருவடி குழைக்கா தமலச்செங் கமல மலர்முகங் கலந்ததென் கருத்தே. 9

ஏர்கொள்கற் பகமொத் திருசிலைப் புருவம் பெருந்தடங் கண்கண்மூன் றுடையுன்
பேர்களா யிரநூ றாயிரம் பிதற்றும் பெற்றியோர் பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்கொள்கொக் கிறகுங் கொன்றையுந் துன்று சென்னிச்சிற் றம்பலக் கூத்தா
நீர்கொள்செஞ் சடைவாழ் மதிபுது மத்த நிகழ்ந்தவென் சிந்தையு ணிறைந்தே. 10

காமனக் காலன் றக்கன்மிக் கெச்சன் படக்கடைக் கணித்தவ னல்லாப்
பேய்மனம் பிறிந்த வப்பெருந் தொண்டர் தொண்டனேன் பெரும்பற்றப் புலியூர்ச்
சேமநற் றில்லை வட்டங்கொண் டாண்ட செல்வச்சிற் றம்பலக் கூத்தா
பூமல ரடிக்கீழ்ப் புராணபூ தங்கள் பொறுப்பரென் புன்சொலின் பொருளே. 11

பண்—பஞ்சமம்.

உறவாகிய யோகமும் போகமுமா யுயிராளி யென்னுமென்பொன் னொருநாட்
சிறவாதவர் புரஞ்செற்ற கொற்றச் சிலைகொண்டு பன்றிப்பின் சென்றுநின்ற
மறவாவென்னும் மணிநீருவி மகேந்திர மாமலை மேலுறையுங்
குறவாவென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 1

காடாடு பல்கணஞ் சூழக்கேழற் கடும்பின் னெடும்பகற் கானடந்த
வேடா மகேந்திர வெற்பாவென்னும் வினையேன் மடந்தைவிம் மாவெருவுஞ்
சேடாவென்னுஞ் செல்வர்மூ வாயிரஞ் செழுஞ்சோதி யந்தணர்செங் கைதொழுங்
கோடாவென்னுங் குணக்குன்றே யென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 2

கானேவரு முரணேன மெய்தகளி யார்புளின நற்காளா யென்னும்
வானேதட வுநெடுங் குடுமி மகேந்திர மாமலை மேலிருந்த
தேனேயென்னுந் தெய்வவாய் மொழியார் திருவாளர் மூவாயிரவர் தெய்வக்
கோனேயென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 3

வெறியேறு பன்றிப்பின் சென்றொருநாள் விசயற்கருள் செய்தவேந் தேயென்னு
மறியேறு சாரன்ம கேந்திரமா மலைமே லிருந்தமருந் தேயென்னு
நெறியேயென்னு நெறிநின்ற வர்க ணினைக்கின்ற நீதிவே தாந்தநிலைக்
குறியேயென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 4

செழுந்தென்ற லன்றிலித் திங்கள்கங்கு றிரைவீரை தீங்குழல் சேவின்மணி
யெழுந்தின்றென் மேற்பகை யாடவாடு மெனைநீ நலிவதென் னேயென்னு
மழுந்தாம கேந்திரத் தந்தரப்புட் காசுக் கரசே யமரர்தனிக்
கொழுந்தேயென்னுங் குணக்குன் றேயென்னும் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 5

வண்டார்குழ லுமைநங்கை முன்னே மகேந்திரச் சாரல்வராகத் தின்பின்
கண்டார்கவல வில்லாடிவேடர் கடிநாயுடன் கைவளைந்தா யென்னும்
பண்டாயமலரயன் றக்கனெச்சன் பகலோன்றலை பற்பசுங்கண்
கொண்டாயென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே 6

கடுப்பாய்ப்பறைகறங்கக்கடுவெஞ்சிலையுங் கணையுங்கவணுங்கைக்கொண்
டுடுப்பாய்தோல்செருப்புச்சுரிகை வராகமுன்னோடிவிளியுளைப்ப
நடப்பாய்மகேந்திரநாதநாதாந்தத் தரையாவென்பார்க்குநாதாந்தபதங்
கொடுப்பாயென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 7

சேவேந்துவெல்கொடியானேயென்னுஞ் சிவனேயென்சேமத் துணையேயென்னு
மாவேந்துசாரன்மகேந்திரத்தில் வளர்நாயகா விங்கேவாராயென்னும்
பூவேந்திமூவாயிரவர்தொழப் புகழேந்துமன்றுபொலியநின்ற
கோவேயென்னுங் குணக்குன் றேயென்னும் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 8

தரவார்புனஞ்சுனைதாழருவித் தடங்கல்லுறையுமடங்கலமர்
மரவார்பொழிலெழில்வேங்கையெங்கு மழைசூழ்மகேந்திரமாமலைமேற்
சுரவாவென்னுஞ்சுடர்நீண்முடிமாலய னிந்திரன்முதற்றேவர்க்கெல்லாங்
குரவாவென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 9

திருநீறிடாவுருத்தீண்டேனென்னுந் திருநீறுமெய்த்திருமுண்டத்திட்டுப்
பெருநீலகண்டன் றிறங்கொண்டிவன் பிதற்றிப்பெருந்தெருவேதிரியும்

வருநீருவிமகேந்திரப்பொன் மலையின்மலைமகளுக்கருளுங்
குருநீயென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 10

உற்றாயென்னுமுன்னையன்றிமற்றொன் றுணரேனென்னுமுணர்வுகள்கலக்கப்
பெற்றாயவைந்தெழுத்தும்பிதற்றிப் பிணிதீரவெண்ணீறிடப்பெற்றேனென்னுஞ்
சுற்றாயசோதிமகேந்திரஞ்சூழ மனத்திருள்வாங்கிச்சூழாதநெஞ்சிற்
குற்றாயென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 11

வேறாகவுள்ளத்துவகைவிளைத் தவனிச்சிவலோகவேதவென்றி
மாறாதமூவாயிரவரையுமெனையும் மகிழ்ந்தாளவல்லாயென்னு
மாறார்சிகரமகேந்திரத்துன் னடியார்பிழைபொறுப்பாய்மாதோர்
கூறாயென்னுங் குணக்குன் றேயென்னுங் குலாத்தில் லையம்பலக் கூத்தனையே. 12

பண்—காந்தாரம்.

இணங்கிலாவீசனேசத்திருந்தசித்தித்தனேற்கு
மணங்கொள்சீர்த்தில்லைவாணன்மணவடியார்கள்வண்மைக்
குணங்களைக்கூறாவீறிற்கோறைவாய்ப்பீறற்பிண்கூடப்
பிணங்களைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 1

எட்டுருவிரவியென்னையாண்டவனீண்டுசோதி
விட்டிலங்கலங்கற்றில்லைவேந்தனைச்சேர்ந்திலாத
துட்டரைத்தூர்த்தவார்த்தைத்தொழும்பரைப்பிழம்புபேசும்
பிட்டரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 2

அருட்டிரட்செம்பொற்சோதியம்பலத்தாடுகின்ற
விருட்டிரட்கண்டத்தெம்மானின்பருக்கன்புசெய்யா
வரட்டரையாட்டுப்பேசுமழுக்கரைக்கழுக்களாய
பிரட்டரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 3

துணுக்கெனவயனுமாலுந்தொடர்வருஞ்சுடராயிப்பா
லணுக்கருக்கணியசெம்பொனம்பலத்தாடிக்கல்லாச்
சிணுக்கரைச்செத்தற்கொத்தைச்சிதம்பரைச்சீத்தையூத்தைப்
பிணுக்கரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 4

திசைக்குமிக்குலவுசீர்த்தித்தில்லைக்கூத்துகந்துதீய
நசிக்கவெண்ணீறதாடுநமர்களைநணுகாநாய்க
ளசிக்கவாரியங்களோதுமாதரைப்பேதவாதப்
பிசுக்கரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 5

ஆடரவாடவாடுமம்பலத்தமிர்தேயென்னுஞ்
சேடர்சேவடிகள்சூடத்திருவிலாவுருவிணாரைச்
சாடரைச்சாட்கைமோடச்சழக்கரைப்பிழக்கப்பிட்கப்
பேடரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 6

உருக்கியென்னுள்ளத்துள்ளேயூறலந்தேறன்மாறாத்
திருக்குறிப்பருளுந்தில்லைச்செல்வன்பாற்செல்லுஞ்செல்வி
லருக்கரையள்ளல்வாயகள்ளரையவியாப்பாவப்
பெருக்கரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 7

செக்கரொத்திரவிநூறாயிரத்திரளொப்பாந்தில்லைச்
சொக்கரம்பலவரென்னுஞ்சுருதியைக்கருதமாட்டா
வெக்கரைக்குண்டமிண்டவெத்தரைப்புத்தராதிப்
பொக்கரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 8

எச்சனைத்தலையைக்கொண்டுசெண்டடித்திடபமேறி
யச்சங்கொண்டமரரோடநின்றவம்பலவற்கல்லாக்
கச்சரைக்கல்லாப்பொல்லாக்கயவரைப்பசுநூல்கற்கும்
பிச்சரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 9

விண்ணவர்மகுடகோடிமிடைந்தொளிர்மணிகள்வீசு
மண்ணலம்பலவன்கொற்றவரசனுக்காசையில்லாத்
தெண்ணரைத்தெருளாவுள்ளத்திருளரைத்திட்டைமுட்டைப்
பெண்ணரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 10

சிறப்புடையடியார்தில்லைச்செம்பொனம்பலவற்காளா
முறைப்புடையடியார்கீழ்க்கீழுறைப்பர்சேவடிநீறாடா
ரிறப்பொடுபிறப்பினுக்கேயினியராய்மீண்டுமீண்டும்
பிறப்பரைக்காணாகண்வாய்பேசாதப்பேய்களோடே. 11

கருவூர்த்தேவர் திருவாய்மலர்ந்தருளியது:—

பண்—புறநீர்மை.

கணம்விரிகுடுமிச்செம்மணிக்கவைநாக் கறையணற்கட்செவிப்பகுவாய்ப்
பணம்விரிதுத்திப்பொறிகொள்வெள்ளெயிற்றுப் பாம்பணிபரமர்தங்கோயின்
மணம்விரிதருதேமாம்பொழின்மொழுப்பின் மழைதவழ்வளரிளங்கமுகந்
திணர்நிரையரும்புபெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 1

இவ்வரும்பிறவிப்பௌவநீர்நீந்து மேழையேற்கென்னுடன்பிறந்த
வைவரும்பகையேயார்துணையென்றா லஞ்சலென்றருள்செய்வான்கோயில்
கைவரும்பழனங்குழைத்தசெஞ்சாலிக் கடைசியர்களைதருநீலஞ்
செய்வரம்பரும்புபெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 2

தாயினேரிரங்குந்தலைவவோவென்றுந் தமியனேன்றுணைவவோவென்று
நாயினேனிருந்துபுலம்பினாலிரங்கி நலம்புரிபரமர்தங்கோயில்
வாயினேரரும்புமணிமுருக்கலர வளரிளஞ்சோலைமாந்தளிர்செந்
தீயினேரரும்புபெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 3

துந்துபிகுழல்யாழ்மொந்தைவானியம்பத் தொடர்ந்திருடியர்கணந்துதிப்ப
நந்திகைமுழவமுகிலெனமுழங்க நடம்புரிபரமர்தங்கோயி
லந்தியின்மறைநான்காரணம்பொதிந்த வரும்பெறன்மறைப்பொருண்மறையோர்
சிந்தையிலரும்பும்பெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 4

கண்பனியரும்பக்கைகண்மொட்டித்தென் களைகணேயோலமென்றோலிட்
டென்பெலாமுருகுமன்பர்தங்கூட்டத்தென்னையும்புணர்ப்பவன்கோயில்
பண்டலதெளிதேன்பாடிநின்றாடப் பனிமலர்ச்சோலைசூழ்மொழுப்பிற்
செண்பகமரும்பும்பெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 5

நெஞ்சிடரகலவகம்புகுந்தொடுங்கு நிலைமையோடிருள்கிழித்தெழுந்த
வெஞ்சுடர்சுடர்வபோன்றொளிதுளும்பும் விரிசடையடிகடங்கோயி
லஞ்சுடர்ப்புரிசையாழிசூழ்வட்டத் தகம்படிமணிநிரைபரந்த
செஞ்சுடரரும்பும்பெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 6

தீத்திரளுருவஞ்செங்கதிர்விரியாப் புந்தியில்வந்தமால்விடையோன்
றாத்திரட்பளிங்கிற்றோன்றியதோற்றந் தோன்றநின்றவன்வளர்கோயி
னூத்திரண்மறையோர்ஹோமகுண்டத்து நறுநெயான்மறையவர்வளர்த்த
தீத்திரளரும்புபெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 7

சீர்த்ததிண்புவனமுழுவதுமேனைத் திசைகளோடண்டங்களனைத்தும்
போர்த்ததம்பெருமைசிறுமைபுக்கொடுங்கும் புணர்ப்புடையடிகடங்கோயி
லார்த்துவந்தமரித்தமரரும்பிறரு மலைகடலிடுதிரைபுனிதத்
தீர்த்தநீரரும்பும்பெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே 8

பின்னுசெஞ்சடையும்பிறைதவழ்மொழுப்பும் பெரியதங்கருணையுங்காட்டி
யன்னதேன்கலந்தின்னமுதுகந்தளித்தாங் கருள்புரிபரமர்தங்கோயில்
புன்னைதேன்சொரியும்பொழிலகங்குடைந்து பொறிவரிவண்டினம்பாடுக்
தென்னதேனரும்பும்பெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 9

உம்பர்நாடிம்பர்விளங்கியாங்கெங்கு மொளிவளர்திருமணிச்சுடர்கான்
றெம்பிரானடஞ்செய்சூழலங்கெல்லா மிருட்பிழம்பறவெறிகோயில்
வம்புலாங்கோயில்கோபுரங்கூடம் வளர்நிலைமாடமாளிகைகள்
செம்பொனுலரும்பும்பெரும்பற்றப்புலியூர்த் திருவளர் திருச்சிற்றம்பலமே. 10

இருந்திரைத்தரளப்பரவைசூழகலத் தெண்ணிலங்கண்ணில்புன்மாக்க
டிருந்துயிர்ப்பருவத்தறிவுறுகருவூர்த் துறைவளர்தீந்தமிழ்மாலை
பொருந்தருங்கருணைப்பரமர்தங்கோயிற் பொழிலகங்குடைந்துவண்டுறங்கச்
செருந்திநின்றரும்பும்பெரும்பற்றப்புலியூர்த் திருவளர்திருச்சிற்றம்பலமே. 11

பூந்துருத்தி நம்பிகாடநம்பி திருவாய்மலர்ந்தருளியது :—

பண்—சாளரபாணி.

முத்துவயிரமணிமாணிக்கமாலைகண்மேற், றொத்துமிளிர்வனபோற்றாண்டுவிளக்கேய்ப்ப
வெத்திசையும்வானவர்களேத்துமெழிற்றில்லை, யத்தனுக்குமம்பலமேயாடரங்கமாயிற்றே. 1

கடியார்கணம்புல்லர்கண்ணப்பரென்று, னடியாரமருலகமானநீயாளாதே
முடியாமுத்தீவேள்விமூவாயிரவரொடுங், குடிவாழ்க்கைகொண்டுநீகுலாவிக்கூத்தாடினையே. 2

அல்லியம்பூம்பழனத்தாமூர்நாவுக்கரசைச், செல்லநெறிவகுத்தசேவகனேதென்றில்லைக்
கொல்லைவிடையேறிக்கூத்தாடரங்காகச், செல்வநிறைந்தசிற்றம்பலமேசேர்ந்தனையே. 3

எம்பந்தவல்வினைநோய்தீர்த்திட்டெமையாளுஞ், சம்பந்தன்காழியர்கோன்றன்னையுமாட்கொ
ண்டருளி
யம்புந்துகண்ணாளுந்தானுமணிதில்லைச், செம்பொன்செயம்பலமேசேர்ந்திருக்கையாயிற்றே. 4

களையாவுடலோடுசேரமானாரூரன், விளையாமதமாறுவெள்ளானைமேல்கொள்ள
முளையாமதிசூடிமூவாயிரவரொடு, மளையாவிளையாடுமம்பலநின்னாடரங்கே. 5

அகலோகமெல்லாமடியவர்கடற்சூழப், புகலோகமுண்டென்றுபுகுமிடநீதேடாதே
புவலோகநெறிபடைத்தபுண்ணியங்கணண்ணியசீர்ச், சிவலோகமாவதுவுந்தில்லைச்சிற்றம்
பலமே. 6

களகமணிமாடஞ்சூளிகைசூழ்மாளிகைமே, லளகமதிநுதலாராயிழையார்போற்றிசைப்ப
வொளிகொண்டமாமணிகளோங்கிருளையாங்ககற்றுங், தெளிகொண்டதில்லைச்சிற்றம்பலமே
சேர்ந்தனையே. 7

பாடகமுநூபுரமும்பல்சிலம்பும்பேர்த்தொலிப்பச், சூடகக்கைநல்லார்தொழுதேத்தத்தொல்
லுலகி
னாடகத்தின்கூத்தைநவிற்றுமவர்நாடோறு, மாடகத்தான்மேய்ந்தமைந்தவம்பலநின்னாடரங்கே.

உருவத்தெரியுருவாயூழிதோறெத்தனையும், பரவிக்கிடந்தயனுமாலும்பணிந்தேத்த
விரவிக்குநேராகியேய்ந்திலங்குமாளிகைசூழ்ந் தரவிக்குமம்பலமேயாடரங்கமாயிற்றே. 9

சேடருறைதில்லைச்சிற்றம்பலத்தான்ற, னாடலதிசயத்தையாங்கறிந்துபூந்துருத்திக்
காடன்றமிழ்மாலைபத்துங்கருத்தறிந்து, பாடுமிவைவல்லார்பற்றுநிலைபற்றுவரே. 10

கண்டராதித்தர் திருவாய்மலர்ந்தருளியது:—

பண்—பஞ்சமம்.

மின்னாருருவமேல்விளங்கவெண்கொடிமாளிகைசூழப்
பொன்னார்குன்றமொன்றுவந்துநின்றதுபோலுமென்னாத்
தென்னாவென்றுவண்டுபாடுந்தென்றில்லையம்பலத்து
ளென்னாரமுதையெங்கள்கோவையென்றுகொலெய்துவதே. 1

ஓவாமுத்தீயஞ்சுவேள்வியாறங்கநான்மறையோ
ராவேபடுப்பாரந்தணாளராகுதிவேட்டுயர்வார்
மூவாயிரவர்தங்களோடுமுன்னரங்கேறிநின்ற
கோவேயுன்றன்கூத்துக்காணக்கூடுவதென்றுகொலோ. 2

முத்தீயாளர்நான்மறையர்மூவாயிரவர்நின்னோ
டொத்தேவாழுந்தன்மையாளரோதியநான்மறையைத்
தெத்தேயென்றுவண்டுபாடுந்தென்றில்லையம்பலத்து
ளத்தாவுன்றனாடல்காணவணைவதுமென்றுகொலோ. 3

மானைப்புரையுமடமென்னோக்கிமாமலையாளோடு
மானஞ்சாடுஞ்சென்னிமேலோரம்புலிசூடுமரன்
றேனைப்பாலைத்தில்லைமல்குசெம்பொனினம்பலத்துக்
கோனைஞானக்கொழுந்துதன்னைக்கூடுவதென்றுகொலோ. 4

களிவானுலகிற்கங்கைநங்கைகாதலனேயருளென்
றொளிமான்முன்னேவரங்கிடக்கவுன்னடியார்க்கருளுந்
தெளிவாரமுதேதில்லைமல்குசெம்பொனினம்பலத்து
ளொளிவான்சுடரேயுன்னைநாயேனுறுவதுமென்றுகொலோ. 5

பாரார்முழுதும்வந்திறைஞ்சப்பதஞ்சலிக்காட்டுகந்தான்
வாரார்முலையாண்மங்கைபங்கன்மாமறையோர்வணங்கச்

சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடுகின்ற
காரார்மிடற்றெங்கண்டனாரைக்காண்பதுமென்றுகொலோ. 6

இலையார்கதிர்வேலிலங்கைவேந்தனிருபதுதோளுமிற
மலைதானெடுத்தமற்றவற்குவாளொடுநாள்கொடுத்தான்
சிலையாற்புரமூன்றெய்தவில்லிசெம்பொனினம்பலத்துக்
கலையார்மறிபொற்கையினானைக்காண்பதுமென்றுகொலோ. 7

வெங்கோல்வேந்தன்றென்னாடுமீழமுங்கொண்டதிறற்
செங்கோற்சோழன்கோழிவேந்தன்செம்பியன்பொன்னணிந்த
வங்கோல்வளையார்பாடியாடுமணிதில்லையம்பலத்து
ளெங்கோனீசனெம்மிறையையென்றுகொலெய்துவதே. 8

நெடியானொடுநான்முகனும்வானவருநெருங்கி
முடியான்முடிகண்மோதியுக்கமுழுமணியின்றிரளை
யடியாரலகினாற்றிரட்டுமணிதில்லையம்பலத்துக்
கடியார்கொன்றைமாலையானைக்காண்பதுமென்றுகொலோ. 9

சீரான்மல்குதில்லைச்செம்பொனம்பலத்தாடிதன்னைக்
காரார்சோலைக்கோழிவேந்தன்றஞ்சையர்கோன்கலந்த
வாராவின்சொற்கண்டராதித்தனருந்தமிழ்மாலைவல்லார்
பேராவுலகிற்பெருமையோடும்பேரின்பமெய்துவரே. 10

வேணாட்டடிகள் திருவாய்மலர்ந்தருளியது :—

பண்—புறநீர்மை.

துச்சானசெய்திடினும்பொறுப்பரன்றேயாளுகப்பார்
கைச்சாலுஞ்சிறுகதலியிலைவெம்புங்கறிகொள்வா
ரெச்சார்வுமில்லாமைநீயறிந்துமெனதுபணி
நச்சாய்காண்டிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 1

தம்பானைசாய்ப்பற்றாரென்னுமுதுசொல்லு
மெம்போல்வார்க்கில்லாமையென்னளவேயறிந்தொழிந்தே
வம்பானார்பணியுகத்திவழியடியேன்றொழிலிறையு
நம்பாய்காண்டிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 2

பொசியாதோகீழ்க்கொம்புநிறைகுளமென்றதுபோலத்
திசைநோக்கிப்பேழ்கணித்துச்சிவபெருமானோவெனினு
மிசையானாலென்றிறத்துமெனையுடையாளுரையாடா
ணசையானேன்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 3

ஆயாதசமயங்களவரவர்கண்முன்பென்னை
நோயோடுபிணிநலியவிருக்கின்றவதனாலே
பேயாவித்தொழும்பனைத்தம்பிரானிகழுமென்பித்தாய்
நாயேனைத்திருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 4

நின்றுநினைந்திருந்துகிடந்தெழுந்துதொழுந்தொழும்பனே
னொன்றியொருகானினையாதிருந்தாலுமிருக்கவொட்டாய்

கன்றுபிரிகற்றாப்போற்கதறுவித்திவரவுநில்லாய்
நன்றிதுவோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 5

படமதமுமிடவயிறுமுடையகளிறுடையபிரா
னடியறியவுணர்த்துவதுமகத்தியனுக்கோத்தன்றே
யிடுவதுபுல்லோரெருதுக்கொன்றினுக்குவையிடுதே
னடுவிதுவோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 6

மண்ணோடுவிண்ணளவுமனிதரொடுவானவர்க்குங்
கண்ணாவாய்கண்ணாகாதொழிதலுநான்மிகக்கலங்கி
யண்ணாவோவென்றண்ணாந்தலமந்துவிளித்தாலு
நண்ணாயாற்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 7

வாடாவாய்காப்பிதற்றியுனைநினைந்துநெஞ்சுருகி
வீடாஞ்செய்குற்றேவலெற்றேமற்றிதுபொய்யிற்
கூடாமேகைவந்துகுறுகுமாறியானுன்னை
நாடாயாற்றிருத்தில்லைநடம்பயிலுநம்பானே. 8

வாளாமாலயன்வீழ்ந்துகாண்பரியமான்பிதனைத்
தோளாரக்கையாரத்துணையாரத்தொழுதாலு
மாளோநீயுடையதுவுமடியேனுன்றாள்சேரு
நாளேதோதிருத்தில்லைநடம்பயிலுநம்பானே 9

பாவார்ந்ததமிழ்மாலைபத்தராடித்தொண்டனெடுத்
தோவாதேயழைக்கின்றானென்றருளிநன்றுமிகத்
தேவேதென்றிருத்தில்லைக்கூத்தாடிநாயடியேன்
சாவாயுநினைக்காண்டலினியுனக்குத்தடுப்பரிதே. 10

திருவாலியமுதனார் திருவாய்மலர்ந்தருளியது :—

பாதாதிகேசம். பண்—பஞ்சமம்.

மையன்மாதொருகூறன்மால்விடை யேறிமான்மறியேந்தியதடங்
கையன்கார்புரையுங்கறைக் கண்டன்கனன்மழுவா
ளையனாரழலாடுவானணி நீர்வயற்றில்லையம்பலத்தான்
செய்யபாதம்வந்தென் சிந்தையுள்ளிடங்கொண்டனவே. 1

சலம்பொற்றாமரைதாழ்ந்தெழுந்த தடமுந்தடம்புனல்வாய்மலர்தழீஇ
யலம்பிவண்டறையுமணி யார்தில்லையம்பலவன்
புலம்பிவானவர்தானவர்புகழ்ந் தேத்தவாடுபொற்கூத்தனார்கழற்
சிலம்புகிங்கிணியென் சிந்தையுள்ளிடங்கொண்டனவே. 2

குருண்டவார்குழற்கோதைமார்குயில் போன்மிழற்றியகோலமாளிகை
திரண்டதில்லைதன்னுட் டிருமல்குசிற்றம்பலவன்
மருண்டுமாமலையான்மகடொழ வாடுங்கூத்தன்மணிபுரைதரு
திரண்டவான்குறங்கென் சிந்தையுள்ளிடங்கொண்டனவே. 3

போழ்ந்தியானைதன்னைப்பொருப்பன் மகளுமையச்சங்கண்டவன்
றாழ்ந்ததண்புனல்சூழ் தடமல்குசிற்றம்பலவன்

சூழ்ந்தபாய்புலித்தோன்மிசைத்தொடுத்து வீக்கும்பொன்னூறன்னினொடு
தாழ்ந்தகச்சதன்றே தமியேனைத்தளர்வித்ததே. 4

பந்தபாசமெலாமறப்பசு பாசநீக்கியயன் முனிவரோ
டந்தணர்வணங்கு மணியார்தில்லையம்பலவன்
செந்தழல்புரைமேனியுந்திக ழுந்திருவயிறும்வயிற்றினு
ளுந்திவான்சுழியென் னுள்ளத் துள்ளிடங்கொண்டனவே. 5

குதிரைமாவொடுதேர்பலகுவிந் தீண்டுதில்லையுட்கொம்பனாரொடு
மதுரவாய்மொழியார் மகிழ்ந்தேத்துசிற்றம்பலவ
னதிரவார்கழல்வீசிநின்றழகாநடம்பயில்கூத்தன்மேற்
றிகழுதாபந்தனமென் னுள்ளத்துள்ளிடங்கொண்டனவே. 6

படங்கொள்பாம்பணையானொடுபிரமன்பரம்பரமாவருளென்று
தடங்கையாற்றொழவுந் தழலாடுசிற்றம்பலவன்
றடங்கைநான்குமத்தோள்களுந்தட மார்பினிற்பூண்கண்மேற்றிசை
விடங்கொள்கண்டமன்றே வினையேனைமெலிவித்ததே. 7

செய்யகோடுடன்கமலமலர்சூழ்தரு தில்லைமாமறையோர்கடாந்தொழ
வையமுய்யநின்று மகிழ்ந்தாடுசிற்றம்பலவன்
செய்யவாயின்முறுவலுந்திகழுந் திருக்காதுங்காதினின்மாத்திரைகளோ
டையதோடுமன்றே யடியேனையாட்கொண்டனவே. 8

செற்றுவன்புரந்தீயெழச்சிலை கோலியாரழலூட்டினானவ
னெற்றிமாமணிக ளெறிநீர்த்தில்லையம்பலவன்
மற்றைநாட்டமிரண்டொடு மலருந்திருமுகமுமுகத்தினு
ணெற்றிநாட்டமன்றே நெஞ்சுளேதிளைக்கின்றனவே. 9

தொறுக்களவான்கமலமலருழக்கக் கரும்புநற்சாறுபாய்தா
மறுக்கமாய்க்கயல்கண் மடைபாய்தில்லையம்பலவன்
முறுக்குவாசிகைதன்னொடுமுகிழ்த்தவவ் வகத்திமொட்டொடுமத்தமும்
பிறைக்கொள்சென்னியன்றே பிரியாதென்னுணின்றனவே. 10

தூவிநீரொடுபூவவைதொழு தேத்துகையினராகிமிக்கதோ
ராவியுண்ணிறுத்தி யமர்ந்தூறியவன்பினராய்த்
தேவர்தாந்தொழவாடியதில்லைக் கூத்தனைத்திருவாலிசொல்லிவை
மேவவல்லவர்கள் விடையானடிமேவுவரே. 11

பண்—நட்டராகம்.

பவளமால்வரையைப்பனிபடர்ந்தனையதோர் படரொளிதருதிருநீறுங்
குவளைமாமலர்க்கண்ணியுங்கொன்றையுந் துன்றுபொற்குழற்றிருச்சடையுந்
திவளமாளிகைசூழ்தருதில்லையுட் டிருநடம்புரிகின்ற
தவளவண்ணனைநினைதொறுமென்மனந் தழன்மெழுகொக்கின்றதே. 1

ஒக்கவோட்டந்தவந்தியுமதியமு மலைகடலொலியோடு
நெக்குவீழ்தருநெஞ்சினைப்பாய்தலு நிறையழிந்திருப்பேனைச்
செக்கர்மாளிகைசூழ்தருதில்லையுட் டிருநடம்வகையாலே
பக்கமோட்டந்தமன்மதன்மலர்க்கணை படுந்தொறுமலந்தேனே. 2

அலந்துபோயினேனம்பலக்கூத்தனே யணிதில்லைநகராளீ
சிலந்தியையரசாள்கவென்றருள்செய்த தேவதேவீசனே
யுலந்தமார்க்கண்டிக்காகியக்காலனை யுயிர்செகவுதைகொண்ட
மலர்ந்தபாதங்கள்வனமுலைமேலொற்ற வந்தருள்செய்யாயே. 3

அருள்செய்தாடுநல்லம்பலக்கூத்தனே யணிதில்லைநகராளீ
மருள்செய்தென்றனைவனமுலைபொன்பயப்பிப்பதுவழக்காமோ
திரளுநீண்மணிக்கங்கையைத்திருச்சடைச் சேர்த்தியச்செய்யாளுக்
குருவம்பாகமுமீந்துநல்லந்தியை யொண்ணுதல்வைத்தோனே. 4

வைத்தபாதங்கண்மாலவன்காண்கிலன் மலரவன்முடிதேடி
யெய்த்துவந்திழிந்தின்னமுந்துதிக்கின்றா னெழின்மறையவற்றாலே
செய்த்தலைக்கமலம்மலர்ந்தோங்கிய தில்லையம்பலத்தானைப்
பத்தியாற்சென்றுகண்டிடவென்மனம் பதைபதைப்பொழியாதே. 5

தேய்ந்துமெய்வெளுத்தகம்வளைந்தாவினை யஞ்சித்தானிருந்தேயுங்
காய்ந்துவந்துவந்தென்றனைவலிசெய்து கதிர்நிலாவெரிதூவு
மாய்ந்தநான்மறையந்தணர்தில்லையு ளம்பலத்தானுடல்
வாய்ந்தமாமலர்ப்பாதங்கள்காண்பதோர் மனத்தினையுடையேற்கே. 6

உடையும்பாய்புலித்தோலுநல்லரவுமு முண்பதும்பலிதேர்ந்து
விடையதூர்வதுமேவிடங்கொடுவரை யாகினுமென்னெஞ்ச
மடைகொள்வாளைகள்குதிகொளும்வயற்றில்லை யம்பலத்தனலாடு
முடையகோவினையன்றிமற்றோரையு முள்ளுவதறியேனே. 7

அறிவுமிக்கநன்னாணுநிறைமையு மாசையுமிங்குள்ள
வுறவும்பெற்றநற்றாயொடுதந்தையு முடன்பிறந்தவரோடும்
பிரியவிட்டுனையடைந்தனனேன்றுகொள் பெரும்பற்றப்புலியூரின்
மறைகணான்குங்கொண்டந்தணரேத்தநன் மானடமகிழ்வானே. 8

வானநாடுடைமைந்தனேயோவென்பன் வந்தருளாயென்பன்
பானெயைந்துடனாடியபடர்சடைப் பால்வண்ணனேயென்பன்
றேனமாபொழில்சூழ்தருதில்லையுட் டிருநடம்புரிகின்ற
வேனமாமணிப்பூணணிமார்பனே யெனக்கருள்புரிவாயே. 9

புரியும்பொன்மதில்சூழ்தருதில்லையுட் பூசுரர்பலர்போற்ற
வெரியதாடுமெம்மீசனைக்காதலித் தினையவண்மொழியாக
வரைசெய்மாமதின்மயிலையர்மன்னவன் மறைவலதிருவாலி
பரவல்பத்திவைவல்லவர்பரமன தடியிணைபணிவாரே. 10

பண்—இந்தளம்.

அல்லாய்ப்பகலாயருவாயுருவாயாராவமுதமாய்க்
கல்லானிழலாய்கயிலைமலையாய்காணவருளென்று
பல்லாயிரம்பேர்பதஞ்சலிகள்பரவவெளிப்பட்டுச்
செல்வாய்மதிற்றில்லைக்கருளித்தேவனாடுமே. 1

அன்னநடையாரமுதமொழியாரவர்கள்பயிறில்லை
தென்னன்றமிழுமிசையுங்கலந்தசிற்றம்பலந்தன்னுட்

பொன்னுமணியுநிரந்ததலத்துப்புலித்தோல்பியற்கிட்டு
மின்னினிடையாளுமையாள்காணவிகிர்தனாடுமே. 2

இளமென்முலையாரெழின்மைந்தரொடுமோராமளிமேற்
றிளையுமாடத்திருவார்தில்லைச்சிற்றம்பலந்தன்னுள்
வளர்பொன்மலையுள்வயிரமலைபோல்வலக்கைகவித்துநின்
றளவில்பெருமையமரர்போற்றவழகனாடுமே. 3

சந்துமகிலுந்தழைப்பீலிகளுஞ்சாதிபலவுங்கொண்
டுந்தியிழியுநிவவின்கரைமேலுயர்ந்தமதிற்றில்லைச்
சிந்திப்பரியதெய்வப்பதியுட்சிற்றம்பலந்தன்னு
ணந்திமுழவங்கொட்டநட்டாதனாடுமே. 4

ஓமப்புகையுமகிலின்புகையுமுயர்ந்துமுகிலோயத்
தீமெய்த்தொழிலார்மறையோர்மல்குசிற்றம்பலந்தன்னுள்
வாமத்தெழிலாரெடுத்தபாதமழலைச்சிலம்பார்க்கத்
தீமெய்ச்சடைமேற்றிங்கள்சூடித்தேவனாடுமே. 5

குரவங்கோங்கங்குளிர்புன்னைகைதைகுவிந்தகரைகண்மேற்
றிரைவந்துலவுந்தில்லைமல்குசிற்றம்பலந்தன்னுள்
வரைபோன்மலிந்தமணிமண்டபத்துமறையோர்மகிழ்ந்தேத்த
வரவமாடவனல்கையேந்தியழகனாடுமே. 6

சித்தர்தேவரியக்கர்முனிவர்தேனார்பொழிற்றில்லை
யத்தாவருளாயணியம்பலவாவென்றென்றவரேத்த
முத்துமணியுநிரந்ததலத்துண்முளைவெண்மதிசூடிக்
கொத்தார்சடைகடாழநட்டங்குழகனாடுமே. 5

அதித்தவரக்கனொரியவிரலாலடர்த்தாயருளென்று
துதித்துமறையோர்வணங்குந்தில்லைச்சிற்றம்பலந்தன்னு
ளுதித்தபோழ்திலிரவிக்கதிர்போலொளிர்மாமணியெங்கும்
பதித்ததலத்துப்பவளமேனிப்பரமனாடுமே. 7

மாலோடயனுமமரர்பதியும்வந்துவணங்கிநின்
றாலகண்டாவரனேயருளாயென்றென்றவரேத்தச்
சேலாடும்வயற்றில்லைமல்குசிற்றம்பலந்தன்னுட்
பாலாடுமுடிச்சடைகடாழப்பரமனாடுமே. 9

நெடியசமணுமறைசாக்கியருநிரம்பாப்பல்கோடிச்
செடியுந்தவத்தோரடையாத்தில்லைச்சிற்றம்பலந்தன்னு
ளடிகளவரையாரூர்நம்பியவர்களிசைபாடக்
கொடியும்விடையுமுடையகோலக்குழகனாடுமே. 10

வானோர்பணியமண்ணோரேத்தமன்னிநடமாடுந்
தேனார்பொழில்சூழ்தில்லைமல்குசிற்றம்பலத்தானைத்
தூநான்மறையானமுதவாலிசொன்னதமிழ்மாலைப்
பானேர்பாடல்பத்தும்பாடப்பாவநாசமே 11

பண்—பஞ்சமம்

கோலமலர்நெடுங்கட்கொவ்வைவாய்க்கொடியேரிடையீர்
பாலினையின்னமுதைப்பரமாயபரஞ்சுடரைச்
சேலுகளும்வயல்சூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தேல்வுடையெம்மிறையையென்றுகொல்காண்பதுவே. 1

காண்பதியானென்றுகொல்கதிர்மாமணியைக்கனலை
யாண்பெண்ணருவுருவென்றறிதற்கரிதாயவனைச்
சேண்பணைமாளிகைசூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பல
மாண்புடைமாநடஞ்செய்மறையோன்மலர்ப்பாதங்களே. 2

கள்ளவிழ்தாமரைமேற்கண்டயனுமோல்பணிய
வொள்ளெரியின்னடுவேயுருவாய்ப்பரந்தோங்கியசீர்த்
தெள்ளியதண்பொழில்சூழ்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
துள்ளெரியாடுகின்றவொருவனையுணர்வரிதே. 3

அரிவையோர்கூறுகந்தானழகன்னெழின்மால்கரியின்
னுரிவைநல்லுத்தரியமுகந்தானும்பரார்தம்பிரான்
புரிபவர்க்கின்னருள்செய்புலியூர்த்திருச்சிற்றம்பலந்
தெரிமகிழ்ந்தாடுகின்றவெம்பிரானென்னிறையவனே. 4

இறைவனையென்கதியையென்னுளேயுயிர்ப்பாகிநின்ற
மறைவனைமண்ணும்விண்ணுமலிவான்சுடராய்மலிந்த
சிறையணிவண்டறையுந்தில்லைமாநகர்ச்சிற்றம்பல
நிறையணியாமிறையைநினைத்தேனினிப்போக்குவனே. 5

நினைத்தேனினிப்போக்குவனோநிமலத்திரளைநினைப்பார்
மனத்தினுளேயிருந்தமணியைமணிமாணிக்கத்தைக்
கனைத்திழியுங்கழனிக்கனகங்கதிரொண்பவளஞ்
சினத்தொடுவந்தெறியுந்தில்லைமாநகர்க்கூத்தனையே. 6

கூத்தனைவானவர்தங்கொழுந்தைக்கொழுந்தாயெழுந்த
மூத்தனைமூவுருவின்முதலைமுதலாகிநின்ற
வாத்தனைத்தான்படிக்குமந்தணர்தில்லையம்பலத்து
ளேத்தநின்றாடுகின்றவெம்பிரானடிசேர்வன்கொலோ. 7

சேர்வன்கொலோவன்னைமீர்திகழும்மலர்ப்பாதங்களை
யார்வங்கொளத்தழுவியணிநீறென்முலைக்கணியச்
சீர்வங்கம்வந்தணவுந்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தேர்வங்கைமான்மறியனெம்பிரானென்போநேசனையே. 8

நேசமுடையவர்கணெஞ்சுளேயிடங்கொண்டிருந்த
காய்சினமால்விடையூர்கண்ணுதலைக்காமருசீர்த்
தேசமிகுபுகழோர்தில்லைமாநகர்ச்சிற்றம்பலத்
தீசனையெவ்வுயிர்க்குமெம்மிறைவனென்றேத்துவனே. 9

இறைவனையேத்துகின்றவினையாண்மொழியின்றமிழான்
மறைவலநாவலர்கண்மகிழ்ந்தேத்துசிற்றம்பலத்தை
யறைசெந்நெல்வான்கரும்பினணியாலைகள்சூழ்மயிலை
மறைவலவாலிசொல்லைமகிழ்ந்தேத்துகவானெளிதே. 10

புருடோத்தமநம்பி திருவாய்மலர்ந்தருளியது:—

பண்—பஞ்சமம்.

வாரணிநறுமலர்வண்டுகிண்டுபஞ்சமஞ்செண்பகமாலைமாலை
வாரணிவனமுலைமெலியும்வண்ணம்வந்துவந்திவைநம்மைமயக்குமாலோ
சீரணிமணிதிகழ்மாடமோங்குதில்லையம்பலத்தெங்கள்செல்வன்வாரா
னாரெனையருள்புரிந்தஞ்சலென்பாராவியின்பரமென்றனாதரவே. 1

ஆவியின்பரமென்றனாதரவுமருவினையேனைவிட்டம்மவம்ம
பாவிவன்மனமிதுபையவேபோய்ப் பனிமதிச்சடையான்பாலதாலோ
நீவியுநெகிழ்ச்சியுநிறையழிவுநெஞ்சமுந்தஞ்சமிலாமையாலே
யாவியின்வருத்தமிதாரறிவாரம்பலத்தருநடமாடுவானே. 2

அம்பலத்தருநடமாடவேயுமியாதுகொல்விளைவதென்றஞ்சிநெஞ்ச
மும்பர்கள்வன்பழியாளர்முன்னேயூட்டினர்நஞ்சையென்றேயுமுய்யேன்
வன்பலபடையுடைப்பூதஞ்சூழவானவர்கணங்களைமாற்றியாங்கே
யென்பெரும்பயலைமைதீரும்வண்ணமெழுந்தருளாயெங்கள்வீதியூடே.. 3

எழுந்தருளாயெங்கள்வீதியூடேயேதமின்முனிவரொடெழுந்தஞானக்
கொழுந்ததுவாகியகூத்தனேநின்குழையணிகாதினின்மாத்திரையுஞ்
செழுந்தடமலர்புரைகண்கண்மூன்றுஞ்செங்கனிவாயுமென்சிந்தைவெளவ
வழுந்துமென்னாருயிர்க்கென்செய்கேனோவரும்புனலலமருஞ்சடையினானே.

அரும்புனலலமருஞ்சடையினானேயமரர்களடிபணிந்தாற்றவந்நாட்
பெரும்புரமெரிசெய்தசிலையின்வார்த்தைபேசவுநையுமென்பேதைநெஞ்சங்
கருந்தடமலர்புரைகண்டவண்டார்காரிகையார்முன்பென்பெண்மைதோற்றேன்
திருந்தியமலரடிநசையினாலேதில்லையம்பலத்தெங்கடேவதேவே. 5

தில்லையம்பலத்தெங்கடேவதேவேதேறியவந்தணர்சிந்தைசெய்யு
மெல்லையதாகியவெழில்கொள்சோதியென்னுயிர்காவல்கொண்டிருந்தவெந்தாய்
பல்லையார்பசுந்தலையோடிடறிப்பாதமென்மலரடிநோவநீபோ
யல்லினிலருநடமாடிலெங்களாருயிர்காவலிங்கரிதுதானே. 6

ஆருயிர்காவலிங்கருமையாலேயந்தணர்மதலைநின்னடிபணியக்
கூர்நுனைவேற்படைக்கூற்றஞ்சாயக்குரைகழல்பணிகொளமலைந்ததென்றா
லாரினிமமரர்கள்குறைவிலாதாரவரவர்படுதுயர்களையநின்ற
சீருயிரேயெங்கடில்லைவாணாசேயிழையார்க்கினிவாழ்வரிதே. 7

சேயிழையார்க்கினிவாழ்வரிதுதிருச்சிற்றம்பலத்தெங்கள்செல்வனேநீ
தாயினுமிகநல்லையென்றடைந்தேன்றனிமையைநினைகிலைசங்கராவுன்
பாயிரும்புலியதளின்னுடையும்பையமேலெடுத்தபொற்பாதமுங்கண்
டேயிவளிழந்ததுசங்கமாவாவெங்களையாளுடையீசனேயோ. 8

எங்களையாளுடையீசனேயோவிளமுலைமுகநெகமுயங்கிநின்பொற்
பங்கயம்புரைமுகநோக்கிநோக்கிப்பனிமதிநிலவதென்மேற்படாச்
செங்கயல்புரைகண்ணிமார்கண்முன்னேதிருச்சிற்றம்பலமுடனேபுகுந்து
வங்குணபணிபலசெய்துநாளுமருள்பெறினகலிடத்திலிருக்கலாமே. 9

அருள்பெறினகலிடத்திருக்கலாமென்றமரர்கடலைவனுமயனுமாலு
மிருவருமறிவுடையாரின்மிக்காரேத்துகின்றாரின்னமெங்கள்கூத்தை

மருள்படுமழலைமென்மொழியுமையாள்கணவனைவல்வினையாட்டியேனா
னருள்பெறவலமருநெஞ்சமாவாவாசையையளவறுத்தாரிங்காரே. 10

ஆசையையளவறுத்தாரிங்காரேயம்பலத்தருநடமாடுவானை
வாசநன்மலரணிகுழன்மடவார்வைகலுங்கலந்தெழுமாலைப்பூசன்
மாசிலாமறைபலவோதுநாவன்வண்புருடோத்தமன்கண்டுரைத்த
வாசகமலர்கள்கொண்டேத்தவல்லார்மலைமகள்கணவனையணைவர்தாமே. 11

பண்— பஞ்சமம்.

வானவர்கள்வேண்டவளர்நஞ்சையுண்டார்தா,மூனமிலாவென்கையொளிவளைகள்கொள்வாரோ
தேனல்வரிவண்டறையுந்தில்லைச்சிற்றம்பலவர், நானமரோவென்னாதேநாடகமேயாடுவரே. 1

ஆடிவருங்காரரவுமைம்மதியும்பைங்கொன்றை, சூடிவருமாகண்டேன்றோள்வளைகடோற்றலுந்
தேடியிமையோர்பரவுந்தில்லைச்சிற்றம்பலவ, ராடிவரும்போதருகேநிற்கவுமோவொட்டாரே. 2

ஒட்டாவகையவுணர்முப்புரங்களோரம்பாற், பட்டாங்கழல்விழுங்கவெய்துகந்தபண்பினார்
சிட்டார்மறையோவாத்தில்லைச்சிற்றம்பலவர், கொட்டாநடமாடிக்கோல்வளைகள்கொள்வாரே.

ஆரேயிவைபடுவாரையங்கொளவந்து, போரேடியென்றுபுருவமிடுகின்றார்
தேரார்விழவோவாத்தில்லைச்சிற்றம்பலவர், தீராநோய்செய்வாரையொக்கின்றார்காணீரே. 4

காணீரேயென்னுடையகைவளைகள்கொண்டார்தாஞ், சேணார்மணிமாடத்தில்லைச்சிற்றம்பலவர்
பூணார்வனமுலைமேற்பூவம்பாற்காமவே, ளாணாடுகின்றவாகண்டுமருளாரே. 5

ஏயிவரேவானவர்க்கும்வானவரேயென்பாராற், றாயிவரேயெல்லார்க்குந்தந்தையுமாமென்பாராற்
றேய்மதியஞ்சூடியதில்லைச்சிற்றம்பலவர், வாயினகேட்டறிவார்வையகத்தாராவாரே. 6

ஆவாவிவர்தந்திருவடிகொண்டந்தகன்றன், மூவாவுடலவியக்கொன்றுகந்தமுக்கண்ணர்
தேவாமறைபயிலுந்தில்லைச்சிற்றம்பலவர், கோவாவினவளைகள்கொள்வாரோவென்னையே 7

என்னைவலியாராரென்றவிலங்கையர்கோன், மன்னுமுடிகணெரித்தமணவாளர்
செந்நெல்விளைகழனித்தில்லைச்சிற்றம்பலவர், முன்னந்தான்கண்டறிவாரொவ்வாரிம்முத்தரே.

முத்தர்முதுபகலேவந்தென்றனில்புகுந்து, பத்தர்பலியிடுகவென்றெங்கும்பார்க்கின்றார்
சித்தர்கணம்பயிலுந்தில்லைச்சிற்றம்பலவர், கைத்தலங்கள்வீசிநின்றாடுங்கானோக்காரே. 9

நோக்காததன்மையானோக்கிலோமியாமென்று, மாற்காழியீந்துமலரோனைநிந்தித்துச்
சேக்காதலித்தேறுந்தில்லைச்சிற்றம்பலவ, ரூர்க்கேவந்தென்வளைகள்கொள்வாரோவொண்
ணுதலீர். 10

ஒண்ணுதலிகாரணமாவும்பர்தொழுதேத்துங், கண்ணுதலான்றன்னைப்புருடோத்தமன்சொன்ன
பண்ணுதலைப்பத்தும்பயின்றாடிப்பாடினா, ரெண்ணுதலைப்பட்டங்கினிதாவிருப்பாரே. 11

சேதிராயர் திருவாய்மலர்ந்தருளியது :—

பண்—பஞ்சமம்.

சேலுலாம்வயற்றில்லையுளீருமைச், சாலநாளயன்சார்வதினாலிவள்
வேலையார்விடமுண்டுகந்தீரென்று, மாலதாகுமென்வாணுதலே. 1

வாணுதற்கொடிமாலதுவாய்மிக, நாணமற்றனனானறியேனினிச்
சேணுதற்பொலிதில்லையுளீருமைக், காணிலெய்ப்பிலள்காரிகையே. 2

காரிகைக்கருளீர்கருமால்கரி, யீருரித்தெழுபோர்வையினீர்மிகு
சீரியற்றில்லையாய்சிவனேயென்று, வேரிநற்குழலாளிவள்விம்முமே. 3

விம்மிவிம்மியேவெய்துயிர்த்தாளெனு, வும்மையேநினைந்தேத்துமொன்றாகிலள்
செம்மலோர்பயிறில்லையுளீரெங்க, ளம்மலோதியயர்வுறுமே. 4

அயர்வுற்றஞ்சலிகூப்பியந்தோவெனை, யுயவுன்கொன்றையந்தாரருளாயெனுஞ்
செயலுற்றார்மதிற்றில்லையுளீரிவண், மயலுற்றாளென்றன்மாதிவளே. 5

மாதொர்கூறன்வண்டார்கொன்றைமார்பனென்,றோதிலுய்வனென்பைங்கிளியேயெனுஞ்
சேதித்தீர்சிரநான்முகனைத்தில்லை, வாதித்தீரென்மடக்கொடியையே. 6

கொடியைக்கோமளச்சாதியைக்கொம்பிளம், பிடியையென்செய்திட்டீர்பகைத்தார்புர
மிடியச்செஞ்சிலைகால்வளைத்தீரென்று, முடியுநீர்செய்தமூச்சறவே. 7

அறவனேயன்றுபன்றிப்பின்னேகிய, மறவனேயெனைவாதைசெய்யேலெனுஞ்
சிறைவண்டார்பொழிற்றில்லையுளீரெனும், பிறைகுலாநுதற்பெய்வளையே. 8

அன்றருக்கனைப்பல்லிறுத்தானையைக், கொன்றுகாலனைக்கோளிழைத்தீரெனுந்
தென்றலார்பொழிற்றில்லையுளீரிவ, ளொன்றுமாகிலளும்பொருட்டே. 9

ஏயுமாறெழிற்சேதிபர்கோன்றில்லை, நாயனாரைநயந்துரைசெய்தன
தூயவாறுரைப்பார்துறக்கத்திடை, யேயவின்பமெய்தியிருப்பரே. 10

சேந்தனாரருளிச்செய்த திருப்பல்லாண்டு:—

பண்—பஞ்சமம்.

மன்னுகதில்லைவளர்கநம்பத்தர்கள் வஞ்சகர்போயகலப்
பொன்னிற்செய்மண்டபத்துள்ளேபுகுந்து புவனியெல்லாம்விளங்க
வன்னநடைமடவாளுமைகோனடியோமுக் கருள்புரிந்து
பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தற்குப் பல்லாண்டுகூறுதுமே. 1

மிண்டுமனத்தவர்போமின்கண்மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங்கொடுத்துங்குடிகுடியீசற்காட் செய்மின்குழாம்புகுந்
தண்டங்கடந்தபொருளளவில்லதோ ரானந்தவெள்ளப்பொருள்
பண்டுமின்றுமென்றுமுள்ளபொருளென்றே பல்லாண்டுகூறுதுமே. 2

நிட்டையிலாவுடனீத்தென்னையாண்ட நிகரிலாவண்ணங்களுஞ்
சிட்டன்சிவனடியாரைச்சீராட்டுங் திறங்களுமேசிந்தித்
தட்டமூர்த்திக்கென்னகநெகவூறு மமிர்தினுக்காலநிழற்
பட்டனுக்கென்னைத்தன்பாற்படுத்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 3

சொல்லாண்டசுருதிப்பொருள்சோதித்த தூமனத்தொண்டருள்ளீர்
சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர் சிறுநெறிசேராமே
வில்லாண்டகனகத்திரண்மேருவில்விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும்பதங்கடந்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 4

புரந்தரன்மாலயன்பூசலிட்டோலமிட் டின்னம்புகலரிதா
யிரந்திரந்தழைப்பவென்னுயிராண்டகோவினுக் கென்செயவல்லமென்றுங்
கரந்துங்கரவாதகற்பகனாகிக் கரையில்கருணைக்கடல்
பரந்துநிரந்தும்வரம்பிலாப்பாங்கற்கே பல்லாண்டுகூறுதுமே. 5

சேவிக்கவந்தயனிந்திரன்செங்கண்மா லெங்குந்திசைதிசையன
கூவிக்கவர்ந்துநெருங்கிக்குழாங்குழா மாய்நின்றுகூத்தாடு
மாவிக்கமுதையென்னார்வத்தனத்தினை யப்பனையொப்பமரர்
பாவிக்கும்பாவகத்தப்புறத்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 6

சீருந்திருவும்பொலியச்சிவலோக நாயகன்சேவடிக்கீ
ழாரும்பெறாதவறிவுபெற்றேன் பெற்றதார்பெறுவாருலகி
லூருமுலகுங்கழறவுழறி யுமைமணவாளனுக்காட்
பாரும்விசும்புமறியும்பரிசுநாம் பல்லாண்டுகூறுதுமே. 7

சேலுங்கயலுந்திளைக்குங்கண்ணாரிளங் கொங்கையிற்செங்குங்குமம்
போலும்பொடியணிமார்பிலங்குமென்று புண்ணியர்போற்றிசைப்ப
மாலுமயனுமறியாநெறிதந்து வந்தென்மனத்தகத்தே
பாலுமமுதமுமொத்துநின்றானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 8

பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன் மன்னியதில்லைதன்னு
ளாலிக்குமந்தனர்வாழ்கின்றசிற்றம் பலமேயிடமாகப்
பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 9

தாதையைத்தாளறவீசியசண்டிக்கு மண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும்வணங்கப்பொற்கோயிலும் போனகமுமருளிச்
சோதிமணீமுடித்தாமமுநாமமுந் தொண்டர்க்குநாயகமும்
பாதகத்துக்குப்பரிசுவைத்தானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 10

குழலொலியாழொலிகூத்தொலியேத்தொலியெங்குங்குழாம்பெருகி
விழவொலிவிண்ணளவுஞ்சென்றுவிம்மி மிகுதிருவாரூரின்
மழவிடையாற்குவழிவழியாளாய்மணஞ்செய்குடிப்பிறந்த
பழவடியாரொடுங்கூடியெம்மானுக்கே பல்லாண்டுகூறுதுமே. 11

ஆரார்வந்தாரமர்குழாத்தி லணியுடையாதிரைநா
ணாராயணனொடுநான்முகனங்கி யிரவியுமிந்திரனுந்
தேரார்வீதியிற்றேவர்குழாங்க டிசையனைத்துநிறைந்து
பாரார்தொல்புகழ்பாடியுமாடியும் பல்லாண்டுகூறுதுமே. 12

எந்தையெந்தாய்சுற்றமுற்று மெமக்கமுதாமெம்பிரானென்றென்று
சிந்தைசெயுஞ்சிவன்சீரடியாரடிநாய் செப்புறை
யந்தமிலானந்தச்சேந்தனெனைப்புகுந் தாண்டுகொண்டாருயிர்மேற்
பந்தம்பிரியப்பரிந்தவனேயென்று பல்லாண்டுகூறுதுமே. 13

பெரியபுராணம்.

ஆதியாய்நடுவுமாகியளவிலாவளவுமாகிச்
சோதியாயுணர்வுமாகித்தோன்றியபொருளுமாகிப்
பேதியாவேகமாகிப்பெண்ணுமாயாணுமாகிப்
போதியாநிற்குந்தில்லைப்பொதுநடம்போற்றிபோற்றி. 3



கோவிந்தராஜப்பெருமாள்.

சித்திரகூடம்.

'சித்திரகூடம்' எனப் பெயர் வாய்ந்துள்ள கோவிந்தராஜப்பெருமாள் சந்நிதி ஸ்ரீ நடராஜர்கோவிலுக்குள் சித்ஸபையின்ஸமீபத்தில் தென்மேற்கிலுள்ளது. இப்பெருமாள் சந்நிதி வைஷ்ணவ நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. ஆழ்வார்களில் குலசேகராழ்வார், திருமங்கை ஆழ்வார், பெரியாழ்வார் மூவர்களும் இப்பெருமாளைத் தங்கள் பிரபந்தங்களில் பாடியிருக்கிறார்கள்.

விசேஷமாய் குலசேகராழ்வார் இந்த கோவிந்தராஜனைப் பற்றிப்புகழ்ந்து பாடியிருப்பதில் அயோத்தியைச் சிறப்பித்த ஸ்ரீ ராமனைப்பாடியிருக்கிறார். ஆனது பற்றியே இவ்விடத்தை தென் சித்ரகூடமென்று தெரிவித்திருக்கிறார். மேலும் அவரது காலத்தில் தில்லை மூவாயிரர்களென வழங்கும் தீக்ஷிதர்களே இந்தப்பெருமாளையும் பூஜை செய்ததாக ஏற்படுகிறது. பெரியாழ்வாரும் ஸ்ரீராமனைப் பாடியிருக்கிறார். ஆனால் திருமங்கையார் பல்லவ ராஜாக்கள் கோயிலை புதுப்பித்ததாகவும் ஆதிசேஷன் பேரில் சயனித்திருப்பதாகவும் பாடியிருப்பதிலிருந்து பிந்தியவராகிய இவர் காலத்தில் ஸ்ரீராமராக பூஜிக்கப்பட்டது ஒரு ஸமயம் யாது காரணம்பற்றியோ எடுபட்டுப் பிந்தி பள்ளிகொண்ட பெருமாளைப் பிரதிஷ்டை செய்திருக்கலாமென்று தெரியவருகிறது. ஆனாலும் இவர் காலத்திலும் கூட தீக்ஷிதர்களே பெருமாளை பூஜை செய்ததாகத் தெரியவருகிறது.

சிலாசாஸனம்.

நடராஜர் கோவில் முதல் பிராகாரக் கிழக்குச்சுவற்றில் வாயிலின் இடது பக்கத்தில் மஹா மண்டலேசுவர ஸ்ரீரங்காரயர் என்ற விஜயநகர அரசர் திருச்சித்திரகூடத்தில்

தில்லை கோவிந்தராஜஸ்வாமி கோவிலுக் கெதிராகவுள்ள பெரிய மண்டபத்தைப் பழுது பார்த்த விஷயமும், புண்டரீகவல்லி நாச்சியார், சூடிக்கொடுத்தநாச்சியார் இவர்களது விமானங்களையும் திருவாலி ஆழ்வார் ஸந்நிதானத்திலுள்ள மண்டபத்தையும் பழுது பார்த்த விஷயமும் கூறப்பட்டுள்ளன.

மேற் கூறிய பிராகாரத்தின் தென் சுவற்றில் வைகானஸ ஸூத்ர ஸம்ஸ்கார விதிப்படி பெரும் பெற்றப் புலியூர் என்னுமிடத்தில் தில்லை கோவிந்தராஜப் பெருமானை ஸ்தாபனம் செய்ய உத்திரவு அளித்த விஷயம் கூறப்பட்டுள்ளது.

வித்யாலயங்கள்.

இச்சிதம்பரக்ஷேத்ரத்தில் ஆதியில் பாணினிமஹரிஷி 'அஷ்டாத்யாயி' என்ற வியாகரணத்தை வெளியிட்டார். பதஞ்ஜலி மஹரிஷி மஹாபாஷ்யத்தையும் யோகஸூத்ரத்தையும் வைத்ய சாஸ்திரத்தையும் வெளியிட்டார்.

"தேவார" மூலப்பிரதிகள் ஸ்ரீநடராஜர் கோயில் இரண்டாம் பிராகார வடமேற்கு மூலையிலிருந்து நம்பியாண்டார் நம்பியால் வெளிப்படுத்தப்பட்டன. 'பெரியபுராணம்' எனப்படும் அறுபத்துமூன்று நாயன்மார்களது சரித்திரம் சேக்கிழாரெனப்படும் சோழ ராஜாவின் மந்திரியாகிய பெரியாரால் இவ்விடம் கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் ஒரு வருஷகாலத்தில் எழுதப்பட்டு ஸ்ரீநடராஜர் சந்நிதியில் அரங்கேற்றப்பட்டது. தீக்ஷிதர்களில் ஒருவராகிய உமாபதிசிவாசாரியாரால் சைவமத சித்தாந்த நூல்கள் வெளியிடப்பட்டன. கவிசக்ரவர்த்தியெனப்படும் கம்பர் தமது இராமாயணகாவ்யத்தை இவ்விடத்தில் அரங்கேற்றினர்.

காஞ்சீபுரம் பச்சையப்பமுதலியார் இவ்விடத்தில் ஒரு ஆங்கிலகலாசாலையை ஏற்படுத்தியுளர். ராமசுவாமிசெட்டியார் இதேமாதிரி ஹைஸ்கூலையும் ஸ்தாபித்துளர். கனம் ஸர் அண்ணாமலைசெட்டியார் அவர்கள் மீனாக்ஷிகாலேஜ் என்னும் ஆங்கில உயர்தர கலாசாலை, ஸம்ஸ்கிருத சிரோமணி கலாசாலை, தமிழ்வித்வான் கலாசாலை, உபாத்தியாய கலாசாலைகள் இவைகளை சமீபத்தில் ஸ்தாபித்து இவைகளெல்லாம் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டுவருகின்றன.

கோவிந்தராஜப் பெருமாள்கோவில்.

இவைகள் நீங்கலாக வேதபாடசாலையும் நாவலர் தமிழ் கலாசாலையும் இருந்துவருகின்றன. ஆகையால் இவ்வூரில் சிறுவர்களுக்கு எல்லாவிதமான கலாசாலைகளும் அவரவர்களது நோக்கத்திற்கேற்றவாறு அப்யஸித்துவர இடமிருப்பது ஒரு பெரிய விசேஷம்.

குலசேகராழ்வாரருளிச்செய்த பெருமாள்திருமொழி—10 வது திருமொழி:—

¶ அங்கணெடுமதிள்புடைசூழயோத்தியென்னும் அணிநகரத்துலகனைத்தும்விளக்குஞ்சோதி
வெங்கதிரோன்குலத்துக்கோர்விளக்காய்த்தோன்றி விண்முழுதுமுயக்கொண்டவீரன்தன்னை
செங்கணெடுங்கருமுகிலையிராமன்தன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
எங்கள்தனிமுதல்வனையெம்பெருமான்றன்னை என்றுகொலோ கண்குளிரக்காணும்நாளே. 1

வந்தெதிர்ந்ததாடகைதனுரத்தைக்கீறி வருகுருதிபொழிதரவன்கணையொன்றேவி
மந்திரங்கொள்மறைமுனிவன்வேள்விகாத்து வல்லரக்கருயிருண்டமைந்தன்காண்மின்
செந்தளிர்வாய்மலர்நகைசேர்செழுந்தண்சோலைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
அந்தணர்களொருமூவாயிரவரேத்த அணிமணியாசனத்திருந்தஅம்மான்தானே. 2

செவ்வரிநற்கருநெடுங்கண்சீதைக்காகிச் சினவிடையோன்சிலையிறுத்துமழுவாளேந்தி
வெவ்வரிநற்சிலைவாங்கிவென்றிகொண்டு வேல்வேந்தர்பகைதடிந்தவீரன்தன்னை
தெவ்வரஞ்சுநெடும்புரிசையுயர்ந்தபாங்கர்த் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
எவ்வரிவெஞ்சிலைத்தடக்கையிராமன்தன்னை இறைஞ்சுவாரிணையடியேயிறைஞ்சினேனே. 3

தொத்தலர்பூஞ்சுரிகுழற்கைகேசிசொல்லால் தொன்னகரந்துறந்து * துறைக்கங்கைதன்னைப்
பத்தியுடைக்குகன்கடத்தவனம்போய்ப்புக்குப் பரதனுக்குப்பாதுகமுமரசுமீந்து
சித்திரகூடத்திருந்தான்தன்னை இன்று தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
எத்தனையும்கண்குளிரக்காணப்பெற்ற இருநிலத்தார்க்கு இமையவர்நேரொவ்வார்தாமே. 4

வலிவணக்குவரைநெடுந்தோள்விராதைக்கொன்று வண்தமிழ்மாமுனிகொடுத்தவரிவில்வாங்கி
கலைவணக்குநோக்கரக்கிமூக்கைநீக்கிக் கரனோடுதூடணன்தனுயிரைவாங்கி
சிலைவணக்கிமான்மறியவெய்தான்தன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
தலைவணக்கிக்கைகூப்பியேத்தவல்லார் திரிதலால் தவமுடைத்துத்தரணிதானே. 5

தனமருவுவைதேகிபிரியலுற்றுத் தளர்வெய்திச்சடாயுவைவைகுந்தத்தேற்றி
வனமருவுகவியரசன்காதல்கொண்டு வாலியைக்கொன்றிலங்கைநகரரக்கர்கோமான்
சினமடங்கமாருதியாற்சுடுவித்தானைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
இனிதமர்ந்தவம்மானையிராமன்தன்னை ஏத்துவாரிணையடியேயேத்தினேனெ. 6

குரைகடலையடலம்பால்மறுகவெய்து குலைகட்டிமறுகரையையதனாலேறி
எரிநெடுவேலரக்கரொடுமிலங்கைவேந்தன் இன்னுயிர்கொண்டவன்தம்பிக்கரசுமீந்து
திருமகளோடினிதமர்ந்தசெல்வன்தன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
அரசமர்ந்தானடிசூடுமரசையல்லால் அரசுஆகவெண்ணேன்மற்றரசுதானே. 7

அம்பொனெடுமணிமாடவயோத்தியெய்தி அரசெய்தி அகத்தியன்வாய்த்தான்முன்கொன்றான்
தன் * பெருந்தொல்கதைகேட்டுமிதிலைச்செல்வி உலகுய்யத்திருவயிறுவாய்த்தமக்கள்
செம்பவளத்திரள்வாய்த்தன்சரிதைகேட்டான் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
எம்பெருமான்தன்சரிதைசெவியால்கண்ணால் பருகுவோம் இன்னமுதம் மதியோமன்றே. 8

செறிதவச்சம்புகன்றன்னைச்சென்றுகொன்று செழுமறையோனுயிர்மீட்டு * தவத்தோனீந்த
நிறைமணிப்பூணணியுங்கொண்டுஇலவணன்தன்னைத் தம்பியால்வானேற்றிமுனிவன்வேண்ட
திறல்விளங்குமிலக்குமனைப்பிரிந்தான்றன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
உறைவானை * மறவாதவுள்ளந்தன்னை யுடையோம் மற்றுறுதுயரமடையோமன்றே. 9

¶ அன்றுசராசரங்களைவைகுந்தத்தேற்றி அடலரவப்பகையேறியசுரர்தம்மை
வென்று * இலங்குமணிநெடுந்தோள்நான்கும்தோன்ற விண்முழுதுமெதிர்வரத்தன்தாமமேவி

சென்றினிதுவீற்றிருந்தஅம்மான்றன்னைத் தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
என்றும்நின்றானவனிவனென்றேத்தி நாளு மிறைஞ்சுமினோஎப்பொழுதும்தொண்டீர் நீரே. 10

¶ தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் திறல்விளங்குமாருதியோடமர்ந்தான்தன்னை
எல்லையில்சீர்த்தயரதன்தன்மகனாய்த்தோன்றிற்று அதுமுதலாத் தன்னுலகம்புக்கதீறு
கொல்லியலும்படைத்தானைக்கொற்றவொள்வாள் கோழியர்கோன்குடைக்குலசேகரன்சொற்
செய்த
நல்லியலின்தமிழ்மாலைபத்தும்வல்லார் நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே. 11

திருமங்கையாழ்வாரருளிச்செய்த பெரியதிருமொழி:—

¶ ஊன்வாடவுண்ணாதுயிர்காவலிட்டு உடலிற்பிரியாப்புலனைந்தும்நொந்து
தாம்வாடவாடத்தவஞ்செய்யவேண்டா தமதாவிமையோருளகாலகிற்பீர்!
கானாடமஞ்ஞைக்கணமாட மாடே கயலாடுகானீர்ப்பழனம்புடைபோய்
தேனாடமாடக்கொடியாடு தில்லைத் திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 3-2-1

காயோடுநீடுகனியுண்டு வீசு கடுங்கால்நுகர்ந்து, நெடுங்காலம் * ஐந்து
தீயோடுநின்றுதவஞ்செய்யவேண்டா திருமார்பனைச்சிந்தையுள்வைத்துமென்பீர்!
வாயோதுவேதம்மலிகின்றதொல்சீர் மறையாளர்நாளும் முறையால்வளர்த்த
தீயோங்கவோங்கப்புகழோங்கு தில்லைத்திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 2

வெம்புஞ்சினத்துப்புனக்கேழலொன்றாய் விரிநீர்முதுவெள்ளமுள்புக்கழுந்த
வம்புண்பொழில்சூழுலகன்றெடுத்தான் அடிப்போதணைவான்விருப்போடிருப்பீர்!
பைம்பொன்னுமுத்தும்மணியுங்கொணர்ந்து படைமன்னவன்பல்லவர்கோன்பணிந்த
செம்பொன்மணிமாடங்கள்சூழ்ந்த தில்லைத் திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 3

அருமாநிலமன்றளப்பான்குறளாய்அவுணன்பெருவேள்வியிற்சென்றிரந்த
பெருமான்திருநாமம்பிதற்றி நுந்தம் பிறவித்துயர்நீங்குதுமென்னகிற்பீர்
கருமாகடலுட்கிடந்தானுவந்து கவைநாவரவினணைப்பள்ளியின்மேற்
திருமால்திருமங்கையோடாடு தில்லைத்திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 4

கோமங்கவங்கக்கடல்வையமுய்யக் குலமன்னரங்கம்மழுவில்துணிய
தாமங்கமருட்படைதொட்ட வென்றித் தவமாமுனியைத்தமக்காக்ககிற்பீர்!
பூமங்கைதங்கிப்புலமங்கைமன்னிப் புகழ்மங்கையெங்கும்திகழ * புகழ்சேர்
சேமங்கொள்பைம்பூம்பொழில்சூழ்ந்த தில்லைத் திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 5

நெய்வாயழலம்புதுரந்து முந்நீர் துணியப்பணிகொண்டுஅணியார்ந்து * இலங்கு
மையார்மணிவண்ணனையெண்ணி நுந்தம் மனத்தேயிருத்தும்படிவாழவல்லீர்!
அவ்வாயிளமங்கையர்பேசவுந்தான் அருமாமறையந்தணர்சிந்தைபுக
செவ்வாய்க்கிளிநான்மறைபாடு தில்லைத்திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 6

மௌவற்குழலாய்ச்சிமென்தோள்நயந்து மகரஞ்சுழலச்சுழல்நீர்பயந்த
தெய்வத்திருமாமலர்மங்கைதங்கு திருமார்பனைச்சிந்தையுள்வைத்துமென்பீர்
கௌவைக்களிற்றின்மருப்பும் பொருப்பிற் கமழ்சந்தும்உந்திநிவாவலங்கொள்
தெய்வப்புனல்சூழ்ந்தழகாயதில்லைத்திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 7

மாவாயினங்கம்மதியாதுகீறி மழைமாமுதுகுன்றெடுத்து * ஆயர்தங்கள்
கோவாய்நிரைமேய்த்து உலகுண்டமாயன் குரைமாகழல்கூடுங்குறிப்புடையீர்!

மூவாயிரநான்மறையாளர் நாளும் முறையால்வணங்க அணங்காயசோதி
தேவாதிதேவன்திகழ்கின்ற தில்லைத் திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 8

செருநீலவேற்கண்மடவார்திறத்துச் சினத்தோடுநின்றுமனத்தால்வளர்க்கும்
அருநீலபாவமகலப் புகழ்சேர் அமரர்க்குமெய்தாதவண்டத்திருப்பீர்!
பெருநீர்நிவாவுந்தி முத்தங்கொணர்ந்து எங்கும்வித்தும்வயலுள்கயல்பாய்ந்துகள
திருநீலம்நின்றுதிகழ்கின்ற தில்லைத் திருச்சித்ரகூடஞ்சென்றுசேர்மின்களே. 9

¶ சீரார்பொழில்சூழ்ந்துஅழகாய தில்லைத் திருச்சித்ரகூடத்துறைசெங்கண்மாலுக்கு
ஆராதவுள்ளத்தவர்கேட்டுஉவப்ப அலைநீருலகுக்கருளேபுரியும்
காரார்புயற்கைக்கலிகன்றி குன்றாவொலிமாலை ஓரொன்பதோடொன்றும்வல்லார்
பாராருலகமளந்தானடிக்கீழ்ப் பலகாலம்நிற்கும்படிவாழ்வர்தாமே. 10

¶ வடமருதிடைபோகி மல்லரைக்கொன்றொக்கலித்திட்டு
ஆடல்நன்மாவுடைத்து ஆயராநிரைக்கன்றிடர்தீர்ப்பான்
கூடியமாமழைகாத்த கூத்தனெனவருகின்றான்
சேடுயர்பூம்பொழில்தில்லைச் சித்திரகூடத்துள்ளானே 3-3-1

பேய்மகள்கொங்கைநஞ்சுண்ட பிள்ளைபரிசிதுவென்றால்
மாநிலமாமகள்மாதர்கேள்வனிவனென்றும் * வண்டுண்
பூமகள்நாயகனென்றும் புலங்கழுகோவியர்பாடி
தேமலர்தூவவருவான் சித்திரகூடத்துள்ளானே. 2

பண்டிவன்வெண்ணெயுண்டானென்று ஆய்ச்சியர்கூடியிழிப்ப
எண்திசையோரும்வணங்க இணைமருதூடுநடந்திட்டு
அண்டரும்வானத்தவரும் ஆயிரநாமங்களோடு
திண்திறல்பாடவருவான் சித்திரகூடத்துள்ளானே. 3

வளைக்கைநெடுங்கண்மடவார் ஆய்ச்சியரஞ்சியழைப்ப
தளைத்தவிழ்தாமரைப்பொய்கைத் தண்தடம்புக்கண்டர்காண
முளைத்தவெயிற்றழல்நாகத்து உச்சியில்நின்று அதுவாட
திளைத்தமர்செய்துவருவான் சித்திரகூடத்துள்ளானே. 4

பருவக்கருமுகிலொத்து முத்துடைமாகடலொத்து
அருவித்திரள்திகழ்கின்ற ஆயிரம்பொன்மலையொத்து
உருவக்கருங்குழலாய்ச்சிதிறத்து இனமால்விடைசெற்று
தெருவில்திளைத்துவருவான் சித்திரகூடத்துள்ளானே. 5

¶ எய்யச்சிதைந்ததிலங்கைமலங்க வருமழைகாப்பான்
உய்யப்பருவரைதாங்கி ஆநிரைகாத்தானென்றேத்தி
வையத்தெவரும்வணங்க அணங்கெழுமாமலைபோலே
தெய்வப்புள்ளேறிவருவான் சித்திரகூடத்துள்ளானே. 6

ஆவர் இவைசெய்தறிவார் அஞ்சனமாமலைபோலே
மேவுசினத்தடல்வேழம் வீழமுனிந்து * அழகாய
காவிமலர்நெடுங்கண்ணார் கைதொழவீதிவருவான்
தேவர்வணங்குதண்தில்லைச் சித்திரகூடத்துள்ளானே. 7

பொங்கியமரிலொருகால்பொன்பெயரோனைவெருவ
அங்கவனாகமளைந்திட்டு ஆயிரம்தோளெழுந்தாட
பைங்கணிரண்டெரிகான்ற நீண்டவயிற்றொடுபேழ்வாய்
சிங்கவுருவின்வருவான் சித்திரகூடத்துள்ளானே. 8

கருமுகில்போல்வதோர்மேனி கையனவாழியுஞ்சங்கும்
பெருவிறல்வானவர்சூழ எழுலகுந்தொழுதேத்த
ஒருமகளாயர்மடந்தை யொருத்திநிலமகள் * மற்றைத்
திருமகளோடும்வருவான் சித்திரகூடத்துள்ளானே. 9

¶ தேனமர்பூம்பொழில் தில்லைச்சித்திரகூடமமர்ந்த
வானவர்தங்கள்பிரானை மங்கையர்கோன்மருவார்
ஊனமர்வேர்கலிகன்றி ஒன் தமிழொன்பதோடொன்றும்
தானிவைகற்றுவல்லார்மேல் சாராதீவினைதானே. 10

பெரியாழ்வாரருளிச்செய்த திருமொழி :—

பொற்றிகழ் சித்திரகூடப்பொருப்பினில்
உற்றவடிவில் ஒருகண்ணும்கொண்ட * அக்
கற்றைக்குழலன் கடியன்விரைந்து உன்னை
மற்றைக்கண்கொள்ளாமேகோல்கொண்டுவா
மணிவண்ணநம்பிக்கோர்கோல்கொண்டுவா. 2-6-7

சித்திரகூடத்திருப்பச் சிறுகாக்கைமுலைதீண்ட
அத்திரமேகொண்டெறிய அனைத்துலகும்திரிந்தோடி
வித்தகனே ! இராமா ! ஒ ! நின்னபயம்என்றழைப்ப
அத்திரமேயதன்கண்ணை அறுத்ததுமோரடையாளம். 3-10-6

சில அபிப்ராயங்கள்.

தென்னாட்டிலுள்ள திவ்ய க்ஷேத்திரங்களைப்பற்றிச் சென்னை சிலாசாஸன இலாகா உத்தியோகஸ்தரான ஸ்ரீமான் பி. வி. ஜகதீச ஐயர் ஆங்கிலத்தில் ஓர் சிறந்த நூல் எழுதியிருக்கிறார். தென்னாட்டு திவ்யக்ஷேத்திரங்களின் வரலாறுகளையும் விவரங்களையும் தமிழிலும் பல பத்திரிகைகளின் வாயிலாக வெளியிட்டு அரியதோர் சமயத்தொண்டு செய்திருக்கிறார். ஸ்ரீமான் ஐயர் ஸ்ரீரங்கத்தை பற்றி எழுதிய வரலாற்றைத் "தென்னாட்டு க்ஷேத்ரங்கள்" என்ற தொகுதியில் முதல் இலக்கமாக ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீ வாணீ விலாஸ ஸிண்டிகேட்டார் வெளியிட்டிருக்கிறார்கள். தென் இந்திய க்ஷேத்திரங்கள் அனைத்தையும் இருபத்திநாலு சஞ்சிகைகளாக அவர்கள் வெளியிடப்போகிறார்கள். வைஷ்ணவர்களின் சிறந்த ஸ்தலமான ஸ்ரீரங்கத்தைப் பற்றிய இந்த சஞ்சிகையில் ஸ்ரீரங்கத்தைப் பற்றிய வரலாறு முழுமையும் வெளியாயிருக்கிறது. ஸ்ரீரங்கநாதர் படமும் ஸ்ரீரங்கம் திருக்கோயிலின் பல படங்களும் உள்பட இதில் இருபத்தைந்து படங்கள் உள்ளன. ஸ்ரீரங்கத்தைப் பற்றிய பதினொரு ஆழ்வார்கள் பாடிய 239 பாடல்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மிகவும் உயர்ந்த காகிதம். நேர்த்தியான பதிப்பு. ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸ அச்சுக்கூடத்தாரின் வேலை தமிழ் நாட்டிலே பேர்பெற்றதென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. ஸ்ரீரங்கம் தனிப்புத்தகத்தின் விலை அணா 10 வி. பி. வாயிலாக அணா 14. இருபத்திநாலு சஞ்சிகைகள் ரூ. 12. தபால் செலவு 2-8-0. இதனை இரண்டு முறையாகக் கொடுக்கலாம்.

திக்கெலாம் புகழும் தென்னாட்டுக்கோயில்களின் சரித்திரமும் திருவுருவப்படங்களும், புத்தகரூபமாக வெளிவருவது தமிழ்நாட்டாருக்கு நல்லகாலமென்று சொல்வோம். ஸ்ரீமான் ஜகதீசய்யர் தென்னாட்டுக் கோயில்களைப் பற்றிய அநேக விஷயங்களைத் தமது அரிய ஆராய்ச்சியால் இதில் விளக்கியிருக்கிறார். இதனை ஸ்ரீ வாணீ விலாஸ அச்சுக்கூடத்தார் அச்சிட முன்வந்ததும் தமிழ்மக்கள் பாக்கியமென்றே சொல்வோம். இரண்டாவது வெளியீடாக "சிதம்பரம்" என்ற தில்லையின் சரித்திரம் படங்களுடன் வெளிவரும். இந்தப் பெரிய முயற்சியைத் தமிழ்மக்கள் ஆதரிக்கவேண்டுமென்று நாம் சொல்லவும் வேண்டுமா?

—லோகோபகாரி.

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,

ஸ்ரீரங்கம்.